www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 10/00
දිනමුරසු වාරමලර්
பெப்.19-25,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 90




கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## ஒரு நாடு இரு தேசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
திறந்த சந்தைப் பொருளாதாரத்திற்கு
சோசலிச வர்ணம் பூசி
'இடதுசாரிகள்' என்று
தம்மை எடுத்துக்காட்டிக்கொண்டிருந்தவர்களுக்கு
பலத்த அடி கொடுத்திருக்கிறார்
பதில் நிதியமைச்சர்.

"முதலாளித்துவமா-சோசலிசமா
சிறந்தது என்று விவாதிப்பது
பயனற்றது;"
"புதிய உலகை வர்ணம்
பூசிய கண்ணாடிகள் வழியாக
பார்க்காமல் விடவேண்டும்"
இவை இரண்டும்
பதில் நிதியமைச்சர் தனது
'பட்ஜெட்' உரையில்
பகிரங்கமாக கூறியுள்ள கருத்துக்கள்.

போலித்தனமான கோஷங்களால்
உண்மை நிலவரத்திற்கு
போர்வை மாட்டாமல்
உள்ளதை உள்ளபடி கூறியிருக்கிறார்.

திறந்த பொருளாதாரத்தை
விமர்சித்தவர்களும்,
சோசலிச சிந்தனையுள்ள அரசையே
ஆதரிப்போம் என்று பேசியோரும்
இனி என்ன செய்யப்போகிறார்கள்?
வர்ணம் பூசிய தமது கண்ணாடிகளை
ஒளித்துவைத்துவிட்டு
ஒத்துப் போவதுதான் ஒரே வழியோ?

பருப்பு, கருவாடு, டின்மீன்
மற்றும் தானியங்கள் மீதான
விற்பனை வரி நீக்கப்பட்டமை
சாதாரண மக்களது சுமையை
சற்றுக் குறைக்கச் செய்யும்.

டீசல் விலை உயர்வு
ஒரு ரூபாவால் மட்டுமே
அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால்
இந்த அதிகரிப்பு
விநியோகத்துறையில் பிரதிபலித்தால்
சுமை மக்களைத் தாக்கும்.
போக்குவரத்து கட்டணங்கள்
உயராமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

தனியார் துறை ஊழியர்களையும்
தட்டிக்கொடுத்திருக்கிறார்
பதில் நிதியமைச்சர்.

அதே சமயம் உள்ளூர்
தபால் கட்டண உயர்வு
சகல தரப்பினரையும் பாதிக்கும் ஒன்று.

வேலைவாய்ப்பின்மை
மற்றும் பொருளாதார நெருக்கடிகள்
தொடர்பாக தீர்வுகளைக்காண
இரண்டு வருட அவகாசம்
கேட்டிருக்கிறார் பதில் நிதியமைச்சர்.

யுத்தம் நிகழ்ச்சி நிரலில் இருந்து
முற்றாக தூக்கியெறியப்படுவதைப்
பொறுத்தே-
இரண்டு வருடத்தின் பின்னர்
அரசு எதிர்பார்க்கும் மாற்றங்கள்
சாத்தியமாகும் என்பது உண்மை.

யுத்தம் ஏற்பட்டமைக்கு
சென்ற அரசின் மீது மட்டும்
'பட்ஜெட்' உரையில் குற்றம்
சாட்டியிருப்பதை
முற்றிலும் சரி எனக் கூறமுடியாது.

இவ்வாறான கூற்றுக்கள்
இனப்பிரச்சனையின் இன்றைய
தீவிரத்தன்மைக்கான காரணத்தை
எளிமைப்படுத்தி விடுகின்றன.

எனினும், யுத்தத்தை நிறுத்தல்
என்பதில் புதிய அரசு
தனது விருப்பத்தை
சகல சந்தர்ப்பங்களிலும்
வெளிப்படுத்துவதை வரவேற்கலாம்.

'ஒரே தேசமாக'
நாம் மாறவேண்டும் என்று
வரவு செலவு திட்ட உரையின்
தொடக்கத்தில் பதில் நிதியமைச்சர்
எடுத்துச் சொல்லியுள்ளார்.

ஒற்றையாட்சிக் கோட்பாட்டை
கருத்தில் கொண்டுதான் அப்படிக்
கூறியிருக்கிறாரோ என்று
நினைக்க வேண்டியிருக்கிறது.

அரசியல் அகராதிப்படி
நாடு என்பதும் தேசம் என்பதும்
வெவ்வேறு கருத்துக்கொண்டவை.

ஒரு நாட்டில்,
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட
தேசங்கள் இருக்கலாம்.
ஒரு தேசமே
ஒரு நாடாகவும் இருக்கலாம்.
இரண்டு தேசங்கள்
கூட்டாட்சி அடிப்படையில்
ஐக்கியமாக இருக்கலாம்.
'தன்னாட்சியுடைய சமஷ்டி'
திட்டத்தை பரிசீலிப்போம்
என்று புலிகள் கூறுகிறார்கள்.
வடக்கு-கிழக்கு
தமிழ் பேசும் மக்களது தாயகம்-
ஒரு தேசம்
என்பதை புலிகள் உறுதியாக
வலியுறுத்தி வருகிறார்கள்.

வடக்கு-கிழக்கு
இரண்டாக பிரியுமானால்.
'ஒரு தேசம்' என்ற நிலையை
இழக்கவேண்டி ஏற்படும்.

புலிகள் மட்டுமல்ல-ஏனைய
தமிழ் அமைப்புக்களும் அதனை
ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

எனவே-தற்போதைய சூழலை உணர்ந்து
அரசின் தீர்வு முயற்சிகள்
அமைய வேண்டும் என்பதே
அனைவரதும் அவா!
அதுவே நிரந்தர சமாதானத்திற்கும்
உரிய வழி □□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## பாவத்திற்காக மனம் வருந்துங்கள்!

தவறு செய்வது மனித இயல்பு. ஆனால் தவறு என்று தெரிந்தபின் அதற்காக மனம் வருந்த வேண்டும். அது போலதான் பாவம் செய்வதும் மனித இயல்பு. அந்தப் பாவத்திலிருந்து மனிதன் மனம் திருந்த வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம்.

இயேசு கிறிஸ்து ஜெரிக்கோ என்ற இடத்தில் போதித்துக் கொண்டு போகிறார். அவரைப் பார்ப்பதற்கு சகேயு என்ற மனிதனுக்கு ஆசை. அவன் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்ததனால் அவரைப் பார்த்துவிட வேண்டும் என்று அவனது உள்ளம் துடிக்கிறது. அவன் குள்ளமாய் இருந்ததனால் இயேசுவைப் பார்க்க இயலவில்லை. உடனே அவன் ஒரு உயரமான மரத்தில் ஏறி இயேசுவைப் பார்க்க எண்ணினான். இயேசு மரத்தின் அருகே வந்து அண்ணாந்து பார்த்து, "சகேயுவே சீக்கிரம் இறங்கிவா. இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்." என்றார் அவனுக்கு ஆச்சரியம்- சந்தோசம். ஆனால் இயேசுவோடு வந்தவர்களோ,"சகேயு பாவியாயிற்றே இவேனாடு தங்குவதா? என முணுமுணுத்தனர்.

சகேயுவோ, இயேசு தன்மீது கொண்ட அன்பை எண்ணி தான் பாவியாக இருந்தாலும், இயேசு தன்மீது கொண்ட நேசத்தை எண்ணி மனம்வருந்தி, "ஆண்டவரே என் சொத்துக்களில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாவது அநியாயமாக வாங்கியிருந்தால் நான்கு மடங்குகளாக திருப்பிச் செலுத்துகிறேன்," என்றான். இயேசு, "இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது" என்று அவனை ஆசீர்வதித்தார். ஆம், பாவத்திலிருந்து விலக நாம் மனம் வருந்தும்போது இறைவன் நமது இல்லங்களில் மட்டுமல்ல, உள்ளங்களிலும் பிரவேசித்து இரட்சிப்பு வழங்குவார்.

ஜி.டானியல்-நீர்கொழும்பு

# ஆன்மீகம்



## புனித ரமழானின் சிறப்புகள்

ஹஸ்ரத் ஸல்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ரஸூலுல்லாஹ்" ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஷஃபான் மாதத்தின் இறுதியில் எங்களுக்கு ஒரு உபதேசம் செய்தார்கள்.

"மனிதர்களே! உங்களுக்கு ஒரு மகத்தான மாதம் வந்திருக்கிறது.

அது பரக்கத்து செய்யப்பட்ட ஒரு மாதமாகும். அதில் லைலதுல் கத்ர்" என்ற ஓர் இரவு இருக்கிறது. அது ஆயிரம் மாதங்களைவிட சிறந்த இரவாகும். அதில் நோன்பு நோற்பதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். அதனுடைய இரவு நேரத்தில் நின்று (தராவீஹ்) தொழுவதை நன்னமைக்குரிய செயலாக ஆக்கியுள்ளான். எந்த மனிதர் இம் மாதத்தில் ஒரு நற்செயலைச் செய்து அல்லாஹ்விடம் நெருக்கத்தை உண்டாக்கிக் கொள்கின்றாரோ..அவர் ரமழான் அல்லாத மற்ற மாதத்தில் ஒரு பர்லை நிறைவேற்றியவர் போலாவார். இம்மாதத்தில் ஏதேனும் ஒரு பர்லை நிறைவேற்றுபவர் ரமழான் அல்லாத மற்ற மாதங்களில் எழுபது பர்லுகளை நறைவேற்றியவராவார். மேலும் இம்மாதம் பொறுமையின் மாதமாகும். பொறுமையின் பிரதிபலன் சொர்க்கமாகும். இம்மாதத்தின் முதற்பகுதி அல்லாஹ்வுடைய ரஹ்மத்தாகவும் நடுப்பகுதி பாவமன்னிப்பாகவும் இறுதிப்பகுதி நரக நெருப்பை விட்டும் விடுதலை பெறுவதாகவும் இருக்கிறது.

இன்னும் எவரேனும் ஒருவர் ஒரு நோன்பாளிக்கு நீர் புகட்டுவாரானால் (கியாமத் நாளில்) என்னுடைய ஹவ்லுல் கவ்தரிலிருந்து அல்லாஹ் அவர்களுக்கு நீர் புகட்டுவான். அதனால் சொர்க்கம் செல்லும்வரை அவருக்கு தாகம் என்பதே ஏற்படாது என நபிகளார் அவர்கள் நவின்றுள்ளார்கள்.

(நூல் தர்கீப்) எனவே! புனிதமான இம்மாதத்தைப் பெற்ற நாமும் நன்மைகளைப் பெறுவோமாக! ஆமீன்!

எஸ்.தாஜுன் நிஸா றஹ்மான்-பிலியந்தலை.

## கவிதைப்போட்டி இல-87

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

#### எமக்குமா?

2000ம் ஆண்டு
யாவருக்கும்
புகலிடமாம்,
நாமும்-
அதில்
அடக்கமா?

ரம்புக் எலையூரான்
கண்டி.

#### நகரத்தல்ல இது; நரகத்து உறக்கம்!

யுத்த அரக்கி
கிராமத்து அன்னையை
அழித்துப் போட்ட அவலம்
அகதியானோம்...
நகரத்து சிற்றன்னை
அடைக்கலம் தரவில்லை
அதனால் இந்தக் கோலம்!

ஷர்மி-கண்டி.

#### தஞ்சம்

வாடகைப் பணமும்
வாடகை முற்பணமும்
வானுயர்ந்து நிற்பதனால்
வான் கூரை வீடுதான்
தஞ்சமானதே நகரத்தில்.

ஜி.அருளேந்திரன்
திருமலை.



நகரத்து தூக்கம்

#### நகரத்தின் துக்கம்!

பாதையினைத்
தவறவிட்டு-நற்
பண்புகளைப்
பழுதாக்கும்
போதையினைத்
தருகின்ற
பொருள்களால்
வருமிந்த
நகரத்துத் தூக்கம்
நகரத்தின் துக்கம்!

ரேணுகா நிபாய்தீன்-ஏறாவூர்-02.

#### தூ(து)க்கம்!

கவிஞர்களே!
எழுதுங்கள்
தேசவரலாற்றில்
எங்கள்
நகரத்தூ (து)க்கத்தை
பற்றியும் கொஞ்சம்!

ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.

#### நகர்புறத்து தூக்கமிதோ?

ஊனுறக்கம் நாம் மறந்து
உயிர் துறக்கும் வேளையிலும்
ஊர் நிலைமை அறியாத
நகர் புறத்து தூக்கமிதோ?

க.சுசீலா- மட்டக்களப்பு.

#### சயன மஞ்சம்

பிறந்தோம் மண்ணில் பிறவியெடுத்து
துறந்தோம் இங்கு சுகங்களனைத்தும்
புலரும் காலைப் பொழுது வரைக்கும்
புல் தரைதான் எங்கள் சயன மஞ்சம்.

ஏ.எஸ்.நர்ஜாஸ்
நிந்தவூர்-01.

#### வீதியது மெத்தையாமோ?

உண்ட மயக்கமது
தொண்டருக்கு உண்டாக
விசும்பு கூரையாகி
வீதியது மெத்தையாமோ
விதி விரித்த புதுப்பாயோ!

தர்ஷிக்கா கனகசிங்கம்
கல்லடி-மட்டக்களப்பு.

#### யுத்தம் தொடருமானால்...

இலங்கைத் தீவில்
இன்னுமோர் யுத்தம்
தொடருமானால்
வடக்கிலும் கிழக்கிலும்
தமிழர்களின் நிலை இதுதான்.

செ.சுகுமார்-மாங்கேணி.

#### ஒத்திகை

எஞ்சிய போராட்டத்தில்
எப்படி வாழ்வதென்று
எம்மவரின் திட்டங்களில்
எழுந்த ஒரு ஒத்திகை.

என்.கோடீஸ்வரன்
பொகவந்தலாவை.

#### மஞ்சம்

இப்போருக்கு
இருப்பது சொந்தம்
இல்லாதோருக்கு
தரைத்தான் மஞ்சம்.

ஜிகே.யோகச்சந்திரன்
அக்கரைப்பற்று-7.

#### மெத்தை

பணக்காரர் படுத்துறங்க
கட்டிலிலே மெத்தை
ஏழைகள் படுத்துறங்க
தெருவெல்லாம் மெத்தை!


சித்ரா விநாயகமூர்த்தி
ஆரையம்பதி-1.

#### பசி...புசி

புசித்த களைப்பில்
பலபேர் தூக்கம்,
பசித்த களைப்பில்
பாவம்
இவர்கள் தூக்கம்!

சித்தி ஜெலீதா இக்பால்
காத்தான்குடி-6.


## கவிதைப் போட்டி இல-90



### கவனியுங்கள்

போர் தவிர்ப்பு நேரம் இது. அதனால் போர் பற்றிய சூடான கவிதைகளுக்கு நாமும் ஒரு இடை நிறுத்தம் செய்யலாமே! (தற்காலிகமாக மட்டும்தான்) படத்தில் இருப்பது காதலின் சின்னம் தாஜமஹால் என்பது தெரியுமல்லவா? சாஜஹான் தனது காதலிக்காக தாஜ்மஹாலையே கட்டினான். நீங்கள் கவிதைகளைக் கொட்டக்கூடாதா? (தபாலட்டையில் மட்டும்) ஜமாயுங்கள்! அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.02.1995.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 89
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.



எக்ஸ்ரே ரிப்போர்ட், அற்புதன் எழுதும் அரசியல் தொடர், அதிரடி அய்யாத்துரை, ரசிகனின் இலக்கிய நயம், கிரைம் டயரி எல்லாமே சுப்பர் தலைவா.

பர்சான்,சப்வான்,நிஸ்தார்-நொச்சிமுல்லை.

□□

வாரந்தோறும் வாசிக்கத்தூண்டும் தித்திக்கும் சுவை படைக்கும் தினமுரசே, என் கைகளில் தவழ்ந்து விளையாடும் நீ மாறாமல் சுறுசுறுப்பாய் இயங்க என் வாழ்த்துக்கள்.

என்.இராஜேஸ்வரி-புத்தளம்.

□□

குறிப்பாக இன்றைய அரசியல் நிலமைக்ளை எக்ஸ்ரே ரிப்போர்ட் மற்றும் அற்புதன், இராஜதந்திரி போன்றோர் உடனுக்குடன் பக்க சார்பின்றி விளக்குவது என் உள்ளத்தை மிகவும் கவர்கிறது. முரசே! உன் சேவை இன்னும் தொடர என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

எஸ்.எச்.சக்கீனா-கிண்ணியா-05.

□□

அன்பின் தினமுரசே! என் இனிய வண்ண முர்சே. நீ வாரா வாரம் சுமந்து வரும் பல அம்சங்களையும் மகாபாரதம்,சிறுகதை போன்ற பல சுவையான செய்திகளையும் கொண்டு வருகிறாய். உமக்கு எனது வாழ்த்துக்கள்.

ஏ.வேல்முத்து-உடப்பு.

□□

வாரத்திற்கு வாரம்
புதுப் பொலிவு- புதுத் தகவல் - சுடச் சுடச் புதுச் செய்தி. புதுப் புது சிறு(தொடர்)கதை- இவற்றுடன் அசத்தலான அரசியல் அலசல் அத்தனையும் பிரமாதம். ஆயினும் ஒரு குறை! டியர் சிந்தியாவைக் காணவில்லை. என்ன- கண்காணிப்புக்குழு அங்கத்தவராக யாழ்பாணம் பக்கம் போய் விட்டாரா?

எம்.நிஸா முஸம்மில்-தியத்தலாவை.

□□

நாம் ரசித்து ரசித்து சுவைக்கும் பகுதி என்ன தெரியுமா? அது தான் இலக்கிய நயம். ஆமாம் இளம் இலக்கிய உள்ளங்களுக்கு அது தானே இனிமையானது, சுவாரசியமானது. இதயத்தையும் குளிர வைப்பது.

ஈதுல் அஸ்மியா-கந்தளாய்.

□□

என் நெஞ்சமதில் மஞ்சம் கொண்ட இனிய முரேச! நீ தாங்கி வரும் அத்தனை படைப்புகளும் அற்புதம்.

குறிப்பாக "தாய்" 'மகாசூலம்' இரு தொடர்கதைகளும் உட்பட இலக்கிய நயம், எக்ஸ்ரே ரிப்போர்ட், சினிவிசிட், சிறுகதைகள், தேன் கிண்ணம் இவை யாவும் என்னுள்ளத்தையே வருடி விடுகின்றன. எட்டுத்திக்கும் உன் சேவை இனிதே பவனிவர என் வாழ்த்துக்கள்.

செல்வன்.கே.வின்சட்
மட்/சத்ததுருக்கொண்டான்.

□□

அன்பெனக் கொட்டும் தேன் முரசாம், அது அறியத் தருவது அனைத்தும் அதி அற்புதமாம். அனைத்துலக செய்திகளை அழகு தமிழில் அற்புதமாய் தருவது எமது அன்பு முரசாம்.

அறிவுக் கண்ணை திறந்திட, அரசியல் நிலைமையை புரிந்திட, அனைவரும் விரும்புவதும் தின முரசாம்.

ந.சு.பூரிக்கோ-பூண்டுலோயா.

□□

பலகோடி தமிழர்களின் நெஞ்சில் குடி கொண்டிருப்பதுதான் தினமுரசு. அதுதான் தமிழுக்கே வெற்றிமுரசு. என்னேரமும் உயர்வாக வளரட்டும் தமிழ் முரசு. உன் படைப்புகள் அனைத்தும் தேன்முரசாக இனிக்கட்டும் தினமும்.

வி.ரவிச்சந்திரன்
முறக்கொட்டாஞ்சேனை.



ஜனவரி 29ல் தினமுரசில் வெளிவந்த சமாதானக் கோலம் கண்டதும் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தோம். அபூர்வமான கற்பனை, அழகான சாதனை. அதை உருவாக்கிய சந்திர கலாவிற்கு எங்கள் மனமுவந்த பாராட்டுக்கள்.

ராமன் விஜயா, சத்தியவேணி,
ராதிகா, பிரபாலினி- கொட்டகலை.

□□

மகாபாரதம் மொழிபெயர்ப்பு இராஜகுமாரன் அவர்களுக்கு என் தனிப்பட்ட நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.சுபேஸ்-நீர்கொழும்பு.

□□

தினமுரேச, வாரம் தவறாது வருகை தந்து- மக்களின் நெஞ்சங்களைப் பூரிக்கச் செய்யும் இரகசியம் எதுவோ? உன் வருகை தாமதம் என்று தவிக்கும் நெஞ்சங்களின் தாகத்தை தீர்க்க தாமதம் வேண்டாம்.

எஸ்.ஸப்ரித்-கண்டி.

□□

நீ தரும் நம் நாட்டுச் செய்திகளைச் சுடச்சுட புரட்டிப் பார்த்துக் கொள்வேன். உன் வீரத்தையும், உன் ஞானத்தையும், உன் அறிவையும் கண்டு நான் பெருமை அடைகிறேன். உனக்கு 81 வயது ஆனாலும் உன் ஆக்கங்கள் இளைமயிலும் இளமைதான்.

எம்.யஹியா-குவைட்.

□□

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# பாதுகாப்பு நிதிக்கு பலகோடி ரூபாய்கள்!

# அரசமீது புலிகள் சந்தேகம்

**யாழ் குடாநாட்டில் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதேவேளையில் புலிகளது முக்கிய பிரமுகர் தமிழ்செல்வன் அரசின் அபிவிருத்தி பணிகள் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளார். பொருளாதாரத் தடை நிலவும் போது வடக்கில் அபிவிருத்தியை அரசு எப்படி செய்யப்போகிறது? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.**

### அரசு நிபந்தனை

பாடசாலை மாணவர்கள் மத்தியில் புலிகள் அமைப்பினரால் நடத்தப்படும் பரீட்சை தமிழீழ பொதுக்கல்வி தேர்வு என்று அழைக்கப்படுகிறது.

'தமிழீழ பொதுக் கல்வி தேர்வில் சித்தியடைந்தவர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழா யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

11.02.95 அன்று நடைபெற்ற அந்த விழாவில் கலந்துகொண்டு தமிழ் செல்வன் உரையாற்றினார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் போராளிகள் ஆயுதங் களோடு நடமாடக்கூடாது என எந்த சொற்பிரயோகமும் உடன்பாட்டில் குறிப்பிடப்படவில்லை. இந்த நிலையில் இந்த விடயங்களில் அரசாங்கம் புதிய நிபந்தனைகளை விதித்துள்ளது என்பதை வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு விளக்கியிருக்கிறோம்.

போர் இடை நிறுத்தம் தொடர்பாக மேலும் சில தெளிவான விளக்கங்களை கேட்டறிந்த பின்னரே தம்மால் கண்காணிப்பு குழுவில் பங்குபற்ற முடியும் என்று யாழ் வந்த வெளிநாட்டு பிரதிநிதிகள் எம்மிடம் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் அரசியல் தீர்வை-அரசியல் பேச்சுவார்த்தையை புறம் தள்ளவில்லை. ஆனால் எமக்கு 40 வருட காலத்திற்கு மேற்பட்ட வரலாறு இருக்கின்றது. எமது மக்களது உரிமைப் போராட்ட வரலாறு இருக்கின்றது.

நாங்கள் கடந்தகாலத்தில் பல ஒப்பந்தங்களினால் ஏமாற்றப்பட்டிருக்கிறோம்.

நாம் இன்று ஆயிரக்கணக்கான எமது போராளிகளையும், மக்களையும் இழந்துள்ளோம். எமது மக்களது விடுதலைக்காக புலிகள் தம்மை அர்ப்பணித்துள்ளனர்.

### எப்படியான தீர்வு

ஆகவே எமது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, எமது மக்களின் உரிமைகள் முழுமையாகக்கிடைக்கக்கூடிய ஒரு தீர்வை அரசு முன்வைக்க வேண்டும். இதில் நாம் மிக உறுதியாக இருக்க வேண்டும்.

இவ்வருடம் பாதுகாப்புக்கென பல கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு பக்கம் அரசியல் பேச்சுவார்த்தை-அரசியல் தீர்வு, மறுபக்கம் இராணுவ புனரமைப்பு என சிறிலங்கா அரசு செயற்படுகின்றது.

தாக்குதல் நிறுத்தமும், பேச்சுவார்த்தை கால கட்டமும் தன்னை வளர்த்துக் கொள்வதற்காக, எமது மக்களை மீண்டும் இராணுவ ரீதியாக நசுக்குவதற்கான திட்டமாகவே நாம் கருதவேண்டியுள்ளது.

பெரியதொரு யுத்தம் மூலம் தமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று அரசாங்கம் நினைப்பதைப் போலத் தெரிகிறது.

பல அபிவிருத்தி வேலைகளை செய்யப்போவதாக சர்வதேச ரீதியான பிரசாரத்தை அரசு மேற்கொண்டுள்ளது.

பொருட்களுக்கு தடை விதித்துக் கொண்டு அபிவிருத்திப் பணிகளை அரசு வடக்கே எப்படிச் செய்யப் போகின்றது?

தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு விடுதலைப் புலிகள் பேசமாட்டார்கள் என்று ஒரு நிலைப்பாடு இருந்தது. ஆனால் எமது தேசிய தலைவர் பிரபாகரனின் கருத்துக்களும், எமது அறிக்கைகளும் ஒரு தீர்வுத் திட்டத்தின் அடிப்படைகளை விளக்கியிருந்தன. இன்று ஒரு தீர்வு திட்டத்தைக் கொண்டுவருவதில் சந்திரிக்கா ஒரு சிக்கலான நிலையில் உள்ளார்.

### புதிதாகக் கேட்கவில்லை

சிறிலங்கா அரசின் வெகுஜன தொடர்பு சாதனங்கள் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்க தாம் தயாராக இருப்பதாகவும், ஆனால் புலிகள் புதிய நிபந்தனைகளை விதிப்பதாகவும் கூறுகின்றன.

விடுதலைப் புலிகள் புதிய நிபந்தனை எதையும் விதிக்கவில்லை. அரசாங்கம் எமக்கு உறுதியளித்ததைத்தான் நாம் கேட்கின்றோம்.

மூன்றாம் கட்டமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் துப்பாக்கிகளை மட்டுமே சற்று ஓய்வெடுக்க வைத்துள்ளன. ஆனால் அரசினால் உறுதியளிக்கப்பட்ட எமது மக்களின் தேவைகளை அரசினால் நடைமுறைப்படுத்த முடியவில்லை.

இவ்வாறு தமிழ் செல்வன் தனது உரையில் தெரிவித்தார்.

## புலிகளின் ஏற்பாட்டில் கண்டனப் பேரணி

## பொதுமக்கள் எதிர்ப்பைத் திரட்டும் முயற்சி!

(அரசியல் நிருபர்)

17ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்நகரில் கண்டனப்பேரணி நடத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு எதிராக பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதே முக்கிய நோக்கம் என்று தெரிகிறது.

அன்றாடப் பிரச்சனைகள் என்று புலிகளால் முன்வைக்கப்பட்ட விடயங்களைஅடிப்படையாகக் கொண்டே ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

புதிய அரசு பிரச்சனைகளை தீர்க்கும் என்ற எதிர்பார்ப்பு யாழ்குடாநாட்டு மக்களிடம் நிலவுவதாக கூறப்படும் கருத்துக்களை மறுக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு புலிகள் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிது.

தென்னிலங்கையில் இருந்து வாசுதேவ நாணயக்கார பா.உ.வும் சமாதான இயக்கத்தைச் சேர்ந்த சிலரும் யாழ்ப்பாணம் வருவதாக புலிகளுக்கு அறிவித்திருந்தனர்.

அவர்களை ஆர்ப்பாட்ட பேரணி நடைபெறும் நாளான 17ம் திகதி யாழ் வருமாறு புலிகள் அழைப்பு விடுத்தனர். ஆர்ப்பாட்ட பேரணியை நேரில் காண்பது மூலம் தென்னிலங்கையில் அதுபற்றி அவர்கள் கூறமுடியும் என்று புலிகள் நினைக்கின்றனர்.

பூநகரி முகாம் அகற்றப்படுவது உட்பட முக்கியமான உடனடிக்கோரிக்கைகள் பொதுமக்களின் விருப்பம் என்ற செய்தியை தென்னிலங்கை மக்களுக்கு தெரிவிக்க வாசுதேவ நாணயக்காரவின் விஜயம் புலிகளுக்கு பயன்படலாம்.

புலிகள் அரசியல் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனையாக அன்றாடப் பிரச்சினைகளை கூறிவருகின்றனர் என்று அரச தரப்பு தெரிவிப்பதால், அன்றாடப் பிரச்சினைகள் தீர வேண்டும் என்ற கோரிக்கைகள் யாழ் குடாநாட்டு மக்களிடம் இருந்து எழுவதாக காட்டுவதற்கும் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்த திட்டமிடப்பட்டது.

## கையிலே காசோலை-வங்கியில் காசில்லை

## நஷ்டஈடு பெற்றவர்கள் ஏமாற்றம்!

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா 4 அயிரம் ரூபா பெறுமதியான நிவாரண காசோலைகள் வழங்கப்பட்டன.

காசோலைகளைப் பெற்றவர்தள் வங்கிக்கு சென்று அதனை மாற்ற முற்பட்ட போது ஏமாற்றத்துக்கு உள்ளானார்கள்.

காசோலைக்கு உரிய பணம் வங்கியில் வைப்புச் செய்யப்படாமையே ஏமாற்றத்திற்குக் காரணமாகும்.

90 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் அவ்வாறு திரும்பியதையடுத்து நஷ்டஈடாக பெறேவண்டியவர்கள் விரக்தியடைந்துள்ளனர்.

ஒரு வாரத்தில் அதற்கான பரிகாரம் செய்யப்பட்டுவிடும் என்று பிரேதச செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சு உரிய பணத்தை வங்கியில் வைப்பு செய்யாமையே காசோலைகள் திரும்பக் காரணம் என்று கூறப்படுகிறது.

தபால் பெயர் மாற்றம் ஒன்றால் ஏற்பட்ட தவறே பிரச்சினைக்கு காரணம் என்று காத்தான்குடி பிரேதச செயலகம் தெரிவிக்கிறது.

## ஐ.தே.கட்சி ஆட்சியின் தேசிய பட்டியல் வெற்றிடத்தை நிரப்புவதில் பூசல்

(நிந்தாவூர் நிருபர்)

ஐக்கியதேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் ஏற்பட்ட வெற்றிடங்களில் ஒன்றுக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் எம்.எம்.முஸ்தபா நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஐ.தே.கட்சி மேலிடம் எம்.எம். முஸ்தபாவுக்கு நியமனம் வழங்கவில்லை. இதனையடுத்து அவரது ஆதரவாளர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் எம்.எம்.முஸ்தபா ஐ.தே.கட்சியின் தேசிய பட்டியலில் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேறு சிலரும் தமக்கும் எம்.பி. பதவி கேட்டு கட்சி மேலிடத்தை சம்பந்தில் அணுகியிருந்தனர்.

ஐ.தே.கட்சி ஆட்சியில் அமைச்சராக இருந்த கிழக்குமாகாணத்தை சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவரும் எம்.பி.பதவி கேட்டு விண்ணப்பித்ததாகக் கூறப்படுகிறது. குறிப்பிட்ட முன்னாள் அமைச்சர்தான் எம்.எம்.முஸ்தபாவுக்கு எம்.பி.பதவி கிடைக்காதவாறு முட்டுக்கட்டை போட்டதாக முஸ்தபாவின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவருக்கு தேசியப்பட்டியல் மூலமாக எம்.பி.பதவி வழங்கப்பட்டமையால் அங்குள்ள ஐ.தே.கட்சி ஆதரவாளர்களில் ஒருபகுதியினர் அதிருப்தியடைந்துள்ளனர்.

## "திருப்பி அனுப்புவதை நிறுத்து"

### சுவிஸில் தமிழ் அகதிகள் போராட்டம்

(சுவிஸ் நிருபர்)

சுவிஸிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதை நிறுத்தக்கோரி எதிர்வரும் 25.02.95 அன்று மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடக்கவிருக்கிறது.

சுவிஸிலுள்ள பேர்ண் மாநகரில் உள்ள புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகவுள்ளது. சுவிஸிலுள்ள தமிழ் சங்கம், மோர்கள் தமிழர் நலன் விரும்பிகள், மற்றும் சுவிஸிலுளள இடதுசாலி அமைப்புக்கள் இணைந்து கண்டனப் பேரணியை ஒழுங்குசெய்துள்ளன. அகதிகள் மனுக்கள் நிராகரிக்கப்பட்ட சுவிஸிலுள்ள தமிழ் அகதிகளது கலந்துரையாடல் கூட்டம் ஒன்று 19.02.95 அன்று சுவிஸிலுள்ள சூரிச் நகரில் நடைபெறுகிறது. அங்குள்ள 'ரெயுஜியம் என்னும் அமைப்பு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

"சுயமாக சொந்த மணணுக்கு திரும்பிச் செல்ல விரும்பாதவரை பலாத்காரமாக திருப்பியனுப்பும் நடவடிக்கையை எதிர்க்க வேண்டும் என்று ரெயூஜியம் அமைப்பு வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### டீசல் வழங்க படையினர் கட்டுப்பாடு. மட்டக்களப்பு விவசாயிகள் பாதிப்பு.

மட்டக்களப்பிலுள்ள விவசாய பிரதேசங்களில் டீசல் தடை காரணமாக பாதிப்பான நிலை காணப்படுகிறது.

படையினர் விதித்துள்ள கட்டுப்பாட்டுக்கு ஏற்பவே டீசல் கொண்டு செல்ல முடியும் என்பதால் உழவு யந்திரங்களுக்கு போதுமான டீசலை எடுத்து செல்ல முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. நெல் அறுவடை காலத்தில் இதனால் பாதிப்பு ஏற்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

## "இந்திய-இலங்கை ஒப்பந்தம் அடிப்படையாகாது"

## இந்திய சமஷ்டி அமைப்பு முறையும் ஏற்கத்தக்கதல்ல"

யாழ்குடாநாட்டில் இருந்து வெளிவரும் புலிகளது தினசரியான ஈழநாதம் பத்திரிகையில் புலிகளது அரசியல் விமர்சகர் ஒருகட்டுரை எழுதியுள்ளார்.

வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் என்பதன் அடிப்படையில் தற்போது உருவாக்கப்பட்டுள்ள சுயாட்சி அமைப்புக்களை கருத்தில் கொண்டே சமஷ்டி திட்டம் அமையவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் தாயகம் என்பது விட்டுக் கொடுப்பிற்கு இடமில்லாத விடயமாகும்.

இதனை விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, சகல தமிழர் தரப்புமே கேள்வியின்றி ஏற்றுக்கொள்ளும் ஒரு அம்சமாகும். இந்த வகையில் சமஷ்டி அமைப்பு என்பது வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டதான வரையறையுடன் கூடியதாக இருத்தல் வேண்டும் என்பது அடிப்படையாகும்.

இதே சமயம், தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஏற்கனவே சுயாட்சிக்கான அமைப்புக்கள் பல உருவாக்கப்பட்டு செயற்பட்டும் வருகின்றன. இந்நிலையில் இனி அவற்றில் இருந்து பின்னோக்கிச் செல்வதென்பது சாத்தியப்படப் போகும் காரியமல்ல. இந்தநிலையில் சமஷ்டித் திட்டமானது இவ் அமைப்புக்களையும் உள்வாங்கியதாக இருத்தல் வேண்டும் என்பதும் புலிகளின் நிலைப்பாட்டில் இருந்து ஊகிக்க முடிகின்றது.

இதேசமயம், 1987ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்திய - சிறி லங்கா சமாதான உடன்படிக்கை ஏற்கனவே விடுதலைப் புலிகளினால் நிராகரிக்கப்பட்டதொன்றாகும். இந்தவகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வாக இந்திய-சிறிலங்கா உடன்பாட்டை அடிப்படையாக ஒருபோதும் புலிகள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது கூறித் தெரிய வேண்டியதொன்றல்ல.

அத்தோடு, இந்தியாவில் இடம்பெற்றுள்ள சமஷ்டி அரசியல் அமைப்பிற்கு ஒத்ததான அமைப்பும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்பதும், அது ஒரு முழுமையான சமஷ்டி அமைப்பு முறையல்ல என்பதும் விடுதலைப்புலிகளின் கருத்தாகவுள்ளது. இதனை விடுதலைப்புலிகள் பத்திரிகைப் பேட்டிகளில் உறுதிப் படுத்தியுள்ளனர்.

இவ்வாறாக, அரசியற் தீர்வு திட்டத்தின் மேல்எல்லையும், கீழ்எல்லையும் விடுதலைப்புலிகள் அமைப்பால் தெளிவாக வரையறை செய்யப்பட்டு தெளிவு படுத்தப் பட்டுள்ளது. இந்த வகையில் அரசியற்தீர்வுத்திட்டமானது எவ்வாறானதாக அமையவேண்டும் என்பதை விடுதலைப்புலிகள் அரசிற்கு உணர்த்தி விட்டனர் என்றே கூறலாம்.

ஆகையால், அன்றாடப்பிரச்சினைகளாக இருப்பினும் சரி அரசியற் பிரச்சினையாக இருப்பினும் சரி அடுத்தகட்ட நகர்வைச்செய்ய வேண்டியது அரச தரப்பின் கைகளிலேயே உள்ளது. அதாவது நான்காம் கட்டப் பேச்சுவார்த்தை மேசையில், தீர்வுகளையும், நடவடிக்கைகளையும் முன் வைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பே ஆகும்.

ஆனால், இவ் விடயங்கள் இரண்டில் எதிலும் அரசாங்கத்தால் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியுமா என்பது சந்தேகமே. இதற்கு ஒரு புறம் இராணுவமும் - மறுபுறம் சிங்களப் பேரினவாதிகளும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதோடு ஜனாதிபதி சந்திரிக்காவும் அதனை விரும்புவாரா? என்பதும் சந்தேகமே. ஏனெனில், இன்றைய அரசாங்கத்தின் நடவடிக்கையை அவதானிக்கும் போது தனியாக இராணுவத்தையும் பௌத்த பேரினவாதத்தையும் தனித்துக் குறைகூறுவதிலும் குற்றம் சாட்டுவதிலும் நியாயம் இல்லை என்றேபடுகின்றது.

## முல்லைத்தீவில் ஆசிரியர் நியமனம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு 38 தொண்டர் ஆசிரியர்களை புலிகள் நியமித்துள்ளனர்.

12தொண்டர் ஆசிரியர்களை முல்லைத்திவிலிருந்து கிளிநொச்சிக்கு புலிகளது தமிழீழ கல்வி வளர்ச்சிக் கழகம் இடமாற்றம் செய்துள்ளது.

தமிழீழ கல்வி வளர்ச்சிக் கழகம் நேர்முக பரீட்சைகளை நடத்தி தொண்டர் ஆசிரியர்களை நியமித்து ஊதியம் வழங்கிவருகிறது.

## புலிகள் ஆரம்பித்துள்ள தொழில்வங்கி.

யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்கள், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்காக 'தொழில்வங்கி' ஒன்றை புலிகள் ஆரம்பித்துள்ளனர்.

சென்றவாரம் யாழ்ப்பாணத்தில் புலிகளால் 'தொழில் வங்கி' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்பு இல்லாமல் இருக்கும் இளைஞர்களும், யுவதிகளும் தமது பெயர்களை தொழில் வங்கியில் பதிவு செய்யுமாறு புலிகளால் கேட்கப்பட்டுள்ளனர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## குருவி வலம்

# ஊருக்கு உபதேசிக்கும் நகரசபைத் தலைவர் வாங்கிய வாகனத்திற்கு செலுத்தவில்லை பாக்கி!

திருகோணமலை நகரசபை தலைவர் திரு.சூரியமூர்த்தி நகரசபை உறுப்பினர்களுக்கு செய்துவரும் உபதேசம் நம் குருவியார் காதில் விழுந்தது.

சலுகை விலையில் அரசிடமிருந்து வாகனம் பெற விரும்பிய நகரசபை உறுப்பினர்களிடம் நகரசபை தலைவர் பின்வருமாறு உபதேசம் செய்கிறாராம்:

"எனக்கு அரச விலையில் வாகனம் பெற அனுமதியிருந்தும் அதனைப் பயன்படுத்தாது இருக்கிறேன். எனது முன்மாதிரியை நீங்களும் பின்பற்றவேண்டும்!"

உபதேச சமாச்சாரத்தைக் கேட்டதும் நமது குருவியாருக்கு புல்லரித்துவிட்டது.

விசயத்தை நம் காதில் போட்டார். சோழியன் குடுமி சும்மா ஆடாது; கிளறிப் பாரும்; ஏதாவது மாட்டும் என்றோம்.

கிளறினார் குருவியார். கிடைத்தது தகவல். தற்போதைய நகரபிதா வடக்கு-கிழக்கு மாகாணசபையில் ஈ.என்.டி.எல்.எஃப்.என்னும் இயக்கம் சார்பாக மாகாண சபை உறுப்பினராக இருந்தவர்.

அராஜகத்திலும், அடித்துச் சுருட்டலிலும் மாகாணசபை காலத்தில் கொடிகட்டிப் பறந்த இயக்கம் அது. அதில் இருந்தவர்கள் எவருமே அதற்கு விதிவிலக்கல்ல. கில்லாடிகள்.

இப்போது அந்த இயக்கம் விலாசம் இல்லாமல் போனதால் அதிலிருந்த பிழைக்கத் தெரிந்த சிலர் வேறு கட்சிகளுக்கு தாவிவிட்டார்கள்.

ரெலோ இயக்கத்தில் சேர்ந்து நகரசபை தலைவரானவர் சூரியமூர்த்தி.

ஆனால் இவர் மாகாணசபை உறுப்பினராக இருந்தபோது அரசிடம் சலுகை விலையில் 1.3.89ல் ஒரு வாகனம் பெற்றார். அதன் இலக்கம் 32/6319 அதன் பெறுமதி ரூபா 79340.12. அந்தப் பணத்தை அரசுக்கு செலுத்தாமல் இருக்கிறார் நகரபிதா.

1989ம் ஆண்டு 8940.00 ரூபாவும், 1990ம் ஆண்டு 3500.00 ரூபாவுமாக மொத்தம் 12460.00 ரூபாவே அரசுக்கு செலுத்தியுள்ளார்.

இன்னமும் அறுபத்தாறாயிரம் ரூபா வரை அரசுக்கு பாக்கி வைத்திருக்கிறார் நகரபிதா.

மீண்டும் ஒரு புதிய வாகனத்தைப் பெறுவதற்காக முன்னாள் மாகாணசபை ஆளுநரிடம் பலமுறை காவடி எடுத்துப் பார்த்தார்.

புலிகள் தனது பழைய வாகனத்தை கடத்திவிட்டார்கள் என்றும் கதைவிட்டுப் பார்த்தார். ஆனால் பாக்கியை செலுத்தினால் மட்டும் புதிய வாகனம் பற்றி யோசிக்கலாம் என்று சொல்லப்பட்டுவிட்டது.

அதன் விளைவுதான் "சீச்சி இந்தப் பழம் புளிக்கும்" என்ற ரகத்தில் உபதேசம்.

முதலில் புல்லரித்த குருவியாருக்கு இப்போது கோபத்தில் சிறகுகள் படபடக்கின்றன. உங்களுக்கு...? வாழ்க, பொதுத் தொண்டு.

## கண்டி நகரில் அடிக்கடி தடை

(கண்டி நிருபர்)

கண்டி நகரில் அடிக்கடி ஏற்படும் மின்சாரத் தடை பெரும் சிரமங்களை எல்லோருக்கும் ஏற்படுத்தி வருகின்றனது.

கடந்த வாரம் கொழும்பு வீதியில் மின்மாற்றி ஒன்றும் முற்றாக எரிந்ததால் மின் துண்டிக்கப்பட்டதாலும் வரியிறுப்பாளர்கள் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். அடிக்கடி எழும் இந்த சீர்கேடுகாரணமாக பொதுமக்களால் செய்யப்படும் முறைப்பாடுகளுக்கும் செவி சாய்ப்பதில்லை எனவும் வரியிறுப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## பிந்திக் கிடைக்கும் வர்த்தமானி!

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வர்த்தமானிப் பத்திரிகை அச்சிட்ட தினத்திலிருந்து 15,20 நாட்கள் தாமதித்தே கிடைக்கின்றன என அதனோடு சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் முரசுக்குத் தகவல் தெரிவிக்கின்றன.

23.12.94ம் திகதிய வர்த்தமானி 15.01.95ம் திகதிதான் மாவட்டத்திலுள்ள ஒரு கல்லூரிக்குக் கிடைத்துள்து. ஆனால் சம்பந்தப்பட்ட வர்த்தமானியிலுள்ள விண்ணப்பத்திற்கான பரீட்சைத் திகதி 13.1.95 என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இன்னும் சில முக்கிய அலுவலகங்களுக்கும் பிந்தியே வர்த்தமானிப் பத்திரிகை கிடைப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மட்டக்களப்பை வருத்தும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல்!

## சுகாதார பகுதியின் விளக்கமும்-பொதுமக்களின் அதிருப்தியும்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூளைக் காய்ச்சல் பல உயிர்களை பலிகொண்டுள்ளது.

இந்நோய்க்கான காரணங்களை விளக்கி சுகாதாரப் பகுதி துண்டுப் பிரசுரமொன்றை விநியோகித்து வருகிறது.

மண்முனை வடக்கு-மேற்கு-தெற்கு, போரதீவுப் பற்று, பட்டிப்பளை, ஏறாவூர் பற்று, கோறளைப்பற்று ஆகிய 7 பிரதேச செயலகப் பிரிவுகளில் 13 பேரின் குருதியில் இந்நோய்க் கிருமி காணப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டபிள்யூ.வில்லியம் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

அவர் இந்நோய் பற்றி மேலும் விளக்குகையில்; ஜப்பானிய மூளைக்காய்ச்சல் (JAPANESE ENCEPHALITIS) எனப்படும் வைரஸ் நோய் 1971ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் இடைக்கிடை அதிகளவு மக்களைத் தாக்கி மரணங்களுக்கும் காரணமாக விளங்குகிறது. இந்த வைரஸ் பன்றிகள் போன்ற மிருகங்களிலேயே வாழ்கிறது; மிருகங்களுக்கு அவ்வளவு தாக்கம் ஏற்படாது. இந்த மிருகங்களுக்கு அண்மையிலுள்ள மனிதருக்கும் இந்த வைரஸ் நுளம்பு மூலும் கடத்தப்படுகிறது. 500 பேருக்கு இந்த வைரஸ் புகுத்தப்பட்டுத் தொற்று ஏற்பட்டால் ஒருவருக்கு அல்லது இருவருக்கு மட்டுமே நோயின் அறிகுறிகள் தென்படும்.

எஞ்சி யோரில் நோய் அறிகுறிகள் ஏதும் இருக்க மாட்டாது, அல்லது சிறிது காய்ச்சல் தலையிடி என்பன 1-6 நாட்களுக்கு இருக்கலாம்.

### இருவகை நுளம்புகள்

CULEX TRITAENIORHYNEHUS, CULEX GELIDUS என்னும் இருவகை நுளம்புகள் இந்நோயைப் பரப்புகின்றன. முதலாவது நுளம்பு (C.T) நீர் தேங்கி நிற்கும் நெல் வயல்களிலும், இரண்டாவது நுளம்பு (C.G) குட்டைகளிலும் நீர்த்தேக்கங்களிலும் பெருகுகின்றது. பெண் நுளம்புகள் பன்றிகள்,கால்நடைகள் போன்ற மிருகங்களின் இரத்தத்தைக் குடிக்கின்றன.

இந்த மிருகங்களிலிருந்து வைரஸைப் பெற்ற நுளம்புகள் 9-12 நாள் இடைவெளியின் பின் வைரஸைப் பரப்பக்கூடிய நிலையை அடைகின்றன. (அதாவது, மிருகத்தை அல்லது மனிதனைக் கடித்தால் வைரஸ் நோயை உண்டாக்கக்கூடிய நிலையில் கடத்தப்படும்) போதியளவு நுளம்புகள், மிருகங்களும் மக்களும் வாழும் இடத்தில் உற்பத்தியாகினால் இந்நோய் இலேசாகப் பரவலாம். நுளம்பு மனிதனைக் கடித்து 5-15 நாட்களில் நோயின் முதலாவது அறிகுறிகள் தோன்றலாம். இவை 1-6 நாட்கள் நீடிக்கலாம். இந்தக் கால கட்டத்தில் காய்ச்சல், தலையிடி, வாந்தி போன்றன இருக்கலாம். பெரும்பாலும் நோய் இத்துடன் குணமாகிவிடும்.

சிலருக்கு நோய் அடுத்த கட்டத்தை அடைகிறது. மூளைய ழற்சி ஏற்படுவதால் வலிப்பு, அங்கலாய்ப்பு, மனக்குழப்பம், தலையிடி, காய்ச்சல், வாந்தி, கழுத்தின் தசை நார்களில் இறுக்கம், மாறாட்டம், முகபாவனை வேறுபடல் போன்ற அறிகுறிகள் தோன்றலாம். இந் நிலையில் 20 வீதமானோர் இறக்கலாம். நோய் ஆரம்பத்தில் இருந்து 10 நாட்களில் இறப்பு நேரலாம்.

இந்த இரண்டாவது கட்டத்தின்பின் நோய் குணமாவோரில் 50 வீதமானோர் ஓரளவு வலது குறைந்த நிலையில் காணப்படுவர். மனநோய், கை- கால் பாவிக்க முடியாத நிலை, புத்தி குறைந்த நிலை போன்றன தோன்றலாம்.

### பன்றி வளர்ப்பு

வீடுகளில் பன்றி வளர்க்கப்படும் களுத்துறை தொடக்கம் புத்தளம் வரையுள்ள கடலோரப் பிரதேசங்களிலும், காட்டுப் பன்றிகளுள்ள குருநாகல், அனுராதபுரம், மட்டக்களப்புப் பிரதேசங்களிலேயே இந் நோய் பரவுகிறது.

பன்றி வளர்ப்போர் ஒவ்வொரு வருடமும் பிறக்கும் பன்றிக் குட்டிகளுக்குத் தடை மருந்தேற்றவேண்டும். பாடசாலைப் பிள்ளைகட்கும், பள்ளி முன் பிள்ளைகட்கும் தடை மருந்தேற்றவேண்டும். தடை மருந்தேற்றுதல் மூலம் நூற்றுக்கு 90% நோய் வராது தடை செய்யலாம். தற்பொழுது அனுராத புரம், பொலன்னறுவை,புத்தளம், குருனாகல் ஆகிய மாவட்டங்களில் ஆனி- ஆடி மாதங்களில் இந்தத் தடுப்பூசி ஏற்றப்படுகிறது.

மட்டக்களப்பில் மாநகரப் பகுதிகளில் தற்சமயம் நுளம்பை அழிக்கும் பீடை கொல்லி மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் மே மாதம் முதல் வைரஸ் தடுப்பூசி போடப்பட இருக்கிறது என பணிப்பாளர் டாக்டர். வில்லியம் மேலும் தெரிவித்தார்.

### நோயாளர் கவலை

இதேவேளை காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலைக்குச் செல்வோரை வைத்தியர்கள் நன்கு பரிசோதித்துப் பார்ப்பதே இல்லை. நோயாளிகளிடம் என்ன வருத்தம் என்று கேட்டுவிட்டு நோயாளிகள் கூறிய வருத்தத்திற்கு மாத்திரம் மருந்துச் சீட்டை எழுதிக்கொடுக்கிறார்கள். சாதாரணமான ஒருவருக்கு நோயை வித்தியாசப்படுத்தி அடையாளங்கூறமுடியாது. காய்ச்சல் என்று தான் உடனே கூறுவார்கள். முன்கூட்டியே இவர்கள் வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளை நன்கு பரிசோதித்திருந்தால் இந்த அவல மரணங்கள் ஏற்பட்டிருக்காது என்று பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

## விளம்பரப் பகுதி

கசெட் இல. 357. ஆரம்பம்: 1984
(அரச அங்கீகாரம் பெற்றது)



இணைந்த பல்கலைக்கழக
கணணி
பயிற்சி நிறுவனம்.

ஆதாரம் அற்ற மாணவ மாணவிகளுக்கு வெளிநாட்டு நன்கொடையில் கற்கை நெறிக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பம்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்குகோ மேற்படிப்புகளுக்கோ பயிலும் பாடங்களில் திறமை சித்தி பெற்றவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

IBM

- COMPUTER BUISNESS MANAGEMENT
- COMPUTER ANALYSIS AND DESINING
- COMPUTER PROGRAMING
- COMPUTER SCIENCE
- AIR CRAFT
- PRACTICAL RADIO & T.V.
- ROBOTIC
- TELECOMMUNICATION
- AUTO MOBILE
- MARINE
- COMPUTER
- PRACTICAL ELECTRONIC
- REF:AIR CONDITION

இலங்கையில் பேராசிரியர்களாலும் மிகவும் தேர்ச்சி பெற்ற பொறியில் பறிற்ச்சியாளர்களாலும் தமிழ், சிங்கள, ஆங்கில, மொழிமூலம் விரிவுரைகள் போதிக்கப்படும் ஒரே ஒரு நிறுவனம்

M. E. E. T. I.
OF LONDON CEYLON
No. 22-2/1, GALLE ROAD, DEHIWALA.
(22-2/1, 2வது மாடி, காலி வீதி, தெகிவளை, கமிஹரி ஹோட்டலுக்கு அருகாமையில்)



அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா! தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா? கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா! காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா! அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா! இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா! ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்
மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28

நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 492/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 251/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 128/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

DIPLOMA IN WINDOWS APPLICATIONS!

முதன் முறையாக கண்டியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இன்று பயன்படக் கூடியதும் எதிர்காலத்தில் பலன்தரக்கூடிய கல்வி நெறியைப் புகட்டும் நாம் கீழ்க்காணும் நவீன பாடங்களை மாணவர் நலன் கருதி ஆரம்பித்துள்ளோம். "WINDOWS" எதிர்காலத்தில் உலகெங்கிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறிருக்க ஏன் பழையவற்றில் நேரத்தை வீணாக்க வேண்டும்? எமது புதிய பாடத்திட்டத்தில் நாம் இணைத்துள்ள பாடநெறிகள்:

MS-WINDOWS
MS- WORD 6.0
MS- EXCEL 4.0/ LOTUS 4.0
COREL DRAW/MS-POWER POINT
VIRUS SCANNING

இவற்றைப் பயின்று நீங்களும் பயன் பெறலாம். இதன் மொத்தக் காலவரையறை 4 மாதங்களே.
அறிமுகக் கட்டணம் ரூபா 2000/= மட்டுமே.

எமது ஸ்தாபம் பற்றிய சில வரிகள்:

- ★ ஐந்தாண்டுகள் அனுபவம் பெற்ற கம்பியூட்டர் பயிற்சிக் கலைக்கூடம்.
- ★ 10 வருட அனுபவம் பெற்ற விரிவுரையாளர்கள் பணி புரியுமிடம்.
- ★ நவீன கம்பியூட்டர் பயிற்சியைப் பெறுவதில் டாக்டர்கள், சட்டத்தரணிகள், பாடசாலை அதிபர்கள் உட்பட அதிகாரிகள் கூடும் இடம்.
- ★ கம்பியூட்டர் துறையில் புதிய பாடநெறிகளை அறிமுகஞ் செய்பவர்களில் முதன்மை வகிப்பவர்-

MIRAJ INFORMATION SYSTEMS
196. D.S.SENANAYAKE VEEDIYA. KANDY.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# கடலின் மடியில் புலிகளின் வியூகம்

## இருதரப்புக்கும் தேவைப்படும் பாதுகாப்பு நிதி

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

வரவு -செலவு திட்டத்தில் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை புலிகளது விமர்சனத்திற்கு வாய்ப்பாகியிருக்கிறது.

"இராணுவ ரீதியான தாக்குதலுக்கு அரசு தயாராகிவருகிறது என்று குற்றம் சாட்டியிருக்கிறார் 'தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர்' தமிழ் செல்வன்.

சமாதானப் பேச்சு நடக்கும்போது பாதுகாப்பு செலவுக்காக பல கோடிகள் ஒதுக்கப்படுவது ஏன்? என்பதே புலிகளது கேள்வியாகும்.

அதே சமயம் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுகிறது என்பதற்காக புலிகளும் தமது நிதி திரட்டலை நிறுத்திக்கொள்ளவில்லை.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சகல பொருட்களுக்கும் புலிகள் வரிவிதிக்கிறார்கள்.

போர் தவிர்ப்புக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் படையினரது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகள் நிதி திரட்டியிருக்கிறார்கள்.

வெளிநாடுகளிலும் புலிகளது நிதி திரட்டலில் உள்ள சுறு சுறுப்பு சற்றும் குறையவில்லை.

புதிய அரசோடு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தமிழீழ பாதுகாப்பு நிதி கேட்டு பிரபா விடுத்த கோரிக்கைகள் வெளிநாடுகளில் உள்ள புலிகளது பத்திரிகைகளிலும் வெளி வந்திருந்தன.

அரசாங்கம் மட்டுமே நம்பிக்கை யீனத்தோடு நடந்துகொள்கிறது என்பதுபோல விமர்சிப்பது சுலபமாக இருக்கலாம்.

ஆனால், அது முழுதான உண்மையல்ல. இரு தரப்புமே நம்பிக்கையீனங்களை கொண்டிருக்கின்றன.

இது தவிர்க்க முடியாத ஒரு விடயமும்கூட.

கடந்த அரசு இறுமாப்போடு போரை நடத்தியதாக பதில் நீதியமைச்சர் வரவு-செலவுத்திட்ட உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்.

அதே சமயம் போருக்கு தயார் நிலையில் அரச படைகளை வைத்திருக்கக் கூடியதாக பாதுகாப்பு நிதியை அவர் ஒதுக்க மறக்கவில்லை. பாதுகாப்பு வரியும் அப்படியே இருக்கிறது.

பேச்சுவார்த்தை திருப்திகரமான கட்டத்தை இன்னமும் எட்டவில்லை.

போர் தவிர்ப்பு நீடித்தாலும் இரு தரப்புக்கும் இடையே பிணக்குகள் இருக்கின்றன.

கண்காணிப்புக் குழுவாக அழைக்கப்பட்ட வெளிநாட்டு பிரதிநிதிகள்கூட வெறுப்படைந்திருக்கிறார்கள்.

புலிகள், வடக்கே சென்ற கண்காணிப்புக் குழுவை வரவேற்று உபசரித்து அரசுமீது குற்றம் சாட்டி பேசிவிட்டு கண்காணிப்புக் குழுவினரை நாசூக்காக திருப்பி அனுப்பிவிட்டனர்.

புலிகள் வலியுறுத்தும் போர் தவிர்ப்பு பற்றிய புதிய விதிகள் தொடர்பாக உடனடியாகப் பேச அரசதரப்பு விரும்பவில்லை.

இடையிலே அகப்பட்டுக்கொண்டு கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் தலைமுடியைப் பிய்த்துக்கொள்கிறார்கள்.

இரு தரப்புக்கும் போர் தவிர்ப்பு தேவையாகவும் இருக்கிறது. அதே சமயம் இரு தரப்புமே எதையும் இழக்க விரும்பவில்லை.

போர் தவிர்ப்புக்கு கிடைத்துள்ள வரவேற்பும், அதனால் சர்வதேச ரீதியில் ஏற்பட்டுவரும் நல்லபிப்பிராயமும் போர் தவிர்ப்பை நீடிப்பதற்கான அவசியத்தை அரச தரப்புக்கு ஏற்படுத்தியுள்ளன.

போர் தவிர்ப்புக்கு தமிழ் மக்களிடம் இருக்கும் ஆதரவும், அங்கீகாரமும் அதனை குழப்பியவர்கள் என்ற பழியை சந்திக்கக்கூடாது என்கின்ற அவதானத்தை புலிகளிடம் உருவாக்கியுள்ளன.

போர் தவிர்ப்பு குறித்து புதிய ஒப்பந்தம் செய்யப்படவேண்டும் என்று புலிகள் கூறியுள்ளதுடன் புதிய நிபந்தனைகளையும் விதித்துள்ளனர்.

போர் தவிர்ப்பை அர்த்தமுள்ளதாக்கவே புதிய ஒப்பந்தம் கோருவதாக புலிகள் கூறினாலும் தமது கரங்களை மேலும் விரித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தவே புலிகள் விரும்புவது தெளிவு.

பாதுகாப்பு படையினரை தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் ஆயுதங்களோடு நடமாட புலிகள் அனுமதிக்கப் போவதில்லை.

அதே சமயம் அரச தரப்பும், படைகளும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் புலிகள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கவேண்டும் என்று புலிகள் தரப்பு கோருகிறது.

நிபந்தனையில்லாத பேச்சுக்கு தயார் என்று கூறிவிட்டு புலிகள் புதிது புதிதாக நிபந்தனைகளை முன்வைப்பதையிட்டு ஜனாதிபதியும் சற்று அதிருப்தி கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆக, பேச்சுவார்த்தையானாலும், போர் தவிர்ப்பு என்றாலும் இரு தரப்புமே கயிற்றின் மீது நடப்பது போலவே செயற்படுகின்றன.

தவறிவிழுந்துவிட்டால் சேதமில்லாமல் தப்பிக்கொள்ளவேண்டும் என்ற கவனம் இரு தரப்பிடமும் நிலவுவது ஆச்சரியமல்ல.

இதற்கு அப்பால் ஒரு தரப்பின்மீது இன்னொரு தரப்பு குற்றம்சாட்டுவதையும், புத்திசாலித்தனமான பேச்சுக்களையும் வைத்து நிலமையை மதிப்பிடுவது தவறாகிவிடும்.

எந்தக் குற்றவாளியும் தனது குற்றங்களை ஒப்புக்கொள்வதில்லை. சட்டவாதத்தில் இது கவனிக்கப்படும் அடிப்படை.

அரசியலில் இரு துருவங்களாக உள்ள தரப்புக்களும் தாம் உண்மையாக என்ன நினைக்கிறோம் என்பதை வெளிப்படையாக கூறுவதில்லை. இன்றைய சமரசப் பேச்சுக்களிலும் இது நம்மால் கவனிக்கப்பட வேண்டிய அடிப்படை.

இவற்றை கவனிக்காமல் அரசாங்கம் பாதுகாப்பு செலவுக்கு நிதி ஒதுக்கியதை மட்டுமே சுட்டிக்காட்டி வெளுத்து வாங்குவது ஒரு தரப்பு சார்பாக கத்தி வீசும் செயலாகிவிடும்.

□□

பிரேமா அரசோடு பேச்சை முறித்துக் கொண்ட பின்னர் ஆரம்பித்த யுத்தத்தை ஈழப்போர் 2 என்று புலிகள் அழைக்கின்றனர்.

'ஈழப்போர் 2' புலிகளைப் பொறுத்தவரை பல்வேறு முனைகளில் வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்திருக்கிறது.

பிரேமா அரசோடு தமது அணியினர் பேச்சு நடத்திக்கொண்டிருந்தபோது பிரபா ஒரு முடிவோடு இருந்தார்.

சிங்கள அரசுகள் எதுவும் பிரச்சனைக்கு நியாயபூர்வமான தீர்வைக் காணப்போவதில்லை என்ற தனது வழக்கமான நம்பிக்கையோடு அவர் போருக்கு தயாராகிக் கொண்டிருந்தார்.

போர் ஆரம்பித்த பின்னர் புலிகளின் கையே மேலோங்கியது.

பிரேமா அரசு புலிகளுக்கு விட்டுக் கொடுத்து ஏமாந்துபோனதே தோல்விக்கு காரணம் என்று எதிர்க்கட்சிகள் அப்போது சொல்லிக்கொண்டன.

புலிகளோடு ஒப்பிடும்போது உயர்ந்த வசதிகளும், ஆட்பலமும் கொண்ட ஒரு நாட்டின் படைகள் தோல்விகளைச் சந்தித்தபோது, பழி பிரேமா மீது சுமத்தப்பட்டது.

பிரேமதாசா அரசாங்கம் ஒன்றும் புலிகளை முற்று முழுதாக நம்பிவிடவில்லை.

இந்தியப் படைகளை வெளியேற்றுதல், ஜே.வி.பி.கிளர்ச்சியை அடக்கி தென்னிலங்கையில் தமது அரசின் உறுதிப்பாட்டை நிலைநாட்டுதல் என்ற தேவைகளைப் பொறுத்தே புலிகளுடன் பிரேமா அரசின் நட்பு இறுகியது.

பொது எதிரிக்கு எதிரான ஐக்கிய முன்னணி அநேகமாக பொது எதிரி என்று இனம்காணப்படும் சக்தி உள்ளவரைதான் நீடிக்கமுடியும்.

இந்தியப்படை வெளியேறிய பின்னர் பிரேமா அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட விரிசல்களுக்கு அதுவும் ஒரு காரணம்.

அரசியல் ரீதியாக புலிகளோடு மாறுபடுபவர்கள், புலிகள் பிரேமாவை ஏமாற்றி விட்டார்கள் என்று கூறலாம்.

ஆனால், 'எதிர்க்கு எதிரி நண்பன்' என்ற கொள்கை இராணுவ ரீதியில் போர்த் தந்திரமாகவே கொள்ளப்படுகிறது.

அந்தப் போர்த் தந்திரத்தை சரியான முறையில் அணுகியதால் புலிகள் நிலமையை தமக்கு சாதகமாக்கிக்கொண்டார்கள்.

ஈழப் போர் 2 ஆரம்பித்த பின்னர் யாழ் குடாநாட்டை முற்றுகையிடும் வியூகத்தை அரச படையினர் ஏற்படுத்தினார்கள்.

தரைவழியாலும், கடல் வழியாலும் முற்றுகையிட்டு புலிகளை குடாநாட்டுக்குள் முடக்கிவிடுவது முதற்கட்டம்.

எதிரியை அழிப்பதற்கு முதலில் எதிர்க்கும் ஆற்றலை அழிப்பதும் ஒரு போர்த் தந்திரம்.

புலிகளுக்கான விநியோகப் பாதையை முற்றாக தடைசெய்துவிடவேண்டுமானால் கடற்பரப்பில் பூரண கண்காணிப்பு செலுத்த வேண்டும்.

பிரமாண்டமான போர்க்கப்பல்களில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் கடற்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டன.

வடக்கில் உள்ள படைமுகாம்களுக்கு தேவையான விநியோகத்தை நடத்தவும் கடல்வழிப் பாதை படையினருக்கு உபயோகமாக இருந்தது.

ஆனையிறவு இராணுவ முகாம்மீது புலிகள் மேற்கொண்ட பாரிய முற்றுகைத் தாக்குதலை படைகள் முறியடிக்க கடல் வழிப்பாதையே முக்கிய காரணியாக இருந்தது.

கடல் வழியாக சென்ற படைகளின் உதவி கிடைத்திராவிட்டால் ஆனையிறவு முகாம் புலிகளின் கையில் வீழ்ந்திருக்கும்.



'சாகரவர்த்தன' கப்பல் தாக்குதலில் பலியான பெண்கரும்புலிகள் பிரபாகரனோடு

யாழ் குடாநாட்டுக்குள் நடக்கும் போரில் கடற்பரப்பு மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது.

இதனை நன்கு உணர்ந்துகொண்ட பிரபாகரன் கடற்புலிகளை உருவாக்கினார்.

கடற்போரின் முக்கியத்துவம் கருதி கடற்புலிகள் பிரிவுக்கு முதன்மையளித்து அதன் தாக்குதல் திறன் வளர்க்கப்பட்டது.

கடற்புலிகள் பிரிவில் உள்ள தற்கொலை தாக்குதல் அணி கடற் கரும்புலிகள் என்று அழைக்கப்படுகிறது.

கடற்கரும்புலிகளால் தாக்கப்பட்ட ஆழ்கடல் ரோந்துக் கப்பலின் கப்டன் பொயாகொட தற்போது புலிகளது காவலில் இருக்கிறார்.

"கடற்புலிகளிடம் ஒரு தற்கொலைப்படை இருக்கிறது. அது காரணமாக அவர்கள் ஒரு நல்ல நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலை தொடருமானால் அரச படைகள் வேறு ஏதாவது ஒரு மார்க்கத்தை தேடிப் பிடிக்க வேண்டி இருக்கும்." என்று கப்டன் பொயாகொட யாழ்ப்பாணத்தில் பேட்டியளித்துள்ளார்.

கடற் கரும்புலிகளது தற்கொலைத் தாக்குதல் காங்கேசன்துறையில் கண்காணிப்பு தாய்க் கப்பலை தாக்கியதோடு ஆரம்பித்தது.

அங்கையற்கண்ணி என்னும் பெண் கடற்கரும்புலியே அந்த தற்கொலை தாக்குதலை நடத்தியிருந்தார்.

அதனையடுத்து 'சாகரவர்த்தனா' கப்பலையும் கடற் கரும்புலிகள் தகர்த்தினர். அத்தாக்குதலில் ஈடுபட்டு பலியானவர்களில் இரண்டுபேர் பெண்கள். நான்கு கரும்புலிகள் அதில் பலியாகினர்.

கரையோர ரோந்துப் படகொன்றும் கரும்புலிகள் நால்வரால் தாக்கப்பட்டது.

வெடிமருந்து நிரப்பிய படகுகளோடு வந்து மோதும் கடற் கரும்புலிகள், இலங்கை கடற்படைக்கு பெரும் சவாலாக மாறியுள்ளனர்.

கடற் போரில் புலிகளது கரம் மேலோங்க கடற்கரும்புலிகள் மனித ஆயுதங்களாக முக்கிய பாத்திரம் வகிக்கிறார்கள்.

புலிகளது உத்தியோக பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்" பத்திரிகையில் கடற்படை வசம் உள்ள இரண்டு பாரிய கப்பல்களது படங்கள் வெளியாகியுள்ளன.

அந்தப் புகைப்படங்களுக்கு மேலே காணப்படும் வாசகம் இப்படி இருக்கிறது.

**"இதுவரை தாக்கப்படாத கடற் கலங்கள்."**

தம்மால் இன்னமும் தாக்கப்படாத நிலையில் உள்ளவை மூன்றே மூன்று போர்க்கப்பல்கள் மட்டுமே என்று புலிகள் கூறுகின்றனர்.

கடற் புலித் தாக்குதலுக்கு இரையான கடற்படை கப்பல்கள்-மற்றும் படகுகளின் எண்ணிக்கை பதினொன்று. இவற்றில் முற்றாக மூழ்கடிக்கப் பட்டவை ஏழு.

கடற்படைக்கு இவை பாரிய இழப்பு என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால், மனித வெடி குண்டுகள் செலுத்திவரும் படகுகளை எதிர்கொள்வது லேசுப்பட்ட காரியமல்ல. கடற்படையின் தாக்குதல் திறன் எத்தனை உயர்ந்ததாக இருப்பினும் கடற் கரும்புலிகள் ஒரு சவால்தான்.

கடற்போரின் நோக்கம் பற்றி புலிகள் வெளிப்படையாகவே பேசுகிறார்கள்.

'விடுதலைப் புலிகள்' பத்திரிகை இவ்வாறு கூறுகிறது:

"...கடற்படையின் அசைவியக்கத்தை கட்டுப்படுத்தும் வல்லமையை கடற்புலிகள் பெறுவார்களேயானால்; அது வட தமிழீழத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டுவிட்டது என்ற செய்தியை உலகிற்கு அறியவைக்கும்."

புலிகளது கடற்போர் திட்டத்தில் பூநகரி இராணுவ முகாமும், ஆனையிறவு இராணுவ முகாமும் இலக்குகளாக இருக்கின்றன.

பூநகரி முகாம்மீது புலிகள் ஒரு பாரிய தாக்குதலை நடத்தியிருந்தனர். நூற்றுக்கணக்கான புலிகள் அதில் பலியானார்கள்.

உடனடிப் பிரச்சனை பற்றிய பேச்சில் பூநகரி இராணுவ முகாம் அகற்றப்படவேண்டும், கடல் தடைமுற்றாக நீக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளில் புலிகள் உறுதியாக நிற்பதும் அதனால்தான். ஆனால் கடல் தடை நீக்க கோரிக்கை யாழ் குடாநாட்டு மீனவர் நலனுக்கும் ஏற்றது என்பதை மறுப்பதற்கில்லை. யாழ் குடாநாட்டில் தமது வியூகம் உடைந்துபோவதை படைத்தரப்பு அனுமதிக்காது.

பூநகரி இராணுவ முகாமை அகற்றுவதற்கு படைத்தரப்பு மறுப்பதற்கு அதுதான் காரணம். தாம் ஏன் மறுக்கிறோம் என்பதை படைத்தரப்பு வெளிப்படையாக சொல்லத் தயங்குகிறது.

பலமே எதனையும் தீர்மானிக்கும் என்றாகிவிட்ட நிலையில் இரு தரப்புமே தமது பிடிகளைவிட உடனே சம்மதிப்பது சாத்தியமில்லைத்தான். ■

## அதிரடி அய்யாத்துரை



வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் நம்மூர் காரர்களை ரெண்டு எழுத்தாரின் சுங்கப்பகுதியினர் தேநீர் கொடுத்து உபசரிக்கினம். அதுக்குப் பிறகு நல்லா அலசிப் பார்த்து போட்டுத் தான் 'தமிழீழத்துக்கை' பிரேவசிக்க அனுமதிக்கினமாம். சுங்க இலகா தாண்டிக்குளத்திலே இருங்குங்கோ.

திருவானமலையிலே ஒரு சங்கத்திலை நடக்கும் ஊழல் பற்றி முரசு செய்தி போட்டதல்லோ. சங்கப் புள்ளி ஒண்டு சுடுநீரை உடம்பில் ஊற்றியது மாதிரி ஓடுபட்டுத்திரியுறாராம். நிருபரை பொலிஸில் பிடித்துக் கொடுக்கப் போகிறேன் என்றாராம். ஹி..ஹி...ஹி அதெல்லாம் கிடக்க சங்கப் புள்ளி ஒருத்தர் பிரேமானந்தசாமி ரகத்தினராம். அன்னார் எழுதிய காதல் கடிதங்கள் திரட்டப்படுகுது பாருங்கோ.

'ஹலோ மணி' எண்டால் என்ன தெரியுமோ? யாழ்ப்பாணத்திலை இருந்து வாற எங்கட சனம் வெளிநாட்டிலை இருக்கிற தங்கடை பிள்ளைகளுக்கு தொலைபேசி எடுப்பினம். அதுகள் அங்கை படுற கஷ்டம் தெரியாமல் 'ஹலோ நான்தான் கொப்பர் பேசுறன். ஒரு லட்சம் ருபா உடனடியாக தேவையா கிடக்கு அனுப்பு" அங்கை அவன் கடன் கிடன் பட்டு அனுப்ப வேணும். ஆனால் பாருங்கோ போன் எடுத்த ஒரு மணி நேரத்திலை ஒரு லட்சம் ருபாவும் கையிலை இஞ்சை கிடைக்கும். அதுக்கெல்லாம் நிறுவனங்கள் இருக்கு. அமெரிக்காவிலை உள்ள ஏஜென்சியிட்டை காசைக் கட்டினா அவர் உடனடியாக போன் எடுத்து கொழும்புலை உள்ள தன்ரை கூட்டாளி ஏஜன்சியிட்டை சொல்லிப்போடுவார். அப்பா போனால் கையிலை கட்டுக்கட்டா காசு. இதைத்தான் "ஹலோ மணி கிலோக்கணக்கில் வருகுது' எண்டு சொல்லுறது.

வெகுஜன சபையிலை நீலமானவர் நல்லாத்தான் உரையாற்றினவர். ஆளும் தரப்பும், எதிர் தரப்பும் கவனமாய் கேட்டுக்கொண்டிருந்தவை. ஆனால் ஒரு வேடிக்கை அவரது சகாக்கள் மட்டும் அவர் பேசும்போது தேநீர் விடுதியலை போய் இருந்திட்டினம். ஒருத்தர் கூட இருக்கேல்லை. பேசி முடியத்தான் உள்ளே வந்தவையாம்.

"பிரச்சினை முடிஞ்சு போச்சு எண்டு, சந்தோசத்திலை இருக்க வேண்டாம்" எண்டு யாழ்ப்பாணத்திலை ரெண்டு எழுத்தார் ஜாடை மாடையாக சொல்லித்திரிகினமாம்.

சுவிசிலை இருந்து எங்கடை ஆட்களை திருப்பியனுப்பக்கூடாது எண்டு போராட்டம் நடக்குதல்லோ. அதிலை கலந்துகொள்ளாமல் அங்குள்ள ரெண்டு எழுத்தார் தூரத்தான் நிக்கினமாம். வேணுமெண்டால் தாங்கள் மட்டுமே போராட்டம் நடத்துவம் எண்டு சொல்லுகினமாம்.

சமாதானப் பிரியராக பேசித்திரியும் விநோதமானவருக்கு கட்சியிலை இடம் இல்லை எண்டு சொல்லிப்போட்டினமாம். வியாபாரத்துக்காக கட்சியை பயன்படுத்தினதும், கட்சிக்கும் தனக்கும் ஒரு தொடர்பும் இல்லை எண்டு அதிகாரமில்லாத காலங்களில் சொல்லித்திரிந்ததும் மேலிடத்திலை தெரியுமாம். இது தெரியாமல் அவரை பிரதம விருந்தினராகச் சிலர் அழைத்துக்கொண்டு திரிகினம். கவிதை வெளியீட்டு விழா ஒன்றிலை அவரை பின்வரிசையிலை கூட்டத்தோடுகூட்டமாக இருக்க வைச்சுப் போட்டினமாம்.

தீங்கமானவர் விவகாரத்திலை செயலர் பிழை விட்டுப் போட்டார் எண்டதுதான் தலைவரின் அபிப்பிராயமாம். அதை வெளிப்படையாச் சொன்னால் திருவானமலையிலே பிரதேச பிரச்சனையை செயலர் கிளப்பலாம் எண்டுதான் சொல்லாமல் இருக்கிறாராம. "எங்களைக் கேட்டோ ஒப்பந்தம் செய்தவை" எண்டு கேட்கிறாராம். கிழக்கில் கூட்டணியிலை செல்வாக்கானவரான தலைவர் "காயமே இது பொய்யடா காற்றடித்தத பையடா" ஆனால் பதவி அப்பிடியில்லையாக்கும். அதுதானே அடிபிடி நடக்குது.

மு.மேத்தா எழுதிய புதுக்கவிதை ஒன்று பார்வையில் பட்டு மனதில் பதிஞ்சு போச்சு.

*"பதவி ஒரு*
*நாடக மேடை!*
*உள்ளே வருபவன்*
*ஒப்பனை செய்யப்படுகிறான்.*
*மேடைப் பிரகாசத்தில்*
*மினுமினுக்கிறான்.*

*வெளியேறும் போதுதான்*
*அவன்*
*வேடம் கலைகிறது."*

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை 15

# அரசியல் தொடர்

## அற்புதன் எழுதுவது

### வயது குறைந்த வாக்குறுதி

"இந்த தேர்தலில் நீங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் தமிழீழம் அமைப்ப தற்காக வழங்கும் ஆணையாகும்.

அடுத்த பொதுத் தேர்தல் சுதந்திரம் பெற்ற தமிழீழத்தில்தான் நடைபெறும்."

1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பொதுக் கூட்ட மேடைகளில் செய்த முழக்கம் அதுதான்.

அரசியலில் வாக்குறுதிகளின் ஆயுள் எப்போதும் மிகக் குறைவானதாக இருக்கிறது.

கூட்டணியினர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி நான்கு வயதுவரைகூட வாழவில்லை.

1981ம் ஆண்டு தமிழீழ கோரிக்கைக்கு பதிலாக கிடைத்த மாவட்ட அபிவிருத்தி சபையோடு தேர்தலில் போட்டியிட்டனர் தமிழர் விடுதலைக் கூட்டணியினர்.

மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலை நிராகரிப்பது என்று உமா-சுந்தரம் குழுவினர் முடிவு செய்தனர்.

'புதிய பாதை' பத்திரிகையில் மாவட்ட அபிவிருத்தி சபையைக் கண்டித்து காரசாரமான விமர்சனங்கள் தொடுக்கப்பட்டன.

புலிகளுக்குள் ஏற்பட்ட பிளவை ஆதியோடந்தமாய் அமிர் அறிந்து வைத்திருந்தார்.

அதனால் உமா-சுந்தரம் குழுவினர் தனது தலைமைக்கு எதிரானவர்கள் என்ற

### அமுதரும் சோசலிசமும்

தமிழர் விடுதலைக் கூட்டணி முதலாளித்துவ தலைமை; தமது நலன்கள், பதவிகள் என்வற்றை பாதுகாத்துக்கொண்டு தான் உரிமைப் போராட்டம் பற்றிய முடிவுகளை எடுப்பார்கள்."

இவ்வாறு இடதுசாரி சிந்தனையுள்ள தமிழ் இளைஞர்கள் கூறினார்கள்.

உமா-சுந்தரம் குழுவினரும் அவ்வாறு தான் கருத்துக்கொண்டிருந்தனர்.

அதற்கு அமுதர் உடனடியாக பதில் அளித்தார்.

"நான் இலங்கையின் பிரபல இடதுசாரி என்.எம்.பேரேராவின் மாணவன். சோசலிசத்தை விரும்புபவன்.சோசலிச தமிழ் ஈழம் என்றே எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறிப்பிட்டிருக்கிறோம்."

என்று பேசுவார் அமிர்.

இந்த இடத்தில் ஒரு சம்பவத்தை கூறவேண்டும்.

1980களில், யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக கிளர்ந்தெழுந்தார்கள்.

"வேகம் போதாது. தமிழ் ஈழத்தை கூட்டணி பெற்றுத்தராது. பாராளுமன்ற வாதிகளால் போராட்டம் நடத்த முடியாது."

என்றெல்லாம் பிரசாரம் செய்த யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் செய்த ஒரு காரியம் கூட்டணியினரை கோபடவைத்தது.

அமிர்தலிங்கத்தின் கொடும்பாவியை வீதி வீதியாக இழுத்துச்சென்று கொளுத்தி எரித்தனர் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்.

மாணவர்கள் தமது பிடியைவிட்டுச் வேண்டும் என்ற வேகத்தோடு மேடையில் பேசினார் ஆலாலசுந்தரம்- 'அடலேறு' ஆலாலசுந்தரம்.

"குதிரை ஓடி வந்த-சிலதுகள் யாழ் பல்கலைக்கழகத்திற்குள் படிக்க விருப்பமில்லாமல் குழப்பவேலை செய்கின்றன."

### குரும்பசிட்டி கொள்ளை

யாழ்ப்பாணம் குரும்பசிட்டியில் வன்னியசிங்கம் நகை அடைவு கடையில் பிரபாகரன் அணியினரும், குட்டிமணி-தங்கத்துரை குழுவினரும் இணைந்து நடத்திய கொள்ளை பற்றி சென்றவாரம் குறிப்பிட்டிருந்தேன்.

கொள்ளை நடவடிக்கையை எதிர்த்த பொதுமக்களில் ஒருவர் கொல்லப்பட்டதாக நினைவு என்று கூறியிருந்தேன்.

அதில் ஒரு திருத்தம். 'அச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் இரண்டுபேர். ஒருவரது பெயர் குலேந்திரன். இன்னொருவர் பெயர் ஐயாத்துரை.' காயப்பட்டவர்கள் மூவர். அக் கொள்ளை நடவடிக்கைக்கு தகவல் கொடுத்து உதவியவர் நகை அடைவு நிலைய உரிமையாளரான வன்னியசிங்கத்தின் மைத்துனர் தான் என்பதும் குறிப்பிடத் தவறிய விடயம்.

என்றார் அவர். கூட்டத்தை அவதானித்துக்கொண்டிருந்த மாணவர்களில் சிலர் கற்களை எடுத்துக்கொண்டனர். அவர்களை வேறு சில மாணவர்கள் தடுத்துவிட்டதால் ஆலாலசுந்தரத்தின் தலை தப்பியது.

குதிரை ஓடுவது என்றால் தனக்கு பதிலாக இன்னொருவரை பரீட்சை எழுத வைத்து பாஸ் ஆவது என்று பொருள்.

அதன்பின்னர் மறந்தும்கூட அமுதரைப் போற்றிப் பேசியதில்லை அவர்.

இப்போது மீண்டும் 1981 மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல் களத்துக்கு செல்லலாம்.

### தியாகருக்குக் குறி

மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக தலைமை வேட்பாளராகப் போட்டியிட்டவர் தியாகராசா.

தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினராகியபின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சென்றவர். 1977 பொதுத் தேர்தல் தோல்விக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்திருந்தார்.

தியாகராசாவுக்கு முன்னர் கொழும்பில் குறிவைக்கப்பட்டது பற்றி ஏற்கனவே கூறியிருந்தேன்.

இப்போது 1981ல் மீண்டும் குறிவைக்கப் பட்டது. கூட்டம் ஒன்றில் உரையாற்றிவிட்டு தனது காரை நோக்கிச் சென்றார் தியாகராசா.

திடீரென்று துப்பாக்கி ஒன்று வெடித்தது. குறி தவறவில்லை.

தியாகராசாவின் உயிர் பிரிந்தது. உமா-சுந்தரம் குழுவில் இருந்த ஜெயா மாஸ்டர் என்பவரே அச் சம்பவத்தில் முக்கிய பங்கு வகித்தார்.

1981ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

அன்றுதான் மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலுக்கான பிரசாரங்கள் நிறைவு பெறும் நாளாகும்.

அக்கூட்டத்தை குழப்புவதன் மூலமாக தேர்தலில் மக்கள் வாக்களிக்காமல் தடுக்கலாம் என்று உமா-சுந்தரம் குழுவினர் நினைத்தனர்.

அதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. கூட்டம் குறித்த நேரத்தின் பின்னரே ஆரம்பித்தது.

### கூட்டத்தில் தாக்குதல்

கூட்டத்திற்கு பாதுகாப்பாக பொலிசார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

சைக்கிள்களில் வந்து இறங்கிய இளைஞர்கள் கூட்டத்திற்கு பாதுகாப்பாக நின்ற பொலிசாரை நோக்கி சுட்டனர்.

வேட்டுச் சத்தம் கேட்டவுடன் கூட்டத்தினர் பரபரப்படைந்தனர்.

குண்டர் படையும் பயன்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாண மக்கள் கல்வியை பிரதானமாக வைத்தே முன்னேறி வருபவர்கள். யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கும் மிக உயர்ந்த தண்டனை, யாழ் நூலகத்தை எரிப்பதுதான் என்று திட்டமிடப்பட்டது. எரிப்பதற்கு எரிபொருள் வேண்டுமல்லவா?

கொழும்பிலிருந்தும், அநுராதபுரத்தில் இருந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்தும் பெற்றோல் நிறைந்த தாங்கிகள் யாழ் நகருக்கு வரவழைக்கப்பட்டன.

அப்போது பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் முக்கிய பொறுப்பில் இருந்தவர் காமினி லொக்குகே. சிறில் மத்தியூவின் அமைச்சின் கீழ் இருந்தது அந்த கூட்டுத் தாபனம். காமினி லொக்குகே சிறில் மத்தியூவின் விசுவாசி. இவர் பின்னர் ஐ.தே.கட்சி ஆட்சியில் அமைச்சராகவும் இருந்தார்.

பெற்றோல் தாங்கிகள் வந்து சேர்ந்ததும் நூலக எரிப்பு ஆரம்பமானது. **ஆசியாவின் மிகச் சிறந்த நூலகத்தை திட்டமிட்டு மூட்டிய தீ சாம்பலாக்கியது.**

தமிழர்களுக்கு எதிரான அந்த கலாசார படுகொலைக்கு காமினி திசநாயக்காவும், சிறில் மத்தியூவும் காரணம் என்று கூட்டணியினரும் குற்றம் சாட்டினார்கள். ஆவேசப்பட்டதுபோல பேசினார்கள்.

1994 நவம்பரில் காமினி கொல்லப்பட்ட பின்னர் கூட்டணியினர் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது:

**"மிகச் சிறந்த ஜனநாயகவாதியொருவரை நாம் இழந்துவிட்டோம்."**

யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் திரு யோகேஸ்வரனின் வீடு யாழ்ப்பாணத்தில் இருந்தது. அங்கும் பொலிசார் புகுந்தனர். திரு.யோகேஸ்வரனும் அவர் மனைவியும் பின்புற வழியால் ஓடி உயிர் தப்பினார்கள். வீட்டை பொலிசார் தீயிட்டுக் கொளுத்தினார்கள்.

யாழ் நகரில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகமும், அங்கிருந்த ஆவணங்களும் தீக்கிரையாகின.

திட்டமிட்டு இட்ட தீயில் யாழ் நகரம் எரிந்துகொண்டிருந்தது.

இலங்கை முழுவதும் இனக்கலவரத் தீயில் தமிழர்கள் எரிந்துகொண்டி

# வேட்டோசை கேட்டது; வீரப் பேச்சாளர்கள் ஓட்டம்!

கோபத்தில் இருந்தார்.

பிரபாகரன் தனக்கு எதிராகச் செல்ல மாட்டார் என்ற நம்பிக்கையில் இருந்த அமிர், உமா-சுந்தரம் குழுவினரது நிராகரிப்பு பிரசாரத்தைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

### அமுதர் தனித்து நின்றார்

யாழ் நகரில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரசாரக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது.

தலைவர் அமிர் உட்பட மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் வேட்பாளர்கள் மேடையில் அமர்ந்திருந்தனர்.

திடீரென்று கூட்டத்தில் சலசலப்பு.

ஆயுதங்களோடு தோன்றினார்கள் சில இளைஞர்கள்.

அவர்கள் வானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கூட்டத்தினர் சிதறி ஓடத் தொடங்கினார்கள். "உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு." ,"உச்சி மீது வான் இடிந்து வீழ்ந்தாலும் அஞ்சோம்." என்றெல்லாம் சிங்கம் போல் கர்ஜிக்கக்கூடிய பேச்சாளர்கள் மேடையில் வீற்றிருந்தனர்.

வான் இடிந்து விழவில்லை; வானை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்கள் மட்டுமே தீர்க்கப்பட்டன.

பொதுக்கூட்ட மேடையில் தளபதி அமிர் மட்டுமே தனித்து நின்றார். அவரோடு வீற்றிருந்தவர்களை காணவில்லை.

உடலை மண்ணுக்கும், உயிரைத் தமிழுக்கும் கொடுக்க இது தருணமல்ல என்று நினைத்து தப்பியோடினார்களோ தெரியவில்லை.

அமுதர் ஓடவில்லை. அசையாமல் நின்றார். 'கூவிப் பிதற்றமட்டுமே' தெரிந்த தனது அணியினரை நினைத்து நிச்சயம் அவர் வருந்தியிருப்பார்.

துணிச்சலைப் பொறுத்தவரை இரும்பு மனிதன் நாகநாதனுக்குப் பின்னர் அமுதர்தான்; அவரது இடத்தை நிரப்ப அப்போதும் சரி இப்போதும் சரி கூட்டணியில் ஆள் கிடையாது.

யாழ் நகர் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. உமா-சுந்தரம் குழுவினரே அந்தக் கூட்டத்தை குழப்பினார்கள்.

அவர்கள் நினைத்திருந்தால் அமுதரை சுட்டிருக்க முடியும். அவ்வாறான ஒரு எண்ணம் அப்போது யாருக்குமே எழுந்திருக்கவில்லை.

ஏனெனில்,ஆயுதப் போராட்ட அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் அனைவருமே அமுதரை நேசித்தே வளர்ந்தவர்கள்.

தலைவர்களது வேகம் போதாது என்று கோபப்பட்டார்கள்; அவர்களது உயிர் வேண்டும் என்று குறிவைக்கவில்லை.



செல்லத் தொடங்கிவிட்டதை கூட்டணி கவலையோடு கவனித்தது.

1971ல் தரப்படுத்தலுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த தமிழ் மாணவர்களையும், தமிழ் மாணவர் பேரவையையும், தனது தலைமையின் கீழ் கொண்டுவந்தவர்கள் கூட்டணியினர்.

1980களில் மாணவர்கள் தமக்கெதிராக மாறிவிட்டதை சகிக்க முடியவில்லை.

கொடும்பாவி எரிப்பை கண்டிக்க யாழ், பல்கலைக்கழகம் முன்பாக உள்ள ஒரு வளவுக்குள் தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுக்கூட்டம் நடத்தியது.

பொதுக்கூட்ட மேடையைச் சுற்றி பொலிசார் பாதுகாப்பு வழங்கினார்கள். மேடையில் இருந்து ஒரு குறிப்பிட்ட தூரம் வரை கயிறுகட்டி யாரும் மேடையை நெருங்க முடியாதவாறு பாதுகாப்பு செய்யப்பட்டது.

### மாணவர்கள்மீது - பாய்ச்சல்

தமக்கு எதிரான அரசியல் வாதிகளை துரோகிகள் என்று கூட்டணியினர் முன்னர் கூறுவது வழக்கம்.

கூட்டணியினர் யாரைப் பார்த்து துரோகிகள் என்று சுட்டிக்காட்டுகிறார்களோ அவர்களை மாணவர்களும் இளைஞர்களும் விரோதமாக நோக்குவது 1970களில் நடந்த கதை.

ஆனால், 1980களில் நிலமை தலைகீழாகியிருந்தது.

மாணவர்கள்மீது சீறினார்கள் கூட்டணியினர். அரசாங்கத்திடம் சலுகைகள் எதிர்பார்க்கும் விரிவுரையாளர்கள் சிலர் மாணவர்களைத் தூண்டிவிடுகிறார்கள் என்றும் பேசினார்கள்.

அனைத்து வசைகளையும் மிஞ்சிவிட தமக்கு எதிரானவர்கள் என்றால் அவர்களை தரம்தாழ்த்துவதில் சகல நாகரீக எல்லைகளையும் தாண்டிச்சென்று வசைபாட 'தலைவர்கள்' தயங்கியதேயில்லை.

அந்தக் கூட்டத்திலே மிக முக்கிய பேச்சாளராக விளங்கியவர் உணர்ச்சிக் கவிஞர் என்றழைக்கப்படும் காசி ஆனந்தன்.

"மாக்சிசத்தை படித்தவன்-கிழித்தவன் எவனாவது இருந்தால் வா. என் தலைவர் அமிரோடு விவாதிக்க உங்களுக்கு தகுதியில்லை. என்னோடு வா. விவாதம் நடத்தலாம்."

பல்கலைக்கழக மாணவர்களுக்கு சவால்விட்டு காசி ஆனந்தன் பேசியது அது.

### தம்பியும்-தளபதியும்

காசி ஆனந்தன் என்றவுடன் இன்னொரு சம்பவமும் நினைவுக்கு வருகிறது. அதையும் இப்போதே சொல்லிவிடுகிறேன்.

1983க்கு பின்னர்-ஆண்டு நினைவில்? தமிழ்நாட்டில் மதுரையில் ஒரு பொதுக் கூட்டம். அதில் கலந்துகொண்டு காசி ஆனந்தன் உரையாற்றினார்.

**"தம்பி பிரபாகரன் தமிழீழத்தை மீட்டெடுத்து தளபதி அமுதரின் காலில் சமர்ப்பிப்பார்."**

என்று பேசிவிட்டார், காசி ஆனந்தன். அப்போது அமுதரோடு பிரபா முரண்பட்டிருந்த நேரம்.

காசி ஆனந்தனை கூப்பிட்டனுப்பினார் பிரபாகரன். அவ்வாறான பேச்சுக்களை நிறுத்துமாறு பிரபா கண்டிப்பாக தெரிவித்து விட, கப்சிப்பாகிவிட்டார் காசி ஆனந்தன்.

# திட்டமிட்டு இட்டதீ! தீவிரமான போராட்டம்!!

அப்போது யாழ் மாநகரசபை மேயராக இருந்தவர் விசுவநாதன்.

அவர் வேட்டுச் சத்தத்தை பட்டாசுச் சத்தம் என்று நினைத்து விட்டார். ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்துகிறார்கள் என்று நினைத்து,

"பதட்டப்படாதீர்கள். பட்டாசு சத்தம்தான் கேட்கிறது."

என்று விசுவநாதன் கூறிக்கொண்டிருந்தபோது இரண்டு பொலிசார் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கொண்டிருந்தனர்.

விபரீதம் புரிந்து கூட்டத்தினர் சிதறியோடினார்கள். இளைஞர்கள் தப்பிச் சென்றனர். இரண்டு பொலிசார் (கொல்லப் பட்ட) அத்தாக்குதலில் முக்கிய பங்கு வகித்தவர்களில் ஒருவர் தற்போது புளொட் அமைப்பின் தலைவர்களில் ஒருவராக உள்ள மாணிக்கதாசன். 83ல் வெலிக்கடை படுகொலையில் கொல்லப்பட்ட றொபேட்டும் அத்தாக்குதலில் ஈடுபட்டவர்களில் ஒருவர்.

இரண்டு பொலிசார் சுட்டுக்கொல்லப் பட்ட செய்தியறிந்த பொலிசார் இரவோடு இரவாகவே கண்மூடித்தனமான தாக்குதல்களில் ஈடுபடத் தொடங்கினர்.

### எரிந்தது யாழ்ப்பாணம்

நாச்சிமார் கோவிலடியில் ஆரம்பித்து யாழ் நகர் வரை தனியார் கடைகளும், வீடுகளும் பொலிசாரால் தீ வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் இருந்து அப்போது வெளியாகிய ஒரே ஒரு தினசரியான ஈழநாடு பத்திரிகை காரியாலயமும் எரிக்கப்பட்டது.

**யாழ்- சுபாஸ் விடுதியில் வந்து தங்கியிருந்தனர் முக்கிய அமைச்சர்கள்.**

**காமினி திசநாயக்கா, இனவாதத்தின் மொத்தவடிவமாக விளங்கிய சிறில் மத்தியூ ஆகியோர் யாழ் நகர் எரியும் காட்சியை கண் நிறையக் கண்டனர்.**

**மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலில் தில்லுமுல்லுகள் செய்யும் திட்டத்தோடு ஒரு குண்டர் படையும் அவர்களால் அழைத்து வரப்பட்டிருந்தது.**

நாச்சிமார் கோவிலடி தாக்குதலையடுத்து யாழ் நகரை எரிப்பதற்கு அந்த

ருந்தார்கள்.

ஜே.ஆர்.அரசாங்கமோ அதன் ஆயுதப் படைகளோ நினைத்திருந்தால் தடுத்திருக்கலாம்.

ஒரு கடுமையான பாடம் படிப்பிப்பதன் மூலமாக தமிழர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதை ஜே.ஆர்.அரசாங்கம் விரும்பியது போலவே கோரமான நடவடிக்கைகள் கோலோச்சின.

### உணர்த்திய உண்மை

தமிழ் மண்ணில்கூட தமிழ் பேசும் மக்கள் தமது கலாசாரத்தை, தமது தனித்துவங்களை, தமது உயிர்களை, உயிரிலும் மேலான அறிவாலயங்களை பாதுகாக்க முடியாது என்ற உண்மையை அடித்தும் சுட்டும், எரித்தும் உணர்த்தியது ஜே.ஆர் அரசாங்கம்.

தீவெங்கும் எரிந்த தீ இளைஞர்கள் நெஞ்சங்களில் பற்றிக்கொண்டது.

அகிம்சை மீதான நம்பிக்கை செத்துப் போனது.

மகாத்மா காந்தி சொன்ன 'செய் அல்லது செத்துமடி' ஆயுதப் போராட்டத்தால் வாங்கிக்கொள்ளப்பட்ட கோஷமானது.

ஆயுதப் போராட்டம்மீது தமிழ் மக்களும் நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தனர்.

அதே சமயம் அரச பயங்கரவாதத்திற்கு எதிர்ப்பை காட்டும் வகையில் 1981 ஜூனில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலில் தமிழர் விடுதலைக் வட்டணிக்கு மக்கள் வாக்களித்தனர்.

அடக்குமுறைக்கு பதிலடி கொடுக்கும் ஓர் ஆவேசமான வெளிப்பாடாகவே வாக்களிப்பு அமைந்திருந்தது.

81ல் நடைபெற்ற அரச பயங்கரவாதத்திற்கு தமது நடவடிக்கையே காரணம் எனக் கூறப்பட்டுவிடும் என்று நினைத்த உமா-சுந்தரம் குழுவினர் நாச்சிமார் கோவிலடித் தாக்குதலுக்கு உரிமை கோராமல் இருந்துவிட்டனர்.

இதேவேளை இயக்க மோதல்களும் தோன்றத் தொடங்கின.

உமா-சுந்தரம் குழுவினரை ஒழித்துக் கட்ட திட்டம் தீட்டப்பட்டது. பிரபா வகுத்த திட்டம் அது.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# 'களம்கண்ட ஹமில்டன் இராஜினாமா!

**அலசுவது—இராஜதந்திரி**


ஜெனரல் ஹமில்டன் வணசிங்க

பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க இராஜினாமாச் செய்துள்ளார்.

இந்த இராஜினாமா விவகாரம், பாதுகாப்புத் துறையின் உயர் மட்டத்தில் புதிய திருப்பங்கள், நடைமுறைகளுக்கு வழிவிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த பல வருடங்களாக பாதுகாப்புத்துறை ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கக் காணப்படுகின்றது. முப்படைகளினதும் பலம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கான செலவீனங்களும் பன்மடங்காகப் பெருகியிருக்கக் காணப்படுகின்றது.

பாதுகாப்பமைச்சின் செயலாளராக இருந்த ஜெனரல் ஹமில்டன் வணசிங்க, இன்றைய வடக்கு-கிழக்கு யுத்தத்துடன் மிகவும் பிணைந்திருக்கக் காணப்படுகின்றார்.

யாழ்ப்பாணக் கமாண்டராகப் பணிபுரிந்ததுடன் இராணுவத்தின் பிரதம தளபதியாக உயர்ந்து பின்னர் பாதுகாப்பமைச்சின் செயலாளராக ஜெனரல் வணசிங்க பதவி வகித்தார்.

இராணுவத்தின் தலைமையைப் பொறுத்தவரை பிரதம தளபதி என்ற பதவியையும், அதற்கு மேற்பட்ட பொறுப்புக்களையும் ஏற்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத் தளபதிப் பதவி ஒரு படிக்கல்லாகவே இருந்து வந்துள்ளது.

ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் 1979ம் ஆண்டு பிரிகேடியர் வீரதுங்க யாழ் மாவட்ட கமாண்டராக அனுப்பிவைக்கப்பட்டிருந்தார். அவருக்கு யாழ்ப்பாணத்தில் வன்முறைகளை முற்றாகக் களை எடுக்கும் பொறுப்பு ஜே.ஆரினால் வழங்கப்பட்டிருந்தது.

## யாழ்ப்பாணத்தில் சாதனை படைத்த லைல்பல்தஸார்!

ஏறத்தாழ ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் நிறைவேற்று அதிகாரத்தைத் தாங்கிய ஒரு பிரதிநிதியாகவே பிரிகேடியர் வீரதுங்க யாழ்ப்பாணத்தில் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்.

பிரிகேடியர் வீரதுங்கவை யாழ் மாவட்ட கமாண்டராக ஜே.ஆர்.ஜயவர்த்தனா நியமித்ததற்கு பல்வேறு காரணங்கள் இருந்தன. அன்று ஜே.ஆரின் மனத் திருப்திக்கேற்றவாறு அவரது குறிப்பறிந்து செயலாற்றக்கூடியவராக மட்டுமல்லாது, ஜே.ஆரின் உறவுக்காரராக அவரது நம்பிக்கைக்குப் பொறுப்பானவராகவும் பிரிகேடியர் வீரதுங்க விளங்கியிருந்தார்.

பிரிகேடியர் வீரதுங்க கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர். பள்ளிக் காலத்தில் அக் கல்லூரியின் றகர் பந்தய அணியிலும் (Rugger Team) ஒரு முரட்டுத்தனமான வீரராக அவர் இருந்தார் என்று கூறப்படுவதுண்டு.

இதனால் அவர் 'புல் வீரதுங்க' (Bull Weeratunge) அதாவது 'மாட்டு வீரதுங்க' என்றே அவரது வட்டத்தில் அழைக்கப்பட்டிருந்தார்.

எனவே யாழ்ப்பாணத்தில் அன்று ஆரம்பித்திருந்த கிளர்ச்சிகள், எதிர்ப்புக்களை கையாளும் பொறுப்பு 'மாட்டு வீரதுங்க' என்றழைக்கப்பட்ட பிரிகேடியர் வீரதுங்கவிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது.


பிரிகேடியர் வீரதுங்க யாழ் மாவட்ட கமாண்டராகப் பதவியேற்றதும் வடபகுதிக்கு இலங்கை இராணுவத்தின் கவச வாகனப்பிரிவுகளும் கொண்டுவரப்பட்டிருந்தன. இக்கவசவாகனப் பிரிவுகள் யாழ்ப்பாணத்தின் சிங்கள மகாவித்தியாலய வளவு, மற்றும் துரையப்பா விளையாட்டரங்கு என்று முன்பு அழைக்கப்பட்ட இன்றைய யாழ்ப்பாண விளையாட்டரங்கு ஆகியனவற்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

காலை, மாலை, இரவு வேளைகளில் இந்த கவச வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக யாழ்ப்பாண நகர வீதிகளில் மெதுவாக வலம்வர ஆரம்பித்தன.

இந்த வாகனங்களின் மேல் புறத்தில் தலைக் கவசம் அணிந்து கறுப்புச் சீருடை அணிந்த கவச வாகனப்பிரிவு சிப்பாய்கள் அமர்ந்திருந்து பாடசாலைகளை அண்டிய சந்திகள், மற்றும் கோயில் வீதிகள், சனநடமாட்டமுள்ள பகுதிகளில் தமது கவச வாகனங்களை நிறுத்தி வைத்துக்கொண்டும் நிற்பதுண்டு.

அவ் வாகனங்கள் நீண்ட துப்பாக்கிக் குழாய்கள், மற்றும் இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்டு, தமது அசுரத்தன்மையைப் பறைசாற்றியதை பாடசாலை மாணவர்கள், பாதசாரிகள் ஆகியோர் அன்று மனப் பீதியுடன் பார்த்துச் சென்றனர்.

கவச வாகனங்களும்; படையினரும் யாழ்


ஜெனரல் சிறில் ரணதுங்க

## யாழ் டச்சுக் கோட்டையைச் சுற்றி வியூகம் அமைத்தவர்

மாவட்டத்தில் பவனிவர ஆரம்பித்ததையடுத்து பிரிகேடியர் 'புல் வீரதுங்க' தமது யாழ் மாவட்ட கமாண்டர் பணியை ஆரம்பித்திருந்தார்.

யாழ்ப்பாண அரச அதிபரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான யாழ் பழைய பூங்கா பங்களாவையே தமது இருப்பிடமாகவும் மாற்றி அங்கிருந்தே 'புல் வீரதுங்க' தமது கடமைகளை மேற்கொண்டு வந்தார்.

அக்காலப் பகுதியில் வடக்கே இளைஞர்கள் தலைமறைவாகும் படலம் படிப்படியாக ஆரம்பித்திருந்தது. தலைமறைவான சில இளைஞர்களின் சடலங்கள் ஆங்காங்கே கண்டெடுக்கப்பட்டன.

இதேவேளை இராணுவ விஸ்தரிப்பும் நாளுக்கு நாள் அதிகரிக்கப்பட்டுவந்தது. நாளடைவில் குருநகர்ப் பகுதி, நாவற்குழி,

ஆகிய இடங்களிலும் இராணுவ முகாம்கள் போடப்பட்டு குடாநாட்டில் படை பலம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிக்கப்படலாயிற்று.

'புல் வீரதுங்க'வின் நடவடிக்கைகள் மறைமுகமாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து அவருக்கு இரகசியமாக, புலனாய்வுப் பிரிவினர் மூலமாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அவரது மனம் போன போக்கில் இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

யாரிடம் கூறி எங்கே நீதியைப் பெறுவது? என்ற ரீதியில் அப்பாவிப் பெற்றோர்கள் ஆளரவமற்ற இடங்களில் கிடந்த தமக்குரியவர்களின் சடலங்களை எடுத்து அழுது புலம்பி இறுதிச் சடங்குகளை அன்று நடத்தினர்.

'புல் வீரதுங்க'வும் தமது பணிகளை நிறைவேற்றிய திருப்தியில் இருந்தபோதே பிரிகேடியர் தரத்திலிருந்தும் இராணுவ மேஜர் ஜெனரலாக இலங்கை இராணுவத்தின் பிரதம தளபதி என்ற அந்தஸ்த்துக்கு ஜே.ஆர்.ஜயவர்த்தனாவினால் வீரதுங்க பதவி உயர்த்தப்பட்டார்.

இந்நிலையில் வடபகுதி கமாண்டராக இருந்து இலங்கை இராணுவத்தின் பிரதம தளபதியாக உயர்வு பெற்ற முதலாவது இராணுவ அதிகாரியாக பிரிகேடியர் 'புல் வீரதுங்க' காணப்பட்டார்.

இலங்கை இராணுவத்தின் தலைமையை ஏற்று வடபகுதியில் ஏற்படக்கூடிய சர்ச்சைகளுக்கும் முடிவு கட்டிய திருப்தியில் ஜெனரல் வீரதுங்க இருந்த சமயத்திலேயே யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பகுதியில் இராணுவ வாகனத் தொடர் ஒன்று கண்ணி வெடித் தாக்குதலுக்கு இலக்கானது. இதில் அன்று வட பிராந்தியத்தின் முக்கிய இராணுவ அதிகாரிகளில் ஒருவராக இருந்த கேர்ணல் ஆரியப்பெருமா மரணத்தைத் தழுவினார்.

இந்நிலையில் வடக்கே உயிரிழந்த முதலாவது இராணுவ உயரதிகாரியாக கேர்ணல் ஆரியப் பெருமா விளங்கியிருந்தார். கேர்ணல் ஆரியப் பெருமாவின் மரணம் இலங்கை இராணுவத்தையும், அதனைப் பெரிதும் நம்பியிருந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவையும் உலுப்பிவிட்டிருந்தது.

ஜே.ஆர்.அரசாங்கத்துக்குச் சவால்விடும் பல்வேறு ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளும் வடக்கே ஆரம்பிக்கலாயின.

மாங்குளப் பகுதியில் படையினரை ஏற்றிச் சென்ற ரயில் வண்டியொன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டதையடுத்துத் தடம்புரண்டது. இதனையடுத்து அதில் பயணஞ் செய்த படையினர் பலர் கொல்லப்பட்டனர்.

அன்று இராணுவத் தளபதியாக கொழும்பில் இருந்த ஜெனரல் 'புல் வீரதுங்க' தாக்குதல் இடம்பெற்ற பகுதியை நேரில் பார்வையிட்டு, வடக்கே ஆயுதப் போராட்டம் பெற்றிருந்த வளர்ச்சியை நன்கு அனுமானிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றார்.

வடபகுதி கமாண்டராக ஜெனரல் வீரதுங்காவையடுத்து பிரிகேடியர் சிறில் ரணதுங்க பொறுப்பேற்றுக்கொண்டார். பிரிகேடியர் சிறில் ரணதுங்க குருநகர்ப் பகுதியில் தமது பாசறையை அமைத்து இயங்கி வந்தார்.

இவர் வடபகுதி கமாண்டராக பதவியேற்ற காலப் பகுதியிலேயே வடக்கே கத்தோலிக்க பாதிரிமார்களான வண.சிங்கராஜா, வண.சின்னராசா ஆகியோர் உட்பட பல இளைஞர்கள் அன்று சுற்றிவளைக்கப்பட்டு குருநகரில் விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர்.

பிரிகேடியர் சிறில் ரணதுங்கவின் காலப்பகுதியில் வடக்கே இராணுவ நடமாட்டம் முழு அளவில் விஸ்தரிக்கப்படலாயிற்று. மறுபுறம் அக்காலப் பகுதியிலேயே வடக்கு, கிழக்கில் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளும், வியாபிக்க ஆரம்பித்தன. பல்வேறு ஆயுதக் குழுக்களும் தோற்றம் பெறலாயின.

அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தம்மை வெளியே இனங் காட்டுவதைப் பெரிதும் தவிர்த்திருந்தனர். ஆனால் ஏனைய போராட்ட இயக்கங்கள் கிராமங்கள், மற்றும் ஊர்ப்புறங்களில் நடமாடித் திரிந்து தமது இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தனர்.

பிரிகேடியர் ரணதுங்க தங்கியிருந்த குருநகர்ப் பிரதேசம் படிப்படியாக ஒரு படைத் தளமாக மாற்றமடைய ஆரம்பித்திருந்தது. இரவில் இருளைக் கிழித்து நெடுந் தூரத்துக்கு ஒளியைப் பாய்ச்சும் மின்சாரம் குருநகர்ப் பிரதேசத்தில் போடப்பட்டு, படையினர் தமது நடமாட்டங்களை அதிகரித்து சந்தேகத்துக்கிடமானவர்களைக் கைது செய்வது, சுற்றி வளைப்புகளை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளை பரவலாக மேற்கொண்டிருந்தனர்.

காலப்போக்கில் வடபகுதி கமாண்டராக இருந்த பிரிகேடியர் சிறில் ரணதுங்கவும் இலங்கை இராணுவத்தின் பிரதம தளபதியாக பதவி உயர்த்தப்பட்டார்.

வடக்கே இருந்தும் கொழும்பு புறப்படு முன்னர் தமக்குப் பின்னர் யாழ் மாவட்டக் கமாண்டராகவிருந்த பிரிகேடியர் லைல் பல்தஸாரை (Lyle balthazar) சிறில் ரணதுங்க யாழ்ப்பாணப் பகுதி பத்திரிகையாளருக்கு அறிமுகஞ் செய்து வைத்தார்.

பிரிகேடியர் லைல் பல்தஸார் வடபகுதியில் பதவி வகித்த கமாண்டர்களில், சற்று வேறுபட்டவராகவே காணப்பட்டார்.

முரட்டுத் தனமான, குள்ளத்தனமான அல்லது 'அதிகப் பிரசங்கி'த்தனமான சுபாவங்கள் எதனையும் பிரிகேடியர் பல்தஸாரிடம் காணமுடியவில்லை. மிகவும்

**வடபகுதியிலிருந்து இராணுவத் தளபதியாக உயர்வுபெற்ற முதலாவது பிரிகேடியர் 'புல் வீரதுங்க'**

அமைதியான ஒரு ஆளுமை நிறைந்த கனவானாகவே அவர் காணப்பட்டார்.

தம்மை அன்று வடபகுதி பத்திரிகையாளர்களுக்கு அறிமுகஞ் செய்தபோது வடபகுதியின் ஆயுதப் போராட்டங்கள் பற்றி அவர் எதனையும் விமர்சிக்கவில்லை. மாறாக தாம் ஓர் இளம் இராணுவ காப்டனாக பலாலி இராணுவ முகாமில் பணியாற்றிய காலங்களில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மெய் வல்லுநர் விளையாட்டுப் போட்டியொன்றில் பரிதிவட்டம் (Discus throw) வீசுவதில் நிகழ்த்திய சாதனை குறித்தே நினைவுகூர்ந்தார். அன்று அதாவது 1983ம் ஆண்டில் அவர் இதனைக் குறிப்பிடும்போது அவரது சாதனை யாழ்ப்பாணத்தில் முறியடிக்கப்படாதது குறித்தும்

பிரிகேடியர் பல்தஸார் பெருமைப்பட்டுக்கொண்டார்.

பறங்கி இனத்தைச் சேர்ந்த பிரிகேடியர் பல்தஸார் இலங்கை அரசின் எதிர்பார்ப்புகளுக்கேற்ற விதத்தில் கடும் போக்கைக் கொண்டிருக்கவில்லை. இதனால் போலும் மிகக் குறுகிய காலத்திலேயே வடக்கே இருந்தும் அவர் அப்புறப்படுத்தப்பட்டார்.

அவர் அங்கிருந்தும் இராணுவத் தளபதியாக பதவி உயர்வு பெற்றிருக்கவில்லை. பிரிகேடியராகவே கொழும்பு சென்றார். இறுதியாக ஒரு பிரிகேடியராகவே அந்த 'இராணுவக் கனவான்' ஓய்வு பெற்று, இரு வருடங்களுக்கு முன்னர் லண்டனில் அவர் காலமாகியிருந்தார்.

பிரிகேடியர் பல்தஸாரை தொடர்ந்து பிரிகேடியர் நளின் செனவிரத்தின வடபகுதித் தளபதியானார். இவரும் வடபகுதிப் பணியை முடித்துக்கொண்டதையடுத்து இலங்கை இராணுவத்தின் பிரதம தளபதியாக உயர்ந்துகொண்டார்.

இவரைத் தொடர்ந்து வடபகுதியின் தளபதிப் பதவியை ஏற்றவரே பிரிகேடியர் ஹமில்டன் வணசிங்க. இன்று பாதுகாப்பமைச்சின் செயலராக இருந்து ஓய்வு பெற்றுள்ள ஜெனரல் வணசிங்க யாழ்ப்பாணக் கமாண்டராக அன்று யாழ்ப்பாணக் குருநகர் தொடர்மாடிக் குடியிருப்புகளில் தமது படையினர் சகிதம் இருந்து வந்தார்.

பிரிகேடியர் தரத்தில் ஹமில்டன் வணசிங்க அன்று வடபகுதியில் இருந்த காலத்திலேயே இராணுவம் யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டைக்குள் குடியேறியது.

எனவே யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டைக்குள் இராணுவத்தைக் குடியேற்றும் திட்டத்துக்கு வழி வகுத்தவராகவே பிரிகேடியர் வணசிங்க விளங்கினார்.

அன்று அவர் அமைதியான முறையில் கோட்டையைக் கைப்பற்றி அங்கே தமது 'சைன்னியங்களைப்' பலப்படுத்திக்கொண்டார்.

ஜெனரல் வணசிங்க இலங்கை இராணுவத்தின் ஆட்டிலறிப் பீரங்கிப் படைப்பிரிவைச் சேர்ந்தவர். எனவே யாழ்ப்பாணக் கோட்டைக்குள் ஆட்டிலறித் துப்பாக்கிகள் பொருத்தப்பட்டு அக்கோட்டைப் பிரதேசம் ஒரு பூரண யுத்த வலயமாக்கப்பட்டது.

இக்கோட்டைப் பிரதேசமே யாழ்குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளை இராட்சதத் தன்மையுடன் வியாபிக்கச் செய்திருந்தது.

கோட்டைப் பிரதேசத்தை அண்டிய கெடுபிடி யுத்தத்தினால் பல நூற்றுக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்ததுடன், யாழ் நகரம் இன்று அதன் பொலிவை இழந்திருப்பதற்கும் கோட்டையின் இராணுவக் கெடுபிடியே முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

யாழ் கமாண்டராக இருந்த ஹமில்டன் வணசிங்கவும் அங்கிருந்து இராணுவத்தின் பிரதம தளபதியானார் இதன் பின்னர் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளில் தம்மால் வியூகமிடப்பட்டுப் பலப்படுத்தப்பட்ட யாழ்ப்பாண டச்சுக் கோட்டைக்குள்ளிருந்தும் இராணுவம் இழப்புகளுடன் வாபஸ் பெற்றுக் கொண்டதையும் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க 'கண்ணாரக் கண்டார்'.

இராணுவத்தின் பிரதம தளபதி, கூட்டுப் படைத் தளபதி என்ற முக்கிய பதவிகளை வகித்து, இறுதியாக பாதுகாப்பமைச்சின் செயலாளராக ஜெனரல் வணசிங்க கடமையாற்றியிருந்தார். ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவின் பாதுகாப்பமைச்சச் செயலாளர் பதவிக்காலத்தில் இராணுவம் பல்வேறு விதமான பெரும் இழப்புகள், சோதனைகளுக்குள்ளாகியிருந்தது.

இராணுவத்தின் முக்கிய தளபதிகள் கொல்லப்பட்டனர். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முகாம்கள், தளங்கள் நிர்மூலமாக்கப்பட்டிருந்தன. கடலிலும் கடற்படைக் கப்பல்கள், தாக்கி மூழ்கடிக்கப்பட்டு பரந்தளவில் முப்படைகளும் பெரும் இழப்புகளுக்குள்ளாகியிருந்தன.

தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ள முதலாவது உயரதிகாரியாக ஜெனரல் வணசிங்க விளங்குகின்றார்.

வடபகுதியில் ஒரு பிரிகேடியராகவும், பின்னர் அங்கிருந்தே இராணுவத் தளபதி, கூட்டுப்படைத் தளபதி, பாதுகாப்பமைச்சின் செயலாளர் போன்ற பதவிகளை வகித்து இன்று தாமாகவே இராஜினாமாச் செய்து பாதுகாப்புச் சேவையிலிருந்தும் நிரந்தரமாகவே ஓய்வு பெற்றுள்ளார்.

ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவின் ஓய்வு பாதுகாப்புச் சேவையில் பல மாற்றங்களுக்கு வழிவிடமுடியும். இன்றைய அரசாங்கம் தற்போது மோதல் தவிர்ப்பு என்ற ரீதியில் ஒரு நிரந்தரமாகவே யுத்த நடவடிக்கைகளுக்கு முடிவு கட்டுவதில் தனக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தியிருப்பதுபோல காணப்படுகின்றது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கின் யுத்த அழுத்தங்கள், கெடுபிடிகளில் தோய்ந்து மூழ்கிய பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவின் இராஜினாமா, எதிர்காலத்தில் யுத்த நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான ஒரு முன்னறிவிப்பாக இருக்கின்றதோ?வென கொள்ளத் தோன்றுகிறது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# உண்மைச் சம்பவம்

# அழகுப் புயல் பமீலா

## தருவது ரசிகன்

**ப**மீலா - 17 வயதில் இருந்தே பிரபலமாகத் தொடங்கிய அழகி. பிறந்தது இந்தியாவில்- இந்திய தலைநகர் புது டில்லியிலும், பம்பாயிலும் கலக்கியது கொஞ்சம்தான்.

பிரிட்டிஷ் நாட்டில்தான் சாகசங்கள். பமீலாவின் கட்டுடல் பள்ளியறையை மட்டுமல்ல, பாராளுமன்ற அரங்கையே ஒரு உலுப்பு உலுக்கியது.

அந்த புதிர் அழகியின் சரச சாகசங்களில் சில ருசியான பக்கங்கள்; ரசிகனின் பாணியில்....!

*1979ல் ஒருநாள்!*

புதுடில்லிப் பல்கலைக்கழகம்.

மைதானம் முழுக்க சிறகுகள் இல்லையே என்பது மட்டுமே குறையாக மாண்வப் பறவைகள்.

தனித்தும், கூட்டமாகவும், ஜோடிகளாகவும் மாணவப் பருவத்திற்கே குத்தகையாகக் கொடுக்கப்பட்ட கும்மாளம்; குதூகலம்; கொஞ்சம் குறும்பு; நிறையச் சிரிப்பு.

"மிகவும் புழுக்கமாக இருக்கிறதல்லவா?"

கேட்டவள் பமீலா. சுருக்கமாக ஒரு அறிமுகம்.

**வயது:** 17. தொழில்: மாணவி. பொழுதுபோக்கு: ஆண் நண்பர்களோடு அரட்டை மற்றும் சில்மிஷங்கள்.

**அங்க இலட்சணங்கள்:** உலக அழகிப் போட்டிகளில் வியந்து நோக்கப்படும் அளவுகளான 34-24-35.

**காந்தமாய் கவரும் கண்களில் தெரியும் எதிர்காலக் கனவு:** வசதி, புகழ், மற்றும் பூரிப்பின் உச்சத்தில் அமருவது.

**கனவு பலிப்பட கையாளும் ஆயுதமாக நம்பி இருப்பது:** இளமையான உடலையும் அதனை விரும்பும் ஆண்களின்- அதுவும் பிரபலமான ஆண்களின் பலவீனத்தையும்.

**தந்தை:** இந்திய இராணுவத்தில் மேஜராக இருந்து, 1962ல் பாழாய்ப் போன இந்தோ- சீன யுத்தத்தில் எதிரிகள் சிலரைச் சுட்டுவிட்டு சுடுபட்டு செத்துப் போனார்.

**இப்போது இருப்பது:** அம்மா சகுந்தலா. மற்றும் ஒரேயொரு அண்ணன் மட்டும்.

அறிமுகம் முடிந்தது. இப்போது பமீலாவின் சமீபமாய் செல்லலாம்.

"ஆம், பமீ, வெப்பகாலம் ஆரம்பமாகிவிட்டது. காற்று காணாமல் போய்விட்டது போல் இருக்கிறது."

ஆண் நண்பர்களில் ஒருவன் சொல்ல பமீலா உடனே ஒரு காரியம் செய்தாள்.

தனது மேல் சட்டையை வெகு அலட்சியமாக கழற்றினாள்.

சுற்றியிருந்தவர்களுக்கு மூச்சு நின்று விடும்போல் இருந்தது. ஒரு குறும்புக்கார மாணவன் சொன்னான்:

"இப்போது வெப்பம் குறைந்தது உனக்கு மட்டும்தான். எங்களுக்குள் மகா வெப்பம்."

பமீலாவுக்கு புரிந்துவிட்டது. புன்னகைத்தாள்.

விழிகள் விரிய அவர்கள் வியப்பது அவளுக்கு பிடித்திருந்தது. ஒரு சதவீதம்கூட வெட்கம் வர மறுத்தது.

ஆண் நண்பர்கள் அதிகரித்தார்கள். அனுமதி இலவசம். ஆனால் பார்வைக்கு மட்டுமே!

சிலருக்கு மட்டுமே மேலதிக அனுமதி. வேறு சிலருக்கு சின்னதாய் சில நிமிஷ முத்தம் மட்டும்.

"என்னமாய் அலைகிறார்கள் இந்த ஆண்கள்."

பமீலா மனதில் சொல்லிக்கொண்டாள். 'இவர்கள் பலவீனமே எனக்கு ஏணியாகும்' என்று மனதில் தடித்த எழுத்துக்களால் குறித்துக்கொண்டாள்.

□□

அது ஒரு பிரபல விளம்பர நிறுவனம். "மொடல் அழகிகள் உடனே தேவை. புகைப் படத்துடன் விண்ணப்பிக்கலாம்"

பமீலா விண்ணப்பித்தாள். அவள் அனுப்பிய புகைப்படம். கண்ணைப் பறித்தது.

"தயவு செய்து உடன் வரவும்."

அழைப்பு வந்தது.

மொடல் அழகிகளுக்கு விசேஷ தகுதி அங்க அளவுகள். அத்தோடு நளினமான அசைவுகள்; புகைப்படத்திற்கு ஏற்ற முக அமைப்பு;சில சமயத்தில் விளம்பர நிறுவனங்களது மேலதிகாரிகளோடு சகஜமான விட்டுக்கொடுப்புக்கள்.

அழைக்கப்பட்டது பமீலா அல்லவா? அனைத்தும் ஓ.கே.- அனைத்துக்கும் ஓ.கே.

மிகக் கொஞ்சம் உடைகள். மினுக்கமான உடல்.

"யார் இது?"

விளம்பர நிறுவனங்கள் விசாரிக்கத் தொடங்கின. பமீலா எந்த நிறுவனத்தைத் தேடியும் படியேறவில்லை.

"பமீலாவை எங்கே பிடிக்கலாம்?" என்று விளம்பர நிறுவனங்கள் வலைவீசி அலைந்தன.

பணம் வீசினால் மட்டுமே பமீலா கிடைத்தாள். கிடைப்பது போதாது. புது டில்லியைவிட பம்பாய் வசதி என்று நினைத்தாள்.

இந்தியாவின் வர்த்தக நகரம் பம்பாய். நெரிசலான நகரம். செய்யும் தொழில் எதுவோ அதிலே வித்தை காட்டினால் கத்தையாக பணத்தை அள்ள வசதியான நகரம்.

பமீலா- இளமையான அழகுப் புயல். புது டில்லியில் இருந்துநகர்ந்த இளமைப் புயல் பம்பாயில் மையம் கொண்டது.

□□

"பமீ, ஒன்று சொல்லவா!"

கேட்டவர் பிரபல புள்ளி.

"சொல்லுங்கள் டியர். மனைவிக்கு துரோகம் செய்கிறேனே என்று வழக்கமான வார்த்தைகளை மட்டும் சொல்லாதீர்கள். கேட்டுப் புளித்து விட்டது."

"இந்தக் கேலிதானே வேண்டாம். பமீ, நீ ஏன் சினிமாவில் முயலக்கூடாது."

பமீலா வெற்றுடம்போடு சிரித்தாள். அதனால் அசைவுகள் பளிச்சிட பிரபலம் ஆடிப் போனார்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"மிஸ் இந்தியா பட்டத்தை வாங்கிவிட்டு இந்தியாவில் நடிக்க விருப்பம் இல்லை. என் கனவு ஹொலிவூட்."

"பறக்கப் போகிறாயா?"

பார்க்க முடியாதே என்ற கவலை அவர் கேள்வியில் இருந்தது.

"யெஸ்! எந்தக் கூண்டிலும் சிக்க மாட்டாள் இந்த பமீலா. பறக்கவேண்டும். மேலே, மேலே வானுக்கும் மேலே பறந்து கொண்டேயிருக்கவேண்டும்."

"எனக்கு கவலையாக இருக்கிறது டியர்."

"முட்டாள்! இழப்பதற்கு பயந்தால் பெறுவதற்கு எதுவும் இருக்காது. கண்ணைக் கசக்கிக்கொண்டிருந்தால் கனவு காண முடியாது. இது எனக்குப் பிடிக்காது."

"எது டியர்?"

"சோகமான வசனங்கள், ஈரமான பார்வைகள், எல்லாமே சுத்த கோழைத்தனம். வா! இன்றைய இரவு நமக்காக. என்ன இது? ஷேவ் எடுக்கவில்லையே நீ? கன்னத்தில் முள்- கஷ்டம் டியர்!"

□□

1982 ஜுலை, பெருநாட்டில் உலக அழகுராணிப் போட்டி.

கடுமையான போட்டி. பமீலா உடலின் சகல பரிமாணங்களும் நடுவர்கள் பார்வைக்கு புரியும் விதமாக நடந்து வந்தாள். நளினமான சில அசைவுகள்; விதம் விதமான ஆடைகள்.

வியந்தனர் நடுவர்கள். ஆயினும் வெற்றி வாய்ப்பு மட்டும் பமீலாவுக்கு கிடைக்க வில்லை.

பமீலா கோபப்பட்டாள். பமீலா பல்லைக்கடித்தாள். பமீலா வன்மம் கொண்டாள்.

"எனக்கா- தகுதி இல்லை என்கிறீர்கள்? எனக்கா முடிசூட மறுத்தீர்கள். என் அழகை வைத்து சாதித்துக்காட்டுகிறேன் பாருங்கள்."

மனதுக்குள் சபதம் செய்தாள்.

□□

**பி**ரிட்டிஷ் நாட்டின் தலைநகரம் இலண்டன். பமீலா இப்போது மையம் கொண்டிருப்பது அங்குதான்.

தொலைபேசி அலறியது.

"ஹலோ பமீலாவா?"

"யா! ஓ... நீங்களா? நோ. நோ... வாருங்கள்."

மறுமுனையில் பேசியவர் விளையாட்டு அமைச்சர் கொலின் மொய்னிகன்.

பமீலா உடைகளை களைந்துவிட்டு பூத்துவாயை எடுத்துக்கொண்டு குளியலறைக்குச் சென்றாள்.

குளித்து முடித்து தயாரானபோது அழைப்பு மணி அழைத்தது.

சென்று கதவு திறக்க, வெளியே விளையாட்டமைச்சர்,

"வாவ்...!"

என்று வியந்து உள்ளே வரும் போதே பமீலாவை இழுத்து அணைத்துக் கொண்டார்.

தொலைபேசி மணி அழைப்பை அறிவித்தது. விளையாட்டமைச்சரிடமிருந்து விடுபட்டுப்போய் றிசீவரை செவிக்கு கொடுத்தபோது மறுமுனையில் கேட்ட குரலால் பமீலாவின் முகத்தில் மகிழ்ச்சிப் பூக்கள்.

"அட் கடவுளே...!"

கிட்டத்தட்ட கூவியேவிட்டாள். விளையாட்டமைச்சர் சோபாவில் இருந்து திரும்பி பமீலாவை வினோதமாய்ப் பார்த்தார்.

(இன்னும் வரும்)



பிரிட்டன் விளையாட்டமைச்சர் கொலின் மொய்னிகன்



பமீலா

---

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ ✝ விந்தைகள்

## சுகமான தூக்கம் இதமானது

### சுலபமான ஆலோசனைகள் சில



**ஆ**ழ்ந்த உறக்கம் என்பது மனிதர்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு மாத்திரமன்றி அவர்களின் அன்றாடப் பணிகளினால் ஏற்பட்டுவரும் களைப்பு, சோர்வுகளை நீக்கவும் நாளையப் பணிகளை தீரமாக நடத்தி முடிப்பதற்கும் முக்கிய அம்சமாக இருக்கிறது.

ஆழ்ந்த உறக்கம் என்பது அனைவருக்கும் பொதுவானது. இருந்தாலும் தொழிற்தலங்கள், குடும்பம், உறவு, பணம் போன்ற பெரும்பாலான பிரச்சனைகளுடன் தொடர்புபட்ட பலர் அதிகமாக சிந்திப்பதால் ஆழ்ந்த உறக்கத்தை இழந்து விடுகின்றனர். அவர்களின் நாளாந்த கடமை நெறிகளும் சிதைவடைந்து போகின்றன. உடல், உளரீதியான நோய்த் தாக்கங்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

இத் தாக்கங்களுக்குள்ளானோருக்கு கீழ்க் காணும் ஆலோசனைகள் சில பயனளிக்கக்கூடும்.

1. உள ரீதியான தாக்கத்திற்கு உட்பட்டிருப்பீர்களானால் அவற்றிற்கான மூல காரணத்தை உணர்ந்து உடனடியாக பிரச்சனையை தீர்த்து விடுங்கள். அது சாத்தியப் படாவிட்டால் அப்பிரச்சனையை தற்காலிகமாக வேனும் மனதிலிருந்து அகற்றி விடுங்கள்.
2. நித்திரைக்கு செல்லும் நேரத்திற்கு சமீபமாக தேனீர், கோப்பி, அல்லது ஏனைய பானங்கள் அருந்துவதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.
3. வீட்டு வேலைகளை விரைவாக முடிக்கும் எண்ணத்தில் அளவுக்கதிகமாக உடலை வருத்தி செயற்படுவதை குறைத்துக்கொள்ளுங்கள்.
4. இரவு நேரங்களில் மென்மையான ஆகாரங்களை உட்கொள்ளும் முறையை பழக்கமாக்கிக்கொள்ளுங்கள்.
5. நித்திரைக்கு செல்லும் முன்பு ஒரு மணித்தியால நேரமாவது ஓய்வாக இருப்பதற்கு பழகிக்கொள்ளுங்கள். இவ் ஓய்வு நேரத்தில் புத்தகம், பத்திரிகை, போன்றவைகளை வாசித்தல், இசைக்கு செவி மடுத்தல், தொலைக்காட்சி பார்த்தல் போன்றவற்றில் ஈடுபடுவதும் பொருத்தமாகும்.
6. நித்திரைக்கு செல்லும் முன்பு மனதை ஒரு நிலைப்படுத்தி அமைதியாக உறங்கச் செல்லுங்கள்.
7. மதப் பற்றுள்ளவர்கள் நித்திரைக்கு முன்பு பிரார்த்தனையிலும் ஈடுபடுவது சிறந்த நடைமுறையாகும்.

## அலர்ஜியோ அலர்ஜி

**பொ**துவாக ஒரு சிலருக்கு சில உணவுகள் அலர்ஜி (ஒவ்வாமை)யாக இருக்கும். ஒரு சிலருக்கு தூசுகள், ஊதுவத்தி, ஒட்டடை, பஞ்சு போன்றவைகள் அலர்ஜியாக இருக்கும். இன்னும் சிலருக்கு சீதோஷ்ண நிலையில் மாற்றம் ஏற்பட்டால் அலர்ஜி ஏற்படும். அதாவது பனி, குளிர், புகை போன்றவைகள் அலர்ஜியை ஏற்படுத்தும். இன்னும் சிலருக்கு சூரிய ஒளியே அலர்ஜியை ஏற்படுத்துகிறது. இத்தகைய அலர்ஜியால் உண்டாக்கப்படுவதே ஆஸ்துமா, சைனஸ், பீனிசம், இளைப்பு, மூக்கில் நீர் வடிதல், நெஞ்சில் கபம் சேர்த்தல் போன்றவைகளாகும்.

இந்நோயாளிகள் ஒத்துக்கொள்ளாத உணவுகளைத் தவிர்த்தும், ஒத்துக்கொள்ளாமல் இருக்கும் இடத்திற்குப் போகாமலும், ஒத்துக்கொள்ளாத சீதோஷ்ண நிலையில் இருந்து தனித்தும் இருக்கவும் பழகிக்கொள்ள வேண்டும்.

உணவில் சுக்கு, மிளகு, திப்பிலி, தூதுவளை, நெல்லிக்காய், முருங்கையிலை, கொள்ளு போன்றவைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். கோப்பி, தேநீர் போன்றவைகளுக்குப் பதிலாக சுக்குக் கசாயம் குடித்தல் நல்லது.

முட்டை, இறைச்சி, எண்ணெய் பதார்த்தங்கள், பால், தயிர், இனிப்பு வகைகள் போன்றவைகளை உணவில் குறைத்துக் கொள்ளவேண்டும். இவைகளை இரவில் சாப்பிடவே கூடாது.

## பாத வீக்கமா? கவனியுங்கள்!

**ந**மது கால்களின் பாதப்பகுதியில் ஏற்படும் வீக்கத்திற்கும் இருதயம், சிறுநீரகம், சிறுநீரகத்தொகுதியில் ஏற்படும் நோய்களுக்கும் நெருக்கமான தொடர்பு இருக்கப் பெற்று வருகிறது. இவை தவிர்ந்த புறக் காரணங்களாலும் பாதங்களில் வீக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

புறக்காரணங்களின் நிமித்தம் ஏற்படும் பாத வீக்கத்தையும் வேதனையையும் குறைப்பதற்கு கீழக்காணும் இலகுவான நடைமுறைகளை கடைபிடிப்பதன் மூலம் கால் வீக்கத்தையும் வேதனையையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.



படுக்கையில் கால்களை சற்று உயரமாக வைத்திருக்கும் பொருட்டு ஒன்றோ அல்லது இரண்டு தலையணைகளை பயன் படுத்தி கால்களை உயரமாக வைத்திருத்தல்.

வீக்கத்துடன் வேதனைகாணப்படும் பட்சத்தில் படுக்கைக்கு போகும் முன்பு உப்புக்கலந்த வெதுவெதுப்பான நீரில் 15 நிமிட நேரம் வரை கால்களை அமிழ்த்தி வைத்திருத்தல்.

# தகவல் பெட்டி


## கவிழ்ந்த போதும் கலங்கவில்லை

அமெரிக்காவில் நியூயோக்கில் உள்ள விளம்பர நிறுவனம் ஒன்று ஆகாயகப்பல் ஒன்றை வானில் வலம் வரச்செய்தது. ஆகாயக் கப்பலின் மீது பொருள் ஒன்றின் விளம்பரம் படுஜோராக வரையப்பட்டிருந்தது. வானில் வட்டமடித்து சாகசம் செய்த ஆகாயக்கப்பலில் திடீர் கோளாறு. குடியிருப்பு மீது கவிழ்ந்துவிட்டது. ஓட்டுநர் குதித்து உயிர் தப்பி விட்டார். 197அடி நீளமான இந்த ஆகாயக்கப்பலின் பெறுமதி 60ஆயிரம் அமெரிக்க டொலர்கள். விபத்தால் பாரிய நஷ்டம். ஆனால் விபத்துச் செய்தியும் விளம்பரமாகிவிட்டதால் சம்பந்தப்பட்ட வியாபாரக் கம்பனிக்கு நஷ்டம் பெரிதாகத் தெரியவில்லையாம். இது தான் விளம்பர உலகமடா.



## அசையும் வீடு-அதிசயம் பாரு!

இத்தாலியில் உள்ள வீடு ஒன்று எல்லோரையும் ஆச்சரியப்பட வைக்கிறது. அசையாசொத்து என்பதில் வீடும்அடக்கம். ஆனால் இந்த அதிசய வீட்டை அப்படி அழைக்கமுடியாது. இந்த வீடு அசையும், உயரும், இறங்கும், தேவையான பக்கம் திருப்பிக் கொள்ள இசைந்து கொடுக்கும். சூழல் பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள் இந்த வீட்டை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து வேறுஇடத்திற்கும் கொண்டு செல்ல முடியும். இயந்திரம் ஒன்றின் மீது வீட்டை அமைத்துள்ளனர். இதனை வடிவமைத்தவர் ஒய்வு பெற்ற பொறியியலாளரான அனுன்சியோ லகார்மர் சினி. இந்த வீட்டை வடிவமைக்க ஐந்து வருடங்கள் உழைத்தாராம் முயற்சி திருவினையாகிவிட்டது.



## முடியால் பெருமை



1995ம் ஆண்டுக்குரிய உலக சாதனைப் புத்தகமான கின்னஸ் வெளிவந்து விட்டது.

உலகிலேயே மிக நீண்ட தலை முடிக்குச் சொந்தக்காரர் என்ற இடத்தை மீண்டும் பெற்றிருக்கிறார் இந்தியாவைச் சேர்ந்த யோகினி மாதாஜி என்று அழைக்கப்படும் ஜெகதாம்பா. தலைமுடியின் நீளம் 13 அடி 10 1/2அங்குலம். மாதாஜிக்கு இப்போது வயது 78.



## விலை உயர்ந்த முடி

தலைமுடிபற்றி கின்னஸ் புத்தகத்தில் உள்ள வாய்பிளக்கும் செய்தி ஒன்று: பிரிட்டனைச் சேர்ந்த வைஸ்அட்மிரல் நெல்சன் பிரபு 1805ஆண்டு இறந்து போனார். அவரது தலைமுடியை பத்திரமாக வைத்திருந்து 1988 பெப்ரவரி 18ம் திகதி இலண்டனில் ஏலம்விட்டனர். வாங்குவதற்கு பலத்தபோட்டி.போட்டியில் வென்று தலைமுடியை வாங்கியவர் ஒரு புத்தக வியாபாரி. தலைமுடிக்காக அவர் கொடுத்த பணம் ரூபாய் 420,000.

## உலகில் சிறியது.......

விளையாட்டு சைக்கிள் என்று நினைத்துவிடாதீர்கள். உலகில் மிகச் சிறிய சைக்கிள் இது. இதன் நீளம் 16அங்குலம். சவாரிசெய்யும் தம்பதிகள் தான் இதனைத் தயாரித்துள்ளனர். உலகசாதனைப் புத்தகத்தில் சைக்கிளும் இந்த தம்பதியும் இடம் பிடித்து விட்டனர்.



## கரப்பான்பூச்சியை தேடி வேட்டை

மடகஸ்கார் நாட்டில் இருந்து அமெரிக்க மஸாசுசெட்ஸ் மாநிலம்-பெவெர்லியில் குடியேறியிருக்கும் புதுவகை மூட்டைப் பூச்சி இதுவாகும்.

ஒரு வகையான ஒலியினை எழுப்பக்கூடிய இந்த மூட்டை பூச்சிகள் பெருகிவரும் கரப்பான் பூச்சிகளுக்கு சிம்மசொப்பனமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. பெவெர்லியில் உள்ள வளர்ப்பு மிருகங்கள்- பிராணிகளை விற்கும் கடையின் உரிமையாளர் கேற்டானியல்ஸ் இந்த மூட்டைப்பூச்சிகளை வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமாக உற்பத்தி செய்து விநியோகிக்கிறார்.

கரப்பான் பூச்சிகளுக்கு இவைஎழுப்பும் ஒலி கர்ணகடூரமாக இருந்தபோதிலும் மனிதர்களின் காதுகளுக்கு இதமாக இருக்கிறதாம்.



www.padippakam.com

# சினி விசிட்

## ரசிகர்களின் வெறி.

மதுபாலா அச்சம்! மதுபாலா எங்கே போனாலும் ரசிகர் பட்டாளம் அவரை சூழ்ந்துவிடுகிறதாம். அதனால் மதுபாலாவுக்கு பாதி மகிழ்ச்சி மீதி பயம். ஏன் பயம்? "என்னிடம் பேச அவர்கள் துடிப்பதை பார்த்து மனதுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் அவர்களுடைய அன்பு வெறியாக மாறிவிடுமோ என்று பயமாகவும் இருக்கிறது. என் கையை முத்தமிட விரும்புகின்றனர். என்னைத் தொட்டுப் பார்க்க ஆசைப்படுகின்றனர்", என்று உணர்ச்சிவசப்பட்டுக்கொண்டே சொல்லுகிறார் மதுபாலா.

இந்திப் படவுலகில் வாய்ப்புகளை கெட்டியாகப் பிடிப்பதில் பிஸியாக இருப்பதால் தமிழில் மதுபாலா தலைகாட்டுவது குறைவு

## 'பல குரல் மன்னன்'

சின்னிஜெயந்த்-ரேவதி ஜோடியாக நடித்த 'சின்னப் புள்ள' படம் பலரது பாராட்டையும் பெற்றிருந்தது. ஆனாலும் வசூலில் வெற்றிபெறவில்லை.

'சின்னிஜெயந்த்' தற்போது முக்கிய வேடத்தில் நடிக்கும் படம் பல குரல் மன்னன்.

பல குரலில் பேசி மக்களை மகிழ்விக்கும் ஒரு குழுவை வைத்து கதை பின்னப்பட்டிருக்கிறது. ஜனகராஜ், விஜயகுமார், மனோரமா ஆகியோரும் நடிக்கின்றனர். படத்தில் இரண்டு கதாநாயகிகள். முன்னணி நடிகைகள் இருவர் நடிக்கவுள்ளனர்.

## 'இவ்வளவுதான் உலகம்

நடிகை ஊர்வசி சொல்லியுள்ள சமாச்சாரம் இது: "முதன் முதலாக நடிக்க வந்தபோது யாரும் என்னை மதிக்கவில்லை. வேண்டாத விருந்தாளி போலவே நடத்தினார்கள். அப்போது ஒரு டீ கூட தரமாட்டாங்க. ஆனால் இப்போது எதைக் கேட்டாலும் தருவதற்கு ரெடியா இருக்கிறார்கள். இதுதான் சினிமா உலகம்' என்கிறார் ஊர்வசி.

## "என்னாலே நான் கெட்டேன்"

நடிகை சிவரஞ்சனி மார்க்கெட் டல்லாகி இப்போது வீட்டில் தான் இருக்கிறார். தனது தவறுதான் வீழ்ச்சிக்கு காரணம் என்று சொல்லுகிறார்.

'இமேஜ்' பற்றி கவலைப்படாமல் சில படங்களில் அதிக கவர்ச்சியுடன் நடித்துவிட்டாராம். இப்போது ...லம்பி என்ன செய்வது?

## அனுமான் பக்தர்



ஆக்ஷன் கிங் அர்ஜுன் அனுமார் பக்தர். பல வேறு ...களில் சி... ...த்தபோது அனு... ...ர் கோவிலுக்குப் போய் வந்தாராம். ... பஞ்சாப் ... ...ரூசன் தீவிர பக்தராகி விட்டார்.

## "இளம் பெண்கள் ஜாக்கிரதை"

## மாதுரி டிக்ஷித் அட்வைஸ்

'டேட்டிங்' செல்வது இளம்வயதினர் மத்தியில் சகஜமாகிவிட்டது. ஆண் நண்பர்களோடு 'டேட்டிங்' செல்லும் பெண்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சும்மா ஜாலியாக இருக்கவேண்டும் என்பதற்காக பெண்கள் சில விஷயங்களுக்கு ஒத்துழைக்க நேருகிறது. செக்ஸில் ஈடுபட்டு பின்னர் வருத்தப்படும் பெண்களை நான் பார்த்திருக்கிறேன். பிடிக்காத விஷயங்களுக்கு முடியாது என்று சொல்லும் தைரியம் பெண்களுக்கு இருக்கவேண்டும் இவ்வாறு சொல்லியுள்ளார் மாதுரி டிக்ஷித்.

## உயர்ந்துவரும் ஊதியம்

நடிகை விஜயசாந்தி தனது ஊதியத்தை தொடர்ந்து உயர்த்தியே வருகிறார். தற்போதைய நிலவரப்படி அவரது ஊதியம் ஒரு கோடியைத் தாண்டிவிட்டது. (நம் நாட்டு பெறுமதியின் படி கிட்டத்தட்ட ஒன்னே முக்கால் கோடி)

## மினிசினி



## இசையமைப்பவர் புதுசு

'கருத்தம்மா படத்தில் பாரதிராஜா அறிமுகம் செய்த கதாநாயகி ராஜஸ்ரீ.

அந்த ராஜஸ்ரீ பாண்டியராஜனோடு ஜோடி சேர்ந்து நடிக்கும் புதிய படம் 'நீலக்குயில்' படத்தை இயக்குவது அஷ்ரப். புதிய இசையமைப்பாளர் சூர்யா அறிமுகமாகிறார்.

## 'என்னவளே அடி என்னவளே'

'காதலன்' படத்தில் வரும் ஒரு பாடல் 'என்னவளே அடி என்னவளே' என்று ஆரம்பிக்கும். இந்த தொடக்க வரிகளை ஒரு படத்தின் பெயராக்கிவிட்டார்கள். ஜெயராம், ஊர்வசி, ஜோடியாக நடித்துவரும் படத்தின் பெயர்தான் 'என்னவளே அடி என்னவளே' கணவன்-மனைவி பாசஉணர்வு, படுக்கையறையில் நடக்கும் ஊடல்கள் போன்றவைதான் படத்தின் சுவையான கதை. தமிழ் புத்தாண்டு தினமான ஏப்ரல் மாதம் படத்தை வெளியிட திட்டமிட்டு படப்பிடிப்புக்கள் நடந்துவருகின்றன.

பூவா தி- காயா தி- கனித்தமாய் ஒன்று கண்ணுக்கு விருந்தாக தெரிகிறதா இன்று!

### கிசு-கிசு-நியூஸ்

## எதற்கு இந்த வெட்கம்

மம்தா குல்கர்னி அடிக்கடி பம்பாய் சினிமா செய்திகளில் அடிபடுகிறார் எல்லாமே கிசு-கிசுச் செய்திகள்தான்.

படங்களில் உடை விசயத்தில் தாராளமாக நடந்து கொள்கிறார். உடல் விசயத்திலும் அப்படித்தான் என்பதால் கிசு-கிசுக்களுக்கு பஞ்சமில்லை.

இப்போதெல்லாம் இந்திப் படங்களில் ஆண்களும் கவர்ச்சி காட்ட ஆரம்பித்துவிட்டார்கள். கட்டுமஸ்தான தேகத்தை காட்டுவதில் ஹீரோக்களிடையே கடும் போட்டி. ரிஷி கபூர், அக்ஷய் குமார், ஜாக்கி ஷெரிப் போன்றவர்கள் இடுப்பில் மட்டும் சிறு துணியோடு நடித்துவருகிறார்கள். அதே கோலத்தோடு அவர்கள் படப்பிடிப்புதளத்தை ஜாலியாக சுற்றித்திரிய அங்குள்ள பெண்களுக்கு தர்மசங்கடமாம். ஆனால், மம்தா மட்டும் அவர்களோடு சேர்ந்து ஜாலியாக சுற்றுவாராம். இவற்றைக் கண்டு ஏன் பயப்படவேண்டும், எதற்காக வெட்கப் படவேண்டும் என்று கேட்கிறார் மம்தா.



## மூன்று நாளில் ஒரு இலட்சம்

'ஆணழகன்' படப்பாடல்கள் வெளியான மூன்றே நாட்களில் ஒரு இலட்சம் கசட்டுக்கள் விற்பனையாகினவாம். படத்தில் ஒன்பது பாடல்கள். பம்பாய் அழகிகளைக்காலை உரித்துவிடுத்துவிட்டார்களாம். படு கவர்ச்சியான பாடல் காட்சிகள் உள்ள படமாக வருகிறது 'ஆணழகன்'

## கவர்ச்சியான தந்திரம்

சபா என்பதோடு ஒரு எழுத்தை மட்டும் சேர்த்தால் அந்த நடிகையின் பெயர்வரும். இளம் ஹீரோக்களை கைக்குள் போட்டுக் கொள்ள சுவாரசியமான தந்திரங்களை கையாளுகின்றாராம். பாடல் காட்சிகளில் நடிக்கும் போதே சில்மிசம் செய்து ஹீரோக்களை கதி கலங்கவைக்கிறாராம். ... 'மான்' ... நடிகருக்கும் இடையே ஒரு இதுவாம். ... என்று முடியும் படத்தின் படப்பிடிப்பின்போதான் நெருக்கம் ஆரம்பித்ததாம்.



## அடக்கம்

கவர்ச்சி நடிகையாக ஆயிரம் படங்கள் வரை ஆடி முடித்து ஒதுங்கியவர் ஜோதிலட்சுமி. தற்போது மீண்டும் நடிக்க ஆரம்பித்திருக்கிறார். ஆடும் பாத்திரங்களில் அல்ல. அடக்கமான பாத்திரங்களில்!

### சினிமா விமர்சனம்.

சத்யராஜ்-ரோஜா ... எங்கிருந்தோ வந்தான்

## எங்கிருந்தோ வந்தான்

மலையாளத்தில் 'சித்ரம்' என்ற பெயரில் வெற்றிகொடி நாட்டிய படம். அதனை தமிழில் தயாரித்துள்ளார்கள்.

தனது மனைவி மீதான சந்தேகத்தில் அவனது சகோதரனை காதலன் என்று நினைத்து கோபப்படுகிறார் சத்யராஜ். அதனால் மனைவியின் கொலைக்கு காரணமாகி தூக்கு மேடைக்கு செல்லுகிறார். தூக்குதண்டனைக்கு இடையில் தனது குழந்தைக்கு சிகிச்சை செய்ய பணம் சேர்த்துக்கொடுக்க சிறையிலிருந்து தப்புகிறார்.

ரோஜாவின் கணவராக நடிக்கவைக்கிறார் ஜனகராஜ். முதலில் சத்யராஜ் மீது பாயும் ரோஜா பின்னர் அவரையே காதலிக்கத்தொடங்க கதையில் சோகம் வர ஆரம்பிக்கிறது.

சத்யராஜ்-ஜனகராஜ்-ரோஜா கூட்டணி படத்தின் இடைவேளைவரை கலகலக்கவைக்கிறது. சத்யராஜ் அசத்தல் ராஜ். ரோஜாவுக்கு கவர்ச்சி காட்ட வாய்ப்பு கொடுக்காவிட்டால் பெரிய துரோகமாகிவிடும் என்று நினைத்து பாடல் காட்சிகளில் அந்த வாய்ப்பை தாராளமாக வழங்கியிருக்கிறார்கள்.

ஆம்னி ஊமைப்பெண்ணாக வந்து ஒரு பாடல்காட்சியிலும் ஆடிவிட்டு கொலையாகி அனுதாப வாக்குளை கவர்ந்துபோகிறார்.

விஜயகுமார் சில காட்சிகளில் தலை காட்டினாலும் மனதில் நிற்கிறார். இயக்கம், சந்தானபாரதி. இசை: மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன்-ராமமூர்த்தி. பாடல் வரிகளை செவியில் விழக்கூடியவாறு இசையமைத்துள்ளனர்.

படத்தின் முடிவு சத்யாராஜ் ரசிகர்களுக்கு பிடிக்குமா என்று தெரியவில்லை. சென்னையில் நான்கு தியேட்டர்களில் 25 நாட்களை தாண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. வசூல் நன்றாக இருப்பதாக கூறுகிறார்கள். ரசிக்கக்கூடிய பொழுது போக்கு படம் 'எங்கிருந்தோ வந்தான்'.

நம்நாட்டில் மினி தியேட்டர்களில் தற்போது ஓடிக்கொண்டிருக்கிறது.

## பந்தா கிடையாது

நடித்தாலும் தலைக்கனம் இல்லாமல் பேசுகிறார் நெப்போலியன். ...ாக நடிப்பேன் என்று நான் நினைத்தும் பார்க்கவில்லை. ...னாக மட்டும் நடிப்பேன் என்று அடம்பிடிக்கமாட்டேன். எனக்கு ...ன்றாக இருந்தால் முழு ஈடுபாட்டோடு நடிப்பேன்" என்கிறார்.

## போட்டிக்கு ரெடி

இரண்டு கதாநாயகர்கள் உள்ள படங்களில் நடிப்பதால் போட்டி இருக்கும். அதனால் திறமை வெளிப்படும் என்கிறார் ராம்கி. 'வனஜா-கிரிஜா' படத்தில் நெப்போலியனுடன் நடித்ததை உதாரணமாகக் காட்டுகிறார் ராம்கி.

## தங்கையாக மாறியவர்

நடிகை கஸ்தூரியும் தமிழ்ப் படவுலகில் இருந்து தெலுங்குக்கு இடம்பெயர்ந்துவிட்டார். ஆனால் அங்கு தங்கையாக நடிக்கமட்டுமே வாய்ப்புக்கள் கிடைக்கின்றனவாம்.

## நிலையான இரு மலைகள்

தமிழ் திரையுலகில் எம்.ஜி.ஆர், சிவாஜி இருவரும் படைத்த சாதனைகளை இதுவரை எவரும் நெருங்கமுடியவில்லை. சூப்பர் ஸ்டார் ரஜனி, சூப்பர் நடிகர் கமல் இருவரும் வருடத்தில் ஒரு படம் அல்லது இரண்டு படம்தான் நடிக்கிறார்கள்.

ரஜனிக்கு நல்ல கதை தேடுவதில் தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும் தடுமாறுகிறார்கள். கமல் வித்தியாசமாக சிந்தித்தாலும் அவர் படங்கள் சில ஆட்டம் காணுகின்றன. (மகாநதி, நம்மவர், குணா) 40 வயதிற்கு மேலும் இளம் கதாநாயகிகளோடு 'டூயட்' பாடி நடித்து ரசிகர்களின் நாடிபிடித்து வசூல் படங்களை தொடர்ச்சியாக வழங்கினார்கள் எம்.ஜி.ஆரும், சிவாஜியும். மகா சாதனைதான்.

இரண்டு மலைகளையும் கண்டு இன்றைய ஹீரோக்கள் வியப்பதில் ஆச்சரியமில்லை. தமிழ் திரையுலகம் உள்ளவரை எம்.ஜி.ஆர், சிவாஜி இருவரது சாயலும் புதிய கதாநாயகர்களின் நடிப்பிலும் பேச்சிலும் வெளிப்பட்டுக்கொண்டேயிருக்கும்.





## "நான் உணர்ச்சிமயமானவள்"

இந்தி நடிகை ரேகா ஜெமினி கணேசனின் மகள் என்பது அநேகமாக தெரிந்த செய்திதான். இந்தி திரையுலகில் கவர்ச்சிகரமான கனவு நாயகியாக விளங்கிய ரேகா சமீபத்தில் மனம் திறந்து கொட்டியது இது. "என்னுடைய ஒவ்வொரு மூச்சிலும் உணர்ச்சி வெளிப்படுகிறது. என் உடல் முழுவதும் உணர்ச்சி நிரம்பி இருக்கின்றது. நடிக்கும் போதும், நடக்கும்போதும், ஏன் தூங்கும் போதும் கூட நான் உணர்ச்சிவசப்படுகிறேன். நான் உணர்ச்சிமயமானவள். ஆண்களைப் பார்த்தால் உணர்ச்சிவசப்படுகிறேன். இனிமையான இசையைக் கேட்டு உணர்ச்சி பொங்குகிறேன். உணர்ச்சியால் மற்றவர்களை ஆக்கிரமிக்கிறேன்!" என்கிறார் ரேகா. அடடே, எப்படியான தந்திரமெல்லாம் புதைந்து கிடக்கிறது இந்த நடிகையிடம்! புல்லரிக்குதப்பா!

## மலேசியாவில் ரஜினிகாந்த்

ஒரு படத்தில் நடித்து முடித்துவிட்டால் அடுத்த படத்திற்கு இடையில் வெளிநாடு செல்வது ரஜினியின் வழக்கமாகிவிட்டது. 'பாட்ஷா' படத்தில் நடித்துமுடித்து படம் வெளியானவுடன் மலேசியா சென்றார் ரஜினிகாந்த்.

அங்கு மூன்று நாட்கள் தங்கி கலைநிகழ்ச்சிகள் நடத்தினார். 'பாட்ஷா' படத்தில் வரும் 'நான் ஆட்டோக்காரன்' என்ற பாடலுக்கு மேடையில் ஆடி ரசிகர்களை மகிழவைத்தார்.

குஷ்பு வும் ரஜினி குழுவோடு சென்றுள்ளார். இருவரும் இணைந்து 'தொண்டையிலே தாழம்பூ' பாடலுக்கு ஆடினார்கள்.

மலேசியாவை அடுத்து சிங்கப்பூர் சென்று அங்கும் நட்சத்திர கலை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார் ரஜினிகாந்த்.

சிங்கப்பூரிலுள்ள ஒரு தொண்டர் அமைப்புக்கு 2 இலட்சம் ரூபா நன்கொடை வழங்கினார் ரஜினி.



## "மூக்கைச் சிந்த முடியாது"

நடிகை ரோஜாவை கிறவைக்கும் கேள்வி என்ன தெரியுமோ? இதோ அவரே கூறுகிறார், "ஒரு படத்திலாவது கவர்ச்சி இல்லாமல் இழுத்துப் போர்த்திக்கொண்டு நடிப்பீர்களா? என்னும் கேள்வி என்னை எரிச்சலடையச் செய்திருக்கிறது. என்னுடைய 'ப்ளஸ் பொயின்டே' கவர்ச்சிதான். அப்படி இல்லாமல் மூக்கை சிந்தி அழுது நடித்தால் யார் பார்ப்பார்கள்" என்று கேட்கிறார் ரோஜா.

## பறிபோன வாய்ப்பு

'கருத்தம்மா' படத்தில் செண்பகாவைத்தான் நடிக்கவைக்க நினைத்தாராம் பாரதிராஜா. அந்த நேரம் பார்த்து செண்பகா மூக்கு அழகுக்காக அறுவைச் சிகிச்சை செய்திருந்தமையால் நடிக்க முடியவில்லை.

தற்போது இயக்கிவரும் 'பசும்பொன்' படத்தில் முதலில் யுவராணியை ஒப்பந்தம் செய்தார் பாரதிராஜா. பின்னர் செண்பகாவையும் 'பசும்பொன்' படத்தில் நடிக்கவைத்துள்ளார். பறி போன வாய்ப்பு இப்போது கிடைத்துவிட்டதால் பூரித்துப் போயிருக்கிறார் செண்பகா.

## யாருடைய ரசிகன்?

பாக்யராஜின் மகன் சாந்தனு 'வேட்டிய மடிச்சுக்கட்டு' படத்தில் நடித்துவருகிறான் என்பது தெரிந்த செய்தி.

சாந்தனு யார் ரசிகன்? ரஜினிகாந்த் ரசிகனாம். இதைச் சொன்னது பாக்யராஜ்.

## கவுண்டமணி வீட்டில் டும். டும்.

நகைச்சுவை நடிகர் கவுண்டமணி வீட்டில் டும். டும். அவர் மகள் செல்விக்கு கல்யாணம். மணமகன் தொழிலதிபர் ஒருவரது மகன். பெயர்: சதீஸ்குமார். பெப்ரவரி 6ம் திகதி திருமணம் நடந்தது. திருமணவிழாவில் விருந்தினர்களை மகிழ்வித்தது 'தேவா' இசைக்குழு.

## ஆறுவயது பாடகி

மணிரத்னம் இயக்கும் 'பம்பாய்' படத்தில் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானின் அக்காவின் மகள் காஞ்சனா ஒரு பாடல் பாடியுள்ளார். அவரது வயது ஆறு. புதிய பாடகர்களையும், பாடகிகளையும் அறிமுகம் செய்வதில் ரகுமான் முன்னணியில் இருக்கிறார்.



ராஜா ரவீந்தர்-விஜயகுமார்-ராம்கி
படம்-புதல்வன்

முகப்பில்
சிந்துஜா
படம்-
'பொன்னாத்தா.'
வினோதினி.
படம்-
'வீட்டுக்குள்ளே திருவிழா'



மம்தா குல்கர்னி

கனவுகளை
பத்திரப்படுத்தவோ
முத்துவிழிகளை
மூடியிருக்கிறாய்?



விக்னேஷ்
...டேக் இட் ஈஸி ஊர்வசி

## பணம்தான் காரணம்

படங்களில் நடிப்பதில் போட்டி இருந்தாலும் தனிப்பட்ட முறையில் ரோஜாவும், மீனாவும் நல்ல நண்பிகள். தமிழிலும், தெலுங்கிலும் இருவரும் கொடிகட்டிப் பறக்கிறார்கள். தெலுங்கில் அதிக படங்களில் நடிக்க இருவருமே விரும்புகின்றனர். அதற்கான காரணம் பணம். தமிழ்ப் படத்தில் நடிக்க 10 இலட்சம் வாங்கினால் தெலுங்கில் 20 இலட்சம் வாங்கமுடியும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தாய்மையின் அனுபவங்கள்

-டாக்டர் அமிர்தம்

## தாய்மையை உணர்தல்



ஒரு பெண் தாய்மை நிலையினை அடையும்போது அவள் பலதரப்பட்ட உணர்வுகளைப் பெறுகிறாள். முதலில் அவளுடைய உள்ளம் பூரிப்படைகிறது. அவள் இதுகாலவரை இருந்த நிலையிலிருந்து உயர்ந்த அந்தஸ்தினைப் பெறுகிறாள் - பூரணத்துவத்துக்கான பக்குவத்தைப் பெறுகிறாள் என்று அர்த்தமாகிறது.

குழந்தையைப் பெற்றெடுக்கும் அந்த உன்னதமான நிலையினை அடைகிறோமே என்ற விநோத மனோநிலை பெறுவதுடன் சிற்சில கவலைகளும் முகம் காட்டவே செய்யும்.

## தாய்மையடையும் தீர்மானம்

ஒரு குழந்தைக்குத் தாயாக வேண்டும் என்ற தீர்மானம் உருவாவதுடன் ஒரு பெண்ணின் நிலையில் படிப்படியான மாற்றங்கள் தோன்றுகின்றன.

கணவனுக்கும் இதில் பங்குண்டு என்ற போதிலும் பெண்ணே அதிகமான பாதிப்பினை அடைகிறாள். புதிதாகத் தோன்றவிருக்கும் ஒரு ஜீவனை வரவேற்கும் மனப்பக்குவம், உடல்நலம், மனோதிடம் மற்றும் பொருளாதார வசதி ஆகிய அத்தனையும் திருப்திகரமாக இருக்கின்றனவா என்று சீர்தூக்கிப் பார்க்கும்நிலையில் இன்றையப் பெற்றோர் உள்ளனர்.

ஆகவே குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டிய காலத்தை நிர்ணயிக்க இன்றையப் பெற்றாருக்கு வசதி கிடைக்கிறது.

குழந்தை பெறுவதற்கான தீர்மானம் எடுத்தல் என்பது வாழ்க்கை நடைமுறையில் ஒரு பெரும் மாற்றத்தினை ஏற்படுத்துவதாகும். ஒரு குழந்தைக்கு 24 மணி நேர பராமரிப்பு அவசியம். இவ்வாறு வாரத்தின் 7 நாட்கள் மட்டுமல்ல, வருடத்தின் 52 வாரங்களும் தேவை.

ஆகவே, தொழில் பார்த்தல், படித்தல் மற்றும் சமுதாயப் பணிகள் போன்ற சகலமும் மாற்றத்துக்குட்பட்டு சிக்கலைத் தோற்றுவிக்கவும் கூடும். இதனால் நீங்கள் வேறு பணிகளிலும் நாட்டம் செலுத்தும் கட்டாயம் ஏற்படும் பட்சத்தில் உங்கள் குழந்தையைக் கண்ணும் கருத்துமாகக் கண்காணிப்பதற்கு நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரும் தேவைப்படும்.

குழந்தையின் அன்றாடத் தேவைகளான உடைகள், துடைக்கும் துண்டுகள், போர்வைகள், பாலுணவு ஆகிய அனைத்தும் கவனிக்கப்படவேண்டும். உங்கள் இருவருக்குமாக இருந்துவந்த உங்கள் வருமானம் புதிதாக வந்துசேரும் ஒரு ஜீவனுக்கும் பகிர்ந்தளிக்கப்படவேண்டிய நிலை ஏற்படும்.

குழந்தையைப் பெற்று ஓரளவு வளர்த்து விட்டுவிடுவதுடன் உங்கள் கடமை முடிந்துவிடுவதில்லை. அவர்களுடைய கல்வி, ஒவ்வொரு கட்ட வளர்ச்சி போன்ற ஒவ்வொரு துறையிலும் - வாழ்க்கை முழுவதும் பிணையும் தொடரும் ஒரு கடமைப்பாடாக பெற்றாருடைய பொறுப்புகள் வியாபிக்கின்றன.

## கர்ப்பம் தரித்தல்

பெண்ணின் கருவறையிலிருந்து வெளியேறும் கருமுட்டையுடன் ஆணின் ஜீவ அணு இணைவதுடன் கர்ப்பம் தரிக்கிறது. எல்லாம் சீராக இருக்குமானால் 266 நாட்கள்-ஒன்பது மாதங்களின் பின்னர் ஒரு புதிய ஜீவன் இந்தப் பூமியில் தோன்றுகிறது. இந்தக் காலகட்டத்தில் பெற்றார் இருவரும் பலதரப்பட்ட மாற்றங்களைக் காண நேரிடினும் பெண்ணுக்கு ஏற்படும் அனுபவமும் மாற்றமுமே அளவிடற்கரியன.



திருமணமான பெண்ணின் மாதவிடாய் தாமதமாவதிலிருந்து கருத்தரித்துள்ள பெண்ணின் அடையாளத்தை அனுமானிக்கலாம். வேறு பல காரணங்களினால் மாதவிலக்கு தடைப்பட்ட போதிலும் பிரதானமாக கர்ப்பம் தரித்தால் நிச்சயம் மாதவிலக்கு நின்றுவிடும். உண்மையில் கருத்தரித்திருக்கிறதா என்பதனைக் கண்டறிய, ஒன்பதாவது நாளில் சிறுநீர், குருதி பரிசோதனைகளில் கண்டுபிடிக்க முடியும்.

கருவுற்ற தாயின் உடலும் உள்ளமும் பலதரப்பட்ட மாற்றங்களை காண்கின்றன. கருவுற்று மூன்று மாதங்கள்வரை அப்பெண் விபரம் புரியாத பல தாக்கங்களையும் பெறுகிறாள். ஒரு தாயாவதற்கேற்ற பொறுப்புகளைச் சுமப்பதற்குத் தன்னைத் தயார் படுத்திக்கொள்வதில் பல குழப்பங்களையும் தப்புக் கணக்குகளையும் அவள் மனம் சந்திக்கும். மகிழ்ச்சி ஒருபுறமிருந்த போதிலும் இனமறியாத ஒருவகை அச்சமும் அவளை பீடிக்கும்.

பெரும்பாலான பெண்கள் இக்கால கட்டத்தில் குமட்டல்,வாந்தி, மயக்கம் போன்றவற்றால் துன்புறுவார்கள். மிகக் குறைந்த அளவிலானோர் எத்தகைய உடல் மாற்றங்களும் இன்றிக் காணப்படுவர். பலர் படுக்கையை விட்டே எழாமலிருக்கக்கூடும். எதனையும் உண்ணவோ குடிக்கவோ முடியாமல் வாந்தி எடுப்பர். இதனால் உடலில் நீர்த்தன்மை முற்றாக வற்றிவிடாமல் பார்த்துக்கொள்வது பிரதானமாகும்.

படுக்கையிலேயே சிறிதளவு மென்மையான காலை உணவு, திரவ உணவு போன்றவற்றைக் கொடுக்கலாம். படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாத தன்மை ஓரளவு (மற்றவர்களுக்கு) அருவருப்பையும் அசௌகரியத்தையும் கொடுத்த போதும், இத்தகைய நிலையிலுள்ள பெண்களுக்கு கருக்கலைவு ஏற்படுவது குறைவு என்று ஆய்வுகள் கூறுகின்றன.

**கர்ப்பத்துக்கான அறிகுறிகள் பிரதானமாகத் தென்பட்டதும் பெற்றாரின் கவனம் முக்கியத்துவம் பெறுகிறது.**

கருவுற்று 4முதல் 6 மாதங்களானதும் தாயின் பல பிரச்சனைக்குரிய சங்கதிகள் மறைந்து விடுகின்றன. இப்பொழுது தாய்மையின் மகிழ்ச்சியில் அத்தாய் பூரிப்படைகிறாள். தலைச் சுற்று, குமட்டல், வாந்தி போன்றவை மறைந்துவிடும். வயிற்றின் தோற்றமும் வெளிப்படையாக 'கர்ப்பவதி' என்ற தன்மையைப் பறைசாற்றிவிடும். வயிற்றினுள்ளே குழந்தையின் நடமாட்டத்தையும் தாய் உணரக்கூடிய தன்மையிருக்கும் என்பதனால் தாய் மட்டுமல்லாமல் அவள் கணவனும் குடும்பத்தில் ஏனையோரும் குதூகலிக்க ஆரம்பித்துவிடுவர்.

ஆறு மாதங்கள் கழிந்த பின்னர் தாயினுடைய வயிறு ஓரளவு பெருத்துவிடும். அங்கங்களும் மாற்றமடைய ஆரம்பித்துவிடும். இரத்தோட்டத்திலும் மாற்றமுண்டாகும். இத்துடன் சில பெண்களிடம் விபரமற்ற பயப்பிராந்தியும் ஏற்படக்கூடும். தனக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் தோற்றம் எத்தகையதாக இருக்கப் போகிறது- அதனுடைய அங்கங்கள் ஏதாவது கோரமாக இருக்குமோ என்றெல்லாம் அச்சம் ஏற்படும். இருப்பினும் பொதுவாக புதிய உயிரின் வருகைக்காக காத்திருக்கிறோம் என்ற தாய்மை உணர்வே அவளிடம் மேலோங்கும்.

## நீங்களும் தைக்கலாம்-(எஸ்.எஸ்)

### House coat

### பெண்களுக்கான வீட்டு உடை


**எடுக்கவேண்டிய அளவுகள்:**

**மேல்யோக் அளவுகள்**
அகலம்–12 அங்குலம்
நீளம்– 8 1/2 அங்குலம்

**கீழ் உடுப்பு அளவுகள்**
2 மீற்றர் துணி

**கையின் அளவுகள்**
நீளம்– 10 அங்குலம்
அகலம்– 18 அங்குலம்

**கொலருக்கான அளவுகள்**
அகலம்–22 அங்குலம்
நீளம்– 6 அங்குலம்




**வெட்டும் முறைகள்:**

12 அங்குல அகலமும் 8 1/2 அங்குல நீளமும் கொண்ட இரு துணிகளை எடுத்து சரிசமனாக மடித்து ABCD எனக் குறித்துக் கொள்ளவும். குறித்த Aயிலிருந்து 2 அங்குலம் உள்நோக்கி அளந்து E எனக் குறித்தும் Eயிலிருந்து 4 அங்குலம் உள்நோக்கி அளந்து Gஎனக் குறித்துக்கொள்ளவும். Gயிலிருந்து கீழ்நோக்கி 5 அங்குலம் பதிவாக 'V' வடிவில் வரைந்துகொள்ளவும். Eயிலிருந்து 6 அங்குல வளைவாக Fஎன வரைந்து கைப்பகுதியை வெட்டவும். இப்பகுதியே மேல் யோக் பகுதியாகும். Fபகுதியிலிருந்து உள்நோக்கி சிறிது சரித்து வெட்டவும். (படம் 1ற்கானது)

குறிப்பு: 'யோக்' பின் பக்க கழுத்தை 1 அங்குல பதிவில் வட்ட வடிவில் வெட்டவும்.

இதனையடுத்து 2 மீற்றர் நீளமான துணியினை சரிசமனாக மடித்துக் கொள்ளவும். மடிக்கப்பட்ட துணியினை மீண்டும் நீளப்பக்கமாக மடிக்கவும். மடிக்கப்பட்ட அத்துணியை படம் 2ல் காட்டியபடி AEF என்ற பகுதியினை 2 அங்குல வளைவில் வெட்டவும். படம் 2ல் காட்டியபடி EG பகுதியை சிறிது பதிவாக வெட்டவும். Fயிலிருந்து கீழ்நோக்கி C பகுதியை சரிவாக வெட்டவும். முன்பக்கத்தில் மூடித்திறப்பதற்கு சுலபமாக நடுப்பகுதியில் வெட்டவும்.

**இனி கைப்பகுதிக்கு வருவோம்.**

18 அங்குல அகலமும் 10 அங்குல நீளமுமான இரு துணிகளை எடுத்து சமனாக மடிக்கவும். மடித்த அப்பகுதிகளுக்கு ABCD எனக் குறித்துக்கொள்ளவும். படம் 3இனை கவனத்தில் கொண்டு ABF பகுதியை வளைவாக வெட்டவும். FD பகுதியை சிறிது சரிவாக கீழ் நோக்கி வெட்டவும். Dயிலிருந்து ஒரு அங்குலம் உள்நோக்கி Eஎனக் குறித்துக்கொள்ளவும்.

கொலருக்கான 22 அங்குல அகலமும் 6 அங்குல நீளமுமான துணியினை எடுத்து படம் 4இனை கவனத்தில் கொண்டு 6 அங்குல நீளத்தை சமனாக மடித்து இரு ஓரப் பகுதியை சிறிது சரிவாக வெட்டவும்.

**பொருத்தும் முறைகள்:**

முதலில் முன் யோக்குடன் முன் உடம்புத் துணியினை வைத்து சிறு சிறு சுருக்கிடவும். இவ்வாறு பின்பக்கத்திற்கும் சிறு சிறு சுருக்கிடவும். அதன் பின்னர் தோள்மூட்டுப் பகுதியை மூட்டவும். அடுத்து கைப்பகுதியை தோள் மூட்டுப் பகுதியின் மத்தியில் சிறு சிறு சுருக்கிட்டு இணைக்கவும். இவ்வாறு இணைத்தபின்னர் கைப்பகுதியில் இருந்து கீழ்நோக்கி உடம்புப் பகுதிவரை தைக்கவும். இதனையடுத்து கொலர் பகுதியின் இரு ஓரங்களையும் சிறிது சரிவாக வெட்டிக்கொண்ட பகுதியை தைத்து கழுத்துப் பகுதியுடன் பொருத்தவும்.

யாவும் பொருத்தப்பட்ட பின்னர் முன் பகுதியில் மூடித் திறக்கும் பகுதிக்கு விரும்பிய அளவில் பொத்தான் வைத்து தைத்துக்கொள்ளவும்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது–சுகந்தினி

### தக்காளி பச்சடி

தேவையான பொருட்கள்:
தக்காளிக்காய் - 1/4கிலோ
பச்சை மிளகாய் - 8
எண்ணெய் - 50 கிராம்
உப்பு - அளவாக
புளிக்காத தயிர் - 1/2 லீற்றர்
கடுகு - சிறிதளவு
பெருங்காயம்-சிறுதுண்டு
கறிவேப்பிலை-சிறிதளவு
கொத்தமல்லித்தழை-சிறிதளவு

**செய்முறை:**

தக்காளியைக் கழுவி, சிறுதுண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். அதேபோல் பச்சை மிளகாயையும் நறுக்கிக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டு, கொதித்ததும் கறிவேப்பிலை, கடுகைத் தாளித்துக்கொண்டு அதிலேயே நறுக்கி வைத்துள்ள தக்காளிக்காய், பச்சை மிளகாய் இரண்டையும் போட்டு நன்றாக வதக்கவும். பின்னர் இவற்றைத் தயிரில் கொட்டி உப்பு, நறுக்கிய கொத்தமல்லித் தழை போன்றவற்றைப் போட்டுக் கிளறவும். கடைசியாக பெருங்காயத்தைப் பொடி செய்து அத்துடன் கலந்துவிடவும்.

### மிளகா வடகம்

உளுத்தம் பருப்பு - 1/4கிலோ
மிளகாய் வற்றல் - 7
உப்பு - அளவாக
பெருங்காயம் -சிறிது

**செய்முறை:**

உளுத்தம் பருப்பை ஊறவைத்து, தண்ணீரை வடித்து விட்டு அத்துடன் மிளகாய் வற்றல், உப்பு,பெருங்காயம் ஆகியவற்றைச் சேர்த்துக் கெட்டியாக அரைக்க வேண்டும், சிறு சிறு உருண்டைகளாக பெரிய பொலித்தீன் பேப்பரில் இடைவெளிவிட்டு ஒவ்வொன்றாக வைத்து வெய்யிலில் மொரமொரப்பாக்க காய வைத்து டப்பாக்களில் எடுத்து வைத்தால், குழம்பு சமைக்கும் போது வடகத்தை எண்ணெயில் பொரித்துக் குழம்பில் போடவும்.

## அங்கம் அது தங்கம்

### முகம்-



குளிர் காலங்களில் முகத்திலுள்ள நரம்புகள் சிவந்து காணப்படும். இக்காலங்களில் முகத்துக்கு அடிக்கடி அழுத்தம் கொடுக்கப்படலாம். ஒவ்வொரு பாகத்தையும் விரல்களால் அழுத்தி "மஸாஜ்" செய்யலாம்.

முகத்துக்கு ஒப்பனை செய்வதற்கு முன் 'கிளென்சிங் கிறீம்'- துப்பரவு செய்யும் களிம்பு தடவி சுத்திகரிக்கலாம். புருவங்களையும் சீராக்கிக் கொள்ளுதல் வேண்டும். காலையிலும் மாலையிலும் முகத்தை துப்பரவாக கழுவிக் கொள்ள வேண்டும்.

### நகம்-



பெண்களுக்கு ஏனைய அவயவங்கள் அழகு காட்டுவது போல் அவர்களுடைய நகங்களும் அழகாகவும் கவர்ச்சியாகவும் அமைய வேண்டும். நகத்தை வெட்டும் போது மிகவும் அவதானமாக இருத்தல் அவசியம். நகங்களை நறுக்குவதற்கு முன்னர் சிறிதளவு எண்ணை தடவி மஸாஜ் செய்யலாம். நகத்தின் நடுப்பாகத்தை குறிவைத்து வெட்ட வேண்டும். இரு ஓரங்களையும் நேர் பார்த்து அமைப்பாக வெட்ட வேண்டும். இதன் பின்னர் உரிய களிம்பு மஸாஜ் செய்தபின்னனர் 'கியூரெக்ஸ்" பூசலாம்.

நகம் வெட்டுவதில் போதுமான கவனம் செலுத்தாவிட்டால் அவை பலம் குன்றி உடைந்துவிட நேரிடலாம்.

### தலைமுடி-

காலநிலை மாற்றங்கள் உடலுறுப்புக்களைப் பாதிப்பதைப் போன்று தலை முடியையும் பாதிக்கிறது. முக்கியமாக சூரிய ஒளியினால் தலை முடியில் வெடிப்புகள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்கு தலையில் குளித்தபின் தலைக்கு 'கண்டிஷனர்" போட்டுக் கொள்ள வேண்டும்.

நல்ல தைலங்கள் எண்ணை முதலியவையும் பயன்படுத்தப்படலாம்.

புரதச்சத்துள்ள உணவு வகைகள் உட்கொள்ள வேண்டும். காய்கறி, கீரை வகைகள், புதிய பழங்கள் ஆகியன போதுமானவரை உண்ண வேண்டும். சில பெண்களுக்கு முகத்தில் முடி வளர்வதற்கு அழகைக் கெடுப்பதுமுண்டு. அதற்கு பல களிம்பு வகைகளுண்டு தரமான வற்றை அறிந்து வாங்கிப் பயன்படுத்தலாம். தற்போது நவீன 'எலக்ரோலிஸிஸ்" முறை நடைமுறைக்கு வந்திருக்கிறது. இதனையும் வசதி படைத்தவர்கள் பயன்படுத்தலாம்.

## மகளிர் மட்டும் -பரிசுப் போட்டி-

பரிசுக் கூப்பன் மகளிர் மட்டும் இல I

**முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை**

- இன்று முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.

## தங்கநகை பரிசு பெற்றவர்



தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து நடத்திய தங்கநகைப் பரிசுத் திட்டத்தில் முதலாவது அதிஷ்டசாலியாக தெரிவாகியவர் பங்கதெனியாவைச் சேர்ந்த எஸ்.ஜெயலட்சுமி.
அருள் ஜுவலர்ஸ் உரிமையாளர் திரு.கணேசனிடம் இருந்து அதிஷ்டசாலியான செல்வி ஜெயலட்சுமி தங்கநகை பரிசைப் பெறும் காட்சியே படத்தில் காணப்படுகிறது.


# தேன் கிண்ணம்



## நோன்பு...!

சுவர்க்கத்தின்
வெற்றிக்கொடி!
••
வணக்கத்தின்
வாசற்படி!
••
நரக
நெருப்பின்
திரை!
••
இறைவனின்
அருள் மறை!
••
ஈமானின்
கேடயம்!
••
நன்மையின்
தடயம்!
••
பொறுமையின்
கூலி!
••
தீமையின்
வேலி!
••
ஷைத்தானை
வீழ்த்தும்
ஆயுதம்!

**ஷஹிர்ஷா தாஸிம்**
**தர்கா நகர்.**



## உறவின் இறுதி

விடியும் பொழுதில்
விரியும் கதிரில்
விளையும் அன்பில்
வினைகள் தோன்றும்

பழகும் உறவில்
பிறக்கும் நிகழ்வு
நெடுநாள் நிலைக்கும்
நினைவில் இருக்கும்

உருகும் இதயம்
ஒருநாள் இறக்கும்
முடிவில் உறவு
முழுதும் மறையும்!

**கருங்கொடியூர்–**
**கவிராயர்.**



## அந்த இரவில்....

விண்ணிலே கூடிய தாரகைக் கூட்டங்கள்
விருப்புடன் கண்களைச் சிமிட்டும்.
வெண்மையைத் தாங்கிய மேகங்கள் தவழ்ந்து
மெல்லிசை பாடியே களிக்கும்
தண்மதி அன்னமாய் தவழ்ந்து வானிலே
தத்திமித்திமி என ஆடும்.
மண்ணில் தன்னை நோக்கிடும் அனைவர்க்கும்
மகிழ்வை தண்மையாய்க் கூறும்!

மின்மினிப் பூச்சிகள் மரங்களில் ஒற்றி
மின்குமிழ் போலவே ஒளிரும்
வன் செயல் கூட்டிடும் வௌவால்கள் பறந்து
வகை .வகைக் காய்களைக் கடிக்கும்
மென்மையும் தண்மையும் கூடிய மலர்கள்
மலர்ந்து வாசனை வீசும்
தென்றலும் மென்மையாய்த் தவழ்ந்து எங்குமே
தெவிட்டாத பேரின்பம் ஊட்டும்.

**பசறையூர் மல்லிகா பத்மநாதன்.**

## சாகப் போகிறேன்

நான்
சாகப் போகிறேன்...
•
உன் எல்லா
ஒரங்களிலும்
ஒழுகிக் கிடக்கிறது
என் உயிர்......!
•
முடிந்துபோன
இந்த(க்)காதலோடு
என் வாழ்க்கையையும்
முடித்துக்கொண்டு
நான்–
சாகப் போகிறேன்....
•
அந்த
காதலின் எச்சங்களுக்குள்ளும்
வாழப்படாத
என் வாழ்க்கை
இன்னும்
தாராளமாய்
மிச்சமுள்ளது....!
இருந்தாலும்
நான்–
சாகப் போகிறேன்....
•
தாடிக்குள்ளே
தனிமைச் சோகங்களையும்
தவறணைக்குள்ளே
வாழ்க்கையையும்
புதைத்துவிட்டு
அழுகிறேன்....
உன் விழிகளின்
அஞ்சலிகளையாவது
இங்கு
விற்றுவிட்டுப் போ....
•
என் வாழ்வின்
இந்த
கடைசிக் கணத்திலாவது
நீ
காதலியாக வேண்டாம்....
ஒரு ஸ்நேகிதியாகவாவது
ஒரு தடவை
வந்துவிட்டுப்போ....
•
காதல் சந்தையில்
வாழ்க்கை
வாங்க வந்து...
சோகங்கள்
விற்றுச் சென்றவன்
நான்
மட்டும்தான்.
•
இனி,
நீ–இல்லாத தேசத்தில்
எனக்கு–
சாகவும்
சம்மதம்தான்.

**அ.சுதாசேகர்-பொத்துவில்.**

## "பெயரில்லா ஸ்நேகம்"

உன் நிர்மல முகத்தின்
நித்திய வருகைகளால்
எனக்குள் பூக்கும்
புஷ்பங்கள்....!
உன் தரிசனங்கள்
ஒரு நாளேனும்
தவறும் போது
சோம்பிப் போகும்
மனத்தாமரை!...

உன் வசிப்பிடம்
என் இருப்பிடத்திற்கு
அருகாமைதான்; எனினும்
நீ தூரமாகவே
இருப்பதாக எனக்குள்
தோன்றும் பிரமைகள்.....!

பெண்ணே!
இத்தனை நிகழ்வுகள்
உன்னால் எனக்குள்
விளைந்தபோதும்
நமது உறவின்
பெயரோ தெரியவில்லை.

நமக்குள் உரையாடல்
ஊடல், ஸ்பரிசிப்புக்கள்
எல்லாம் உண்டு
கூடலைத் தவிர!

இருந்தும் நமது ஸ்நேகத்தின்
விலாசம் எனக்கோ
உனக்கோ புரியவில்லை.
என் மனக் கூண்டிற்குள்
உன்னை வசப்படுத்த
எனக்குத் தெரியவில்லை.

நீயோ வசப்படுகின்ற
வர்க்கமும் இல்லை.
பிறகெப்படி நமது உறவு
பெயர் பெறும்?....
பெண்ணே!

நீ சில எல்லைகளை
தகர்த்துக்கொண்டு
வெளியே வரும்வரை
நமது உறவின் விலாசத்தை
நான் தேடிக்கொண்டிருப்பேன்.

**டி.எம்.சுபைர்கான்**
**காத்தான்குடி.**



## மனிதம் உள்ளவர்கள்?

எனக்குள் நர்த்தனமாடுகிறது
துவம்சம் செய்துபோட்ட
ஜீவிதம் பற்றியதான நினைவுகள்.

ஆயுதம் ஏந்தி வந்த
அந்தக் கரங்கள்
அழியாது நிழலாடுகிறது இன்னும்.

ஒவ்வொரு இரவும்
புலரும் போதும்
புதிய பிரதிபெறும்.

விரவிக் கிடக்கிறது
அந்த ஆயுதங்கள்
ஸ்பரிசித்த வேதனைகள்
இந்த வியூகத்தில்
நீ...ண்....ட காலமாக

நான் ஒரு
முஸ்லிம் என்ற
முகாந்தரத்திற்காக
முகம் சிதைக்கப்பட்டேன்.
மாருதம் கூட எனக்காக
மறைவாக கண்ணீர் சிந்தியதாக
செவியுற்றேன்.
பாதி உயிரை(ப்)
பறித்த அவர்கள்
இன்னும் தருணம் தேடுகிறார்கள்
மீதி கைப்பற்றுவதற்கு.

சித்தத்தில்
சிதிலமாகிப்போன
சிந்தை.
இவர்களிடம்
நடமாடுகிறது.

இறைவா!
இவர்களும் மனிதம்
உள்ளவர்கள்தானா?

**இஸ்லாஹிய்யா கே.முனாஸ்.**



## சூரியகந்தை

புதை குழிகள்
உயிர்த்தெழுந்தன
யேசுக்குப்பின்.

## "கனவுத்(சமா)தானம்"

தீனி போட்டார்கள்
புறாக்களுக்கு
பிடித்துக்கொ(ள்)ல்வதற்காய்

**கணேஷ் (எம்.) தர்மலிங்கம்.**

## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

**வந்தவர்:** இன்ஸ்பெக்டர்... நாயோட காலையில வோக்கிங் போனா என் மனைவி திரும்பி வரலை.
**இன்ஸ்பெக்டர்:** இனி என்ன செய்யிறது? வேற நாய் வாங்கிட்டுப் போங்க.

□□

**ஒருவர்:** அந்த டாக்டர் போலி டாக்டர்ன்னு எப்படி கண்டு பிடிச்சே?
**மற்றவர்:** மேஜர் ஒப்பரேஷனா, மைனர் ஒப்பரேஷனான்னு கேட்டதுக்கு பதினெட்டு வயசைத் தாண்டியிருந்தா மேஜர், தாண்டலையின்னா மைனர்ன்னு சொன்னார். அதை வச்சுத்தான்.

□□

**அவர்:** என்னங்க.... நீங்க வளர்க்கிற கிளியின் கழுத்தில 'பை' ஒண்ணு தொங்குது?
**இவர்:** அது பைங்கிளிங்க.

□□

**நிருபர்:** கல்லையும், மண்ணையும் தின்று சாதனை புரிய எப்படிப் பழகிக் கொண்டீர்கள்?
**அவர்:** என் மனைவியின் சமையலைச் சாப்பிட்டுத்தான்.

□□


**ஒருவர்:** இது ரொம்ப சின்ன ஒப்பரேஷன், இதுக்குப் போய் பயப்பிடு நீங்களேன்னு நேர்ஸ் சொன்னாலும், நான் ஓடி வந்திட்டேன்.
**மற்றவர்:** நேர்ஸ் உங்களை தைரியம்தானே மூட்டினாங்க, பின்ன ஏன் ஓடி வந்திட்டீங்க?
**ஒருவர்:** நேர்ஸ் தைரியமூட்டினது என்னை இல்லை. டாக்டரை.

□□

**டாக்டர்:** ஒப்பரேஷனுக்குப் பிறகு நீங்க ஒரு புது மனுஷனாயிடுவீங்க.
**நோயாளி:** அடுத்த ஜென்மத்தில் எல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை டாக்டர்.

□□

**பாபு:** என்னடா இது உனக்கு காய்ச்சல் அடிக்குதுன்னு சொன்னே, ஆனா உடம்பு சுடவே இல்லை, குளிருகிறதே...?
**கோபு:** இது 'குளிர்காய்ச் சலடா.




### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| புதன்- | கடன் பயம், பெரியோர் பழி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, அதிகார விருத்தி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | உறவினர் உபத்திரவம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| சனி- | ஆடம்பரச் செலவு, கடன் படல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு மந்தம், கடன் சுமை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பெரியோர் அனுகூலம், மனக் கவலை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| வியாழன்- | பணக்கஷ்டம், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | கடன்தொல்லை நீங்கும், கௌரவம். | பி.ப. 2 மணி |
| சனி- | முயற்சி மேன்மை, காரியசித்தி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவருவாய். | காலை 7 மணி |
| திங்கள்- | காரியசித்தி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | கௌரவம், மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| புதன்- | துயர் நீங்கும், பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், தொழில் மந்தம். | காலை 6 மணி |
| வெள்ளி- | பூமியால் நன்மை, காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| சனி- | பெரியோர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் கஷ்டம், பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் அனுகூலம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், முன்னேற்றம். | காலை 8 மணி |
| புதன்- | பொருள் வரவு, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- | உயர்ந்தநிலை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- | புதிய முயற்சி, முன்னேற்றம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | உயர்ந்த நட்பு, முன்னேற்றம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| புதன்- | பயனுள்ள செயல், பணவரவு. | பகல் 11 மணி |
| வியாழன்- | வெளியிட வாசம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், காரியசித்தி. | பகல் 12 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

## ★ இந்த வாரம் உங்கள் பலன் ★

(19.02.95 முதல் 25.02.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், சனி |
| மேடம் | - கேது |
| கர்க்கடகம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருச்சிகம் | - வியாழன் |
| தனு | - வெள்ளி |
| மகரம் | - புதன் |

★ சந்திரன்-கன்னி, துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார் ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | உத்தியோக முயற்சி, மனக் கவலை. | காலை 9 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, தேகசுக நன்மை. | பகல் 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 7 மணி |
| புதன்- | காரியசித்தி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | மனக் கவலை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | மறைமுக எதிர்ப்பு, பொருள் விரயம். | காலை 7 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், உறவினர் கலகம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பணக்கஷ்டம், மனக் கவலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- | இனசன விரோதம், கௌரவக் குறைவு. | காலை 9 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, மனக்கவலை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 6 மணி |
| சனி- | வெளியிட வாசம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | வெளியிட பயணம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், மனக்குறைபதிகம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | காரியசித்தி, கௌரவம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| சனி- | உயர்ந்த நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், பொருள் விரயம். | காலை 6 மணி |
| திங்கள்- | பணச் செலவு, மனக்கவலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- | காரியசித்தி, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், உயர்ந்தநிலை. | காலை 6 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, மனக்கவலை. | பகல் 12 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | பயனுள்ள செயல், காரியசித்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- | தனலாபம், கௌரவம். | காலை 6 மணி |
| வியாழன்- | காரியத்தடை, பொருள் விரயம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | செய்தொழில் நட்டம், மனக் கவலை. | காலை 9 மணி |
| சனி- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 9

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, துன்பம் நீங்கும். | காலை 7 மணி |
| திங்கள்- | பணவரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உறவினர் உபத்திரவம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| புதன்- | புதிய முயற்சி, பணச் செலவு. | காலை 9 மணி |
| வியாழன்- | தனலாபம், மனக் கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| வெள்ளி- | உயர்ந்தநிலை, முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்





## ஒற்றுமை

மாணவ மணிகள் நாமன்றோ
மாண்புறப் பேணுதல் நலமன்றோ
தூண் என நின்று தாங்கிடுவோம்
துலங்கிடும் இலங்கையைக் காத்திடுவோம்.

பெரியார் சிறியார் என்றெல்லாம்
பேசுதல் மடமையின் குணமன்றோ.
சரியே சகலரும் சமூகத்தில்
சமத்துவம் காட்டும் பாதையிதே.

உழைப்பவர் கையே உயர் கையாம்
உண்மை இதுவெனச் சாற்றிடுவோம்
களைப்பே இன்றிக் கடமைகளை
கண்ணியமுடனே ஆற்றிடுவோம்.

பிறந்த மண்ணின் பெருமையதே
பெரிதென நாளும் நினைத்திடுவோம்.
இறந்த காலத்தை மறந்திடுவோம்.
இருப்பதை நலமே புரிந்திடுவோம்.

கற்றதின் பயனைக் காட்டிடுவோம்.
கருத்துடன் புகழ்க்கொடி நாட்டிடுவோம்.
பெற்றவரெல்லாம் பெருமையுடன்
பேர் பெற்றிடவே செய்திடுவோம்.

ஒற்றுமை என்னும் ஒரு கயிற்றைப்
பற்றியே நாங்கள் பணிகள் செய்தால்
சுற்றிய துன்பமும் தொலைந்திடுமே.
சுகங்கள் பலவும் வழங்கிடுமே.

ஏ.சி.அப்துல் றகுமான்-ஏறாவூர்-6

"நேர்படப் பேசு.
நையப் புடை.
நொந்தது சாகும்.
நோற்பது கைவிடேல்
பணத்தினைப் பெருக்கு."
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை



# நல்லான் ஒருவன்

விஜயபுரி நாட்டை சிறந்த கல்விமானும், நீதிமானுமாகிய ஜெயமாறன் ஆண்டு வந்தான். அவனது ஆட்சியில் மக்கள் எவ்வித குறையுமின்றி இன்பமுடன் வாழ்ந்து வந்தனர்.

மக்கள் சந்தோசமாக இருப்பது போன்று மன்னன் ஜெயமாறன் சந்தோசமாக இருக்கவில்லை. காரணம், அவன் மனதில் ஒரு பெரிய குறை இருந்தது. அது தனக்கு ஒரு குழந்தை இல்லையே என்பதுதான். தனக்குப் பிறகு தன் நாட்டை ஆள ஒரு வாரிசு இல்லையே என்று அவன் மிகவும் வருந்தினான்.

தனக்குப் பின் நாட்டை ஆள ஒரு நல்ல மனிதனைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் விஜயமாறனுக்கு ஏற்பட்டது. பொறுப்பு மிக்க அப்பணியை வேறு எவரிடமும் ஒப்படைக்க விரும்பாமல் தானே அதை மேற்கொள்வதென்று தீர்மானித்தான். அதனால் மாறுவேடம் அணிந்து அடிக்கடி நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று நல்ல மனிதன் ஒருவனாவது கிடைப்பானா என்று தேடிக் கொண்டிருந்தான் அவன்.

அவ்வூரில் மணிவண்ணன் என்று ஒரு வாலிபன் இருந்தான். அவன் மிகவும் நல்லவன். ஏழையாக இருந்தாலும் பிறர் பொருளுக்கு ஆசைப்படாதவன். மிகவும் நேர்மையானவன். உண்மையே பேசுபவன். சத்தியம் தவறி நடக்காதவன். மனித நேயம் மிக்கவன். அவனது நல்ல குணம், நல்ல மனம், உயர்ந்த எண்ணம் ஆகியவை மாறுவேடத்தில் வந்த விஜயமாறனை மனம் நெகிழச் செய்துவிட்டது.

மாறுவேடத்தில் இருந்த மன்னன் அவன் அருகில் சென்று,

"தம்பி நீ ஒரு உதவி செய்யவேண்டும் எனக்கு. நான் திருத்தலம் ஒன்றிற்குக் கால் நடையாகச் சென்றுகொண்டிருக்கிறேன். வெகுதூரம், வெகுநாட்கள் செல்வதால் விலையுயர்ந்த பொருளான இப்பொன் சங்கிலியை எடுத்துச் செல்வது எனக்கு ஆபத்தை விளைவிக்கும். நான் திரும்பி வரும்வரை இதை நீயே வைத்துக்கொள். திரும்பி வந்ததும் பெற்றுக்கொள்கிறேன்," என்றான்.

அதற்குச் சம்மதித்து பொன் சங்கிலியை வாங்கித் தன் பெட்டியில் பத்திரமாகப் பூட்டி வைத்தான் மணிவண்ணன். கிழவனாக மாறுவேடம் பூண்ட ஜெயமாறன் அரண்மனை திரும்பினான்.

சில நாட்களில் மன்னன் ஒரு செய்தி கேள்விப்பட்டான். மணிவண்ணன் தனக்குச் சொந்தமான நிலமொன்றில் வீடு கட்டப் போகிறான் என்பதுதான் அந்தச் செய்தி.

உடனே தனக்கு மிகவும் நம்பிக்கையான சேவகர்கள் இருவரை அழைத்து அவர்களிடம் ஒரு குடம் நிறைய பொற்காசுகளைப் போட்டு மூடிக்கொடுத்து அதை இரவு வேளையில் எவரும் அறியா வண்ணம் மணிவண்ணனின் நிலத்தில் புதைத்து விடும்படி கட்டளையிட்டான். அவர்களும் அவ்வாறே செய்தனர்.

மணிவண்ணன் வீடுகட்ட ஆட்களை அழைத்து வந்து அத்திவாரம் வெட்டத் தொடங்கினான். அப்போது மன்னன் புதைத்து வைத்திருந்த புதையல் கிடைத்தது. அது தனக்குச் சொந்தமில்லை; அரசாங்கத்திற்குச் சொந்தம் என்று தீர்மானித்த மணிவண்ணன் அப்புதையலை எடுத்துச் சென்று அரசாங்க அதிகாரியிடம் கொடுத்து விட்டான். தன் ஆட்கள் மூலம் ஜெயமாறன் இதை அறிந்துகொண்டான் . புதையலைத் தானே வைத்துக்கொள்ளாது அரசு அதிகாரியிடம் சேர்த்துவிட்ட மணிவண்ணனின் நல்ல குணம், ஏற்கனவே அவனைப்பற்றி அரசன் கொண்டிருந்த நன்மதிப்பை இன்னும் அதிகரிக்கச்செய்தது.

மணிவண்ணனுக்குப் புதையல் கிடைத்ததையும், அது அரசாங்கத்திற்கே சொந்தம் என்று அதிகாரியிடம் கொடுத்து வெகு நாட்களாகியும் அரசியல் கருவூலத்தில் அரசு அதிகாரி சேர்க்காததையும் அறிந்தான் ஜெயமாறன்.

உடனே மணிவண்ணனையும், அரசு அதிகாரியையும் அரசவைக்கு வரச்செய்தான். அரசு அதிகாரியைப் பார்த்ததும், அவர் புதையலை கருவூலத்தில் சேர்க்கவில்லைப் போலும் என்றெண்ணிக்கொண்டான் மணிவண்ணன். கெட்டவனான அதிகாரியைத் திருத்த ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததென்று எண்ணிய மணிவண்ணன் தனக்குப் புதையல் கிடைத்ததாகவும், தனக்குக் கடன் அதிகமாக இருந்ததால், அக்கடனை தீர்க்க புதையலைப் பயன்படுத்திக்கொண்டதாகவும் கூறினான்.

அதற்கு ஜெயமாறன், "சில நாட்களுக்கு முன் உனக்கு ஒரு வயதானவர் ஒரு பொன் சங்கிலியைக் கொடுத்தார் அல்லவா? அதனைக் கொண்டு உன் கடனைக் கொடுத்திருக்கலாமே?" என்று கேட்டான்.

"அது என்னை நம்பி ஒருவரால் கொடுக்கப்பட்ட ஒரு பொருள். அதற்கு நான் துரோகம் செய்யமாட்டேன்," என்றான் மணிவண்ணன்.

அரசாங்க சொத்தை அவன் அபகரித்துக்கொண்டதற்காக அரசவையில் கசையடி தண்டனை கொடுக்க ஆணை பிறப்பித்தான் ஜெயமாறன். ஆணை நிறைவேற்றப்படும் தறுவாயில் அரசு அதிகாரி தன் தவறை ஒப்புக்கொண்டான்.

"மணிவண்ணா! நடந்தது அனைத்தும் எனக்கும் தெரியும். உன் நேர்மையையும், வாய்மையையும், சீரிய ஒழுக்கத்தினையும், எதிரியை மன்னிக்கிற உயர்ந்த குணத்தையும் அறிந்தேன். உனக்குப் பல சோதனைகள் கொடுத்துச் சோதித்தேன். நீ எல்லாவற்றிலும் வென்றுவிட்டாய். வாரிசற்ற எனக்குப் பின்னால் இந்நாட்டை ஆள தகுதியுள்ளவன் நீதான்," என்று மணிவண்ணனை மிகவும் பாராட்டினான் அரசன் ஜெயமாறன்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.02.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 79
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 76

பரிசுக்குரியவர்
இ.நளினாவதி
இந்துக்கல்லூரி-வாழைச்சேனை.

பாராட்டுக்குரியவர்கள்
எஸ்.ஐ.பாத்திமா பஸ்மியா
பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம்-புத்தளம்.

எம்.என்.நஸ்றீனா பேகம்-புத்தளம்.

ஜெ.சுபாஷினி-மாறை/புனித மத்தேயு வித்தியாலயம்-தெனியாய.

மு. நாகதாசன், வ/த.ம.ம.வி-வவுனியா.

அ.நிஷாந் தேவறூபன்
மட்/புனித மிக்கேல் தேசிய பாடசாலை-மட்டக்களப்பு.

பாத்திமா பாஹிமா-கொழும்பு-10.

முல்லாவின் சிரிப்புக்கதை

## கொள்ளைக் கூட்டத்தை ஓட வைத்தவர்

**தம்முடைய வீரச் செயல்களை நண்பர்களிடம் முல்லா நஸ்ருதீன் விளக்கமாகக் கூறிக்கொண்டிருந்தார்.**

"ஒருமுறை பாலைவனத்தில் இருந்த ஒரு பயங்கரமான கொள்ளைக் கூட்டத்தையே ஓட வைத்திருக்கின்றேன் தெரியுமா?" என்று பெருமையாகச் சொன்னார் முல்லா.

கேட்டுக்கொண்டிருந்த நண்பர்களுள் ஒருவர் "முல்லா அது எப்படி முடியும்? தனி ஆளான நீங்கள் ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்தையே எப்படி ஓட வைத்தீர்கள்?" என்று வியப்போடு வினவினார். கொள்ளைக்கூட்டத்தினரைக் கண்டதும் நான் பாய்ந்து ஓடினேன். அதைக் கண்ட அவர்கள் என்னவோ ஏதோ என்று எண்ணிக்கொண்டு என்னைப்பிடிப்பதற்காக துரத்திக் கொண்டு ஓடி வந்தார்கள்." என்று பெருமிதத்தோடு பதில் சொன்னார் முல்லா.

**தொகுப்பு-ஏ.ஏ.ஏ. ஆஸிர்-சிலாபம்.**

## விடுகதைகளும் விடைகளும்

01. இரும்பினால் ஆன ஒன்று ஒரு கண்கள் உள்ள ஒன்று. ஆனால் இருக்க முடியாத ஒன்று.
02. பூக்காது காய்க்காது. ஆனால் பழுக்கும். அது என்ன?
03. தோகை இல்லை. ஆனால் ஆடும். அது என்ன?
04. மரத்திலே காய்க்காத கனி மாதர்கள் விரும்பும்கனி. அது என்ன கனி?
05. நீருள்ள சமுத்திரம் இரு நிறமுள்ள சமுத்திரம். அது என்ன?
06. வணங்கக்கூடிய ஒன்று. முன்னெழுத்தையும் பின்னெழுத்தையும் இணைத்தால் சிலர் குடிக்கக்கூடிய ஒன்று. அது என்ன?
07. கையிலே ஏறாது காலிலே ஏறும். ஆனால் அது சப்பாத்து அல்ல. அது என்ன?
08. மரத்திலே காய்க்காத பழம். அது என்ன பழம்.

**விடைகள்**

01. ஊசி 02. முடி
03. ஊஞ்சல் 04. பிள்ளைக்கனி
05. கண் 06. கடவுள்
07. கரணை 08. ஐஸ்பழம்.சம்பளம்.

**எம்.எம்.எஸ். ஆரிபா-காத்தான்குடி-04.**


01. பகலிலே விரதமிருப்பாள். இரவிலே உண்பாள். யார் அவள்?
02. காட்டிலே வாழாத மிருகம். ஆனால் அது வாலில்லாத மிருகம். அது என்ன?
03. காலில்லாத ஒருவன், அவன் மரத்திலும் ஏறுவான். நிலத்திலும் ஏறுவான். அவன் யார்?
04. காலிலே ஏறும். கையிலே ஏறாது. அது என்ன?
05. வெள்ளை மாட்டுக்கு விலாவிலே கொம்பு. அது என்ன?
06. கண்ணில்லை. ஆனால் அழுவான். அவன் யார்?
07. காலிலே ஏறாது, கையிலே ஏறும். ஆனால் வளையல் அல்ல. அது என்ன?
08. மேலேயும் கட்டிடம் கீழேயும் கட்டிடம். நடுவிலே பள்ளம். அது என்ன?

**விடைகள்**

01. வெளவால் 02. முட்டைப்பூச்சி
03. ஆணி 04. சப்பாத்து 05. கேத்தல்
06. மழை 07. கடிகாரம் 08. வாய்

**ஏ.ஆர்.சித்தி சிபானி-மட்/அன்வர் வித்தியாலயம்-காத்தான்குடி-06.**

## ஈசாப்



- **ஈசாப் என்பவர் யார்?**
  பண்டைய கிரேக்க நாட்டில் வாழ்ந்தவர். நாடோடிக் கதைகள் கூறுவதில் வல்லவர். 'ஆமையும், முயலும்', 'நரியும் திராட்சைப்பழமும், போன்ற அவரது கதைகள் மிகவும் பிரபலமானவை.
- **இவரது வாழ்க்கை எப்படிப்பட்டது?**
  கி.மு 620ம் ஆண்டு ஒரு அடிமையாகப் பிறந்தார். பின் அடிமையாக வேலை செய்தார். அவரது அறிவுக் கூர்மையை மெச்சி அவரது எஜமான்களில் ஒருவர் அவரைச் சதந்திர மனிதராக்கினார்.
- **அவர் எப்படி இருந்தார்?**
  பிறரைக் கவரக்கூடிய தோற்றம் அவரிடம் இல்லை. எனினும் சாதுரியமான பேச்சினால் அனைவரையும் கவரக்கூடியவராய் இருந்தார்.
- **அவர் சுதந்திர மனிதனான பிறகு என்ன செய்தார்?**
  ஊர் ஊராகச் சுற்று மனிதர்களை அறிந்தார். பலவகையான நீதிக் கதைகளைப் போதித்தார். லிடியா என்ற நாட்டின் மன்னன் குரோசஸ் சிறந்த அறிவாளி. அவரது அழைப்பின் பேரில் லிடியா தலைநகர் சாட்ரிஸ் சென்றார். அங்கு அரசவை உறுப்பினரானார்.
- **ஈசாப்பின் முடிவு என்ன?**
  டெல்பி என்ற நகருக்கு நிவாரணப் பணிக்காக நிறைய தங்கத்துடன் மன்னர் குரோசஸ், ஈசாப்பை அனுப்பிவைத்தார். அங்குள்ள மக்கள் மிகவும் பேராசை கொண்டு ஈசாப் தனது பணியை செய்ய விடாமல் தொந்தரவு செய்தனர். அதனால் கோபமடைந்த ஈசாப் தங்கத்தைத் தலை நகருக்கே திருப்பி அனுப்பிவிட்டார். இதை அறிந்தவுடனே அவ்வூர் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஈசாப்பைக் கொன்றுவிட்டனர்.


## அறிவோம் மனதில் பதிவோம்



உலக மக்களிடையே o பிரிவு(குறூப)வகை இரத்தம் கொண்டவர்களே அதிகம். ஆனால் இடத்திற்கு இடம் இது மாறுபடுகிறது. நோர்வே நாட்டில் A குறூப் இரத்தம் கொண்டவர்களே மிக அதிகம்.



அவுஸ்திரேலியாவில் 'புளூயி' என்ற நாய் 29 ஆண்டுகள் 5 மாதங்கள் வாழ்ந்தது. நாய்கள் 20 ஆண்டுகள் வாழ்வதே அதிசயம். புளூயி அதிக ஆண்டுகள் வாழ்ந்து சாதனை புரிந்துள்ளது.



பூயி என்ற சிறுவன் தனது இரண்டாவது வயதில் சீன மன்னனாக்கப் பட்டான். ஐந்தாவது வயதில் பதவி நீக்கம் செய்யப் பட்டான்.

தமிழகத்தின்
பிரபல எழுத்தாளர்
'முரசு'க்காக எழுதும்
தொடர் இது!
வாசகர்களின்
ஊகிப்புத் திறனுக்கு சவால்!
கண்டுபிடிக்கும் வாசகர்களில்

எழுதுவது யார்?

பத்து அதிஷ்டசாலிகளுக்கு
அசத்தலான-பரிசுகள்
காத்திருக்கின்றன.
தொடர்ந்து வாசியுங்கள்
நாம்கேட்கும்போது
விடையை எழுதி
அனுப்பினால் போதும்.

# மகா சூலம் 9



நீலகண்டன் திருமேனிக்கு எல்லாமே கெட்ட சகுனங்களாகத் தட்டுப்பட்டன.

கந்தர்வன் காட்டுக்குப் பக்கத்தில் ஆரம்பித்த மனத்தோணல் அவரை வெகுதூரம் தொடர்ந்து தவிக்கச் செய்து கொண்டேயிருந்தது.

தனக்குப் பின்னால் தன்னை நிழலாக எதுவோ தொடர்ந்து வந்து கொண்டிருக்கிற பிரமை- வெகு நேரமாகியும் மனசிலிருந்து விலகவேயில்லை.

மனசுக்குள் ஏதேதோ மந்திரங்களை உருப்போட்டுக் கொண்டிருந்தும்..... அந்தச் சுவடியைக் கிழிக்கிற மாதிரியான மனத்தோணல்! ஆனால் தன்னைப் பின் தொடருவதைப் போன்ற சப்தம் லேசாகக் குறைகிற உணர்வு.

உடனே தனது நடைவேகத்தை ஓட்டமாகவே மாற்றிக்கொண்டுவிட்டார் நம்பூதிரி.

தாமதிக்கிற ஒவ்வொரு நிமிடமும் தப்பிதங்கள் சம்பவிக்கலாம்.

கோகுலின் உயிருக்கே ஆபத்து வரலாம்.

நீலகண்டனுக்கு இது வெகு தெளிவாகவே புரிந்து போயிருந்தது. எங்கேயோ.... எப்போதோ.... தெரிந்தோ.... தெரியாமலோ கோகுல் ஏதோ ஒரு சிக்கலில் மாட்டியிருக்கிறான்! அதிலிருந்து அவனைப் பெற்ற தகப்பன் என்கிற முறையில் அவர் காப்பாற்றியாக வேண்டும்.

அவனை மிரட்ட வந்திருப்பவள் அல்பசுல்பமானவள் அல்ல.

கோகுலின் இரத்தத்தையே குடிக்க வந்திருப்பவள்.

யவ்வனமும் அங்க லாவண்யமும் காட்டி கோகுலின் வாலிபத்தை வசியப் படுத்திவிடுதல் அவளுக்குச் சுலபமான விஷயம்! பெண்மையை உண்மையாகப் புரிந்து கொள்கிற திண்மை அவனுக்கு இல்லை! அப்படியிருக்க ஆபத்துகளின் கால்களுக்கு அடியில் சிக்குவது கோகுல் தானே நசுங்கிச் சாகத்தான்!

எந்த ஆபத்தும் அண்டக் கூடாது என்பதற்காகத்தான் அந்தத் தாயத்தை எப்போதும் இடுப்பிலேயே கட்டியிருக்கச் சொல்லிவிட்டு வந்தது!

'கடவுளே..... அவன் ஏமாந்துவிடக் கூடாது!'

நீலகண்டன் திருமேனி ஓடிக் கொண்டே மனசுக்குள் பிரார்த்தித்தார்! பாலேக்கல் மாந்திரீகனின் மகனிடம் அவள் பரிசோதனை நடத்த வந்திருக்கிறாள்.

அதுவும் தன்னால் கட்டுப்படுத்தி அழிக்க முடியாத சக்தியோடு.

தாயத்து அவளைத் தடுப்பது சில நாழிகைகளுக்குத்தான். ஆனால் காலமுழுக்க கோகுல் நிம்மதியாக இருக்க.... தக்க பரிகாரம் செய்தே தீரவேண்டும்!

மேலிடத்து மனையில் இது தெரிந்தால், தனது குடும்பப் பாரம்பரியம் எவ்வளவு கேவலப்படும்?

இதுவும் நீலகண்டன் திருமேனியின் நெஞ்சைக் குடைந்தது.

ஏராளமான அம்புகள் வியூகமாய்த் தன்னை வளைத்துக்கொண்டுவிட்டதைப் போல் ஒரு மன அவஸ்த்தை!

நிராயுத பாணியான சக்ரவர்த்தி! ஸ்ரீலதா-கோகுல் சந்திப்பின் காரணமாக ஆரம்பத்தில் பவத்ராதன் திருமேனியின் மந்திரங்களால் தனது இல்லத்துக்கு ஏதோ ஒரு சங்கடம் வந்துவிட்டதாக நினைத்து மருண்டு போனவர் நீலகண்டன். ஆனால் பவத்ராதன் அப்படி எதுவும் தன் குடும்பத்தோடு விளையாடவில்லை என்று பூஜை அறைக்குப் போனதுமே புரிந்து விட்டது!

பிறகுதான் எச்சரிக்கையாக அந்தத் தாயத்தை எடுத்து கோகுலின் கையில் கொடுத்தார்.

இனி... அந்தத் தாயத்தும் தனது வீரியத்தை இழந்துவிட்டாலோ........?

-நினைக்கவே முடியவில்லை!

இரவின் கரும்பூக்கள் இருட்டாக மலர்ந்து உலகம் முழுவதையும் மூடியிருந்தது! மகனைக் காப்பாற்ற ஒரே ஒரு மனிதரால்தான் முடியுமென்றுதான் அவரைத் தேடி ஓட்டமும் நடையுமான ஒரு பிரயாணம் மேற்கொண்டிருந்தார் நீலகண்டன் திருமேனி.

□□

மாந்திரீக வித்தைகளுக்குத் தன்னைத் தயார்படுத்தியவர் ஆனந்த குரு. அவரை இப்போதுதான் நீலகண்டன் நினைவு கூர்ந்து பார்த்தார். வித்தைகளைக் கற்றுக் கொண்டபின் வீரியப்படுத்தி தன் புகழை ஸ்தாபிக்க வேண்டும் என்கிற வெறியிலேயே சொல்லிக்கொடுத்த குருவைத் தள்ளி வைத்தவர் நீலகண்டன் நம்பூதிரி. ஆனால் இப்போது? தான் கற்றது கைமண் அளவுகூட இல்லை என்று உணர்ந்து கொண்டதே அவரை இப்படி விரட்டி அடித்திருக்கிறது!

குருவின் காலடியில் போய் விழ வேண்டும்.

அதற்கு எந்த வழியானாலும் சரி- யோகிகளைச் சந்திக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன.

எதுவெல்லாம் தன்னால் முடியுமென்று இறுமாந்து நின்றாலும் கடைசியில் எதுவோ ஒன்று தன் காலை முறித்துப் போடுகிறது! அதுதான் இப்போது நீலகண்டனுக்கும் நடந்திருக்கிறது.

வயல் வரம்புகளிலும் குறுக்கு வழிகளிலும், புதர் நடுவிலுமாகப் புகுந்து புகுந்து விடிவதற்குள் குருவின் ஆஸ்ரமத்தை அடைய வேண்டும்!

ஓடி ஓடிக் களைத்தாலும் உள்ளத்தில் ஒரே இலட்சியம்-

ஆனந்த குருவின் காலடி! அதுதான் இனி நீலகண்டனின் சரணாலயம். பலப்பல கிராமங்களை எல்லாம் தாண்டிவிட்டார் நீலகண்டன்!

நிச்சலனமாக இருந்தது ஆறு.

அதன் அக்கரையில் ஒரு ஓலைக் குடிசை.

குடிசைதான் குருவின் பர்ண சாலை. யோகியைப் போல் எந்த நேரமும் லோக ஷேமத்துக்காகவே தவமிருக்கிறவர் குரு. அவருக்கு உறக்கமும் விழிப்பும் எல்லாமே யோகம் தான். தவயோகம்.

குடிசையின் ஓலைக் கதவு திறந்து இருந்தது.

காற்றுதான் அவ்வப்போது அந்தக் கதவைச் சாத்தும். பிறகு அந்தக் காற்றே கதவையும் திறந்து வைக்கும்!

இப்போது கதவு- நீலகண்டனின் வரவுக்காகவே திறந்து கொண்டிருந்தாற்ப் போல் ஓர் உணர்வு!

ஆற்றுக்குள் தாவிக் குதித்தார் நீலகண்டன்.

நீந்தித் தான் கரை சேரவேண்டும்- வாழ்க்கையைப் போலவே. சிலநேரம் ஆறு இழுத்தது. சில நேரம் சாந்தமாகவும் இருந்தது. எப்படியோ நீந்தி நீந்திப் போய்க் கரையை அடைகிறபோது.... நீலகண்டனுக்கு அதிர்ச்சி!

மறுபடியும் ஒரு சோதனை!

ஊங்காரமிட்டது காற்று. உடனே குருவின் குடிசை வாசல் சாத்திக்கொண்டது! ஈரம் சொட்டச் சொட்ட எழுந்தவரைக் காற்று அடியெடுத்து வைக்கவிடாமல் பின்னுக்கே தள்ளியது!

"குருவே சரணம்!" என்று கூவினார் நீலகண்டன்.

தியானத்திலிருக்கும் குருவைத் தனது கூப்பாடு கலைத்துவிடக்கூடாது என்கிற உணர்வு ஒரு பக்கமிருந்தாலும்.......... கூப்பிடாமல் ஒரு கண் திறக்கமாட்டாரே என்கிற கவனமும் நீலகண்டனுக்கு இருந்தது! எனவே அந்த ஓலைக் கதவும் திறந்தது!

வளர்ந்து நீண்ட ஜடா முடியும் மெலிந்த உருவமுமாக கதவை ஒருகையால் பற்றிய படி காட்சி தந்தார் ஆனந்த குரு.

"உள்ளே வா நீலகண்டா!"

உத்தரவுக்குக் கட்டுப்பட்டார்ப் போல் காற்றின் ஊங்காரம் அப்போது விட்டு விலகியது. நீலகண்டன் நெடுஞ்சாண் கிடையாக குருவின் காலடியில் விழவும் ஒதுங்கிக் கொடுத்தது!

"உள்ளே வா என்றால் காலில் விழுகிறாயே நீலகண்டா!" என்றபடி குரு திரும்பிப் போய்த் தமது புல் திண்டு மீது அமர்ந்து விட்டார். உடனே எழுந்துபோய் குருவின் அருகில் பவ்யமாகக் குனிந்து நின்றார் நீலகண்டன்.

அவரது திருமேனி மொத்தமும் கூனிப்போயிருந்தது.

"பவத்ராதன் சிலநேரம் இங்கே வருவதுண்டு. நீ மட்டும் இத்தனை வருசமாக வரவே இல்லையே! எப்படி இருக்கிறாய்?"

பதில் சொல்ல நீலகண்டனுக்கு வார்த்தை கிடைக்கவில்லை.

மவுனமாகிவிட்டார்-மனசிலே குற்ற உணர்ச்சி; குரலை அடைத்துக்கொண்டது!

"நீ....... இப்படி ஒருநாள் வருவாய் என்று எனக்குத் தெரியும் நீலகண்டா!"

குருவின் திருவாய் மட்டுமே மலர்ந்தது. கண்கள் அப்போதும் நிஷ்டையிலிருந்தன.

"பத்ரா ஜெயிச்சுட்டா! இல்லியா?"

இதைக் கேட்டதுமே நீலகண்டன் நடுங்கிப்போனார். இந்த வார்த்தைகள் இடியோசை போல் அவர் செவியில் இறங்கின. அப்படியானால் கோகுலைச் சீண்ட வந்த யக்ஷிணிதான் பத்ராவா?

மனசுக்குள் நீலகண்டன் இப்படிக் கேட்டதுமே குரு அதை உணர்ந்ததுபோல் விளக்கிக் கூற ஆரம்பித்தார்.

"எத்தனையோ நூற்றாண்டுகளாக பத்ரா இப்படி ஒரு சந்தர்ப்பத்துக்காகவே காத்துக்கிட்டிருக்கா நீலகண்டா! கஷ்டகாலம்- அவளுக்கு இரையானவன் உன் மகன்தான். அவனை இனி காப்பாற்றணும்னா சிரமம். எப்படியாவது காப்பாற்றித்தான் தீரணும். இல்லேன்னா அவளாலே உன் மகனுக்கு மட்டுமில்லே-உலகத்துக்கே அழிவு! லோக ஷேமத்துக்காகத்தான் இப்போ உனக்கு நான் உதவலாம்னு முடிவெடுத்திருக்கேன். இப்போதைக்கு என்னாலே முடியுற சக்தி-இவ்வளவுதான்!" என்றார் ஆனந்த குரு நீலகண்டனின் முகத்தருகே கையை நீட்டி..

அந்தக் கையில் சிறு சூலாயுதம் இருந்தது.

"...... இதை உன் மகன் தங்கியிருக்கிற அறையிலே வை. இதுக்கு இனியும் ஏழுநாள் மட்டும்தான் வீரியம். அதுக்குள்ளே நீ, அக்னி மலைக் குகையிலே இருக்கிற பஞ்ச லோக சூலத்தை எடுத்துட்டு வரணும். வந்தா அந்தச் சூலத்திலே அவளை ஆவாகிச்சு அடக்கிவைக்கறதுக்கு என்னாலே ஆன முயற்சி எடுக்கறேன்!"

அப்போதும் குரு அடக்கத்தோடுதான் பேசினார். இது நீலகண்டனின் நெஞ்சுக்குள் ஓர் அக்கினி உருண்டையைப் புரளச் செய்தது!

"ஏழுநாள் கெடு எதுக்குத் தெரியுமா?"

குருவின் குரல் நீலகண்டனின் செவியில் தடவியது!

"தெரியலே ..... குருவே!"

"உன்னாலே தெரிஞ்சுக்க முடியாதது இனியும் பலது இருக்கு நீலகண்டா! அதுக்குள்ளே நீ ஆர்ப்பாட்டம் செஞ்சதுதான் தப்பு! இனியும் ஏழு நாள்லே பவுர்ணமி வரும். அன்னிக்குத்தான் உன் மகன் செஞ்ச தப்புக்குப் பரிகாரமும் செய்து வைக்கணும். இல்லேன்னா பத்ரா அடங்க மாட்டா!"

"அக்கினி மலை எத்தனையோ தூரத்துக்கு அப்பாலிருக்கே குருவே! ஏழு நாள்லே என்னாலே அங்கே போய்த் திரும்ப முடியுமா?"

"நினைச்சா எதுவும் முடியும் நீலகண்டா. ஆனா நினைப்பு நல்லதா இருக்கணும்- அது முக்கியம்."

குருவின் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் ஒவ்வொரு உட்பொருளும் இருப்பதை உணர்ந்தபோதுதான் நீலகண்டனுக்கு மனசுக்குள்ளேயே ஒரு தைரியம் வருவதைப் போலிருந்தது.

"பவுர்ணமிக்குள்ளே நீ இதை முடிக்கணும் நீலகண்டா! பத்ரா சாதாரண யக்ஷிணி இல்லே. பத்தாயிரம் யக்ஷிணிகளோட பலம் அவளுக்கு! அதுமட்டுமில்லே.... அவ பழிகார யக்ஷிணி! உன் ஒரு கோகுலை மட்டுமில்லே...ஏராளமான கோகுலை இரையாக்கினாலும் அவளோட மோகப் பசி தீராது! அதனாலே வாலிபத்தை அடையும் ஒவ்வொரு வாலிபனும் அவளுக்கு இரையாயிடுவான். அதுக்கப்புறம்..... உலகத்திலே எது இருக்கும்?"

ஆனந்த குருவின் கேள்வியால் நீலகண்டனுக்குத் தன் சுயம் மட்டுமில்லை; உலகமே அழியப்போகிற பயமும் வந்து விட்டது! தலைதூக்கி நிமிர வேண்டிய எதிர்காலச் சந்ததிகள் நிலைகுலைந்துபோய் கோரப் பைஸாஸத்தின் மோக வெறிக்குப் பலியாகி அழிந்துபோகிற அவலம்.....

நீலகண்டனால் நினைத்துப் பார்க்கவே முடியாத கொடுமையாகத் தெரிந்தது! இப்படி ஓர் அனுதாபம் அவர் நெஞ்சில் உருவாகிப் பிறருக்காகக் கதற ஆரம்பித்த பிறகுதான்- ஆனந்த குரு சொன்னார்:

"சுமதியைக் கூட அவள்தான் யக்ஷிணிக் கூட்டத்துக்குள் மறைச்சு வச்சிருக்கா நீலகண்டா! முதல்லே நீ சீக்கிரம் இல்லத்துக்குப்போ! இந்தச் சூலத்தைக் கொண்டுபோய் வை. இல்லையானா இதுக்குள்ளே அவள் எல்லா வித்தைகளும் காட்டி உன்மகனை இரையாக்கற முயற்சியிலேயும் ஜெயிச்சிடுவா.....!ஓடு... ஓடு...."

குரு கண்களை மூடிக்கொண்டே கட்டளையிட்டதுமே அவர் கையிலிருந்த சூலத்தையும் வாங்கிக்கொண்டு ஆற்றில் நீந்தத் தொடங்கியிருந்தார் நீலகண்டன் திருமேனி!

நீந்தும் போதுதான்-அவர் நெஞ்சுக்குள்ளிருந்த கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ஆனந்த குரு பதில் சொன்னதே நினைவைத் தடவ ஆரம்பித்தது......

□□

கோகுலின் இடுப்பிலிருந்த தாயத்தை எடுத்தெறிந்த பிறகுதான் அவன் வாலிப வீரியத்தைத் தனக்கு இரையாக்கிக் கொள்ளமுடியும் என்கிற எத்தனத்தில் பத்ரா எதேதோ தோற்றமெல்லாம் காட்டினாள்.

கோகுலை மிரளச் செய்தாள்!

ஆனால் அவனோ மிரண்டு போய்த் தளர்ந்து பிரக்ஞையற்று கட்டிலில் மல்லாந்து விட்டான்!

இது பத்ராவுக்கு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்தது!

இனி அவனாக விழிக்கிற வரை காத்திருந்து, மறுபடியும் தனது நாடகத்தை நடத்தித்தான் ஜெயிக்கவேண்டும்! அவன் இடுப்பிலுள்ள தாயத்தையே வெறித்துப் பார்த்தாள் பத்ரா.

அதைத் தன்னால் தொடமுடியாது!

தொட்டால் தனது பைஸாஸ சக்தியின் மொத்தமும் பட்டழிந்துவிடும். ஏனென்றால் தாயத்துக்குள் உருப்போட்டு வைக்கப்பட்டிருக்கிற உபாசனா சக்தியின் வலிமை சன்மந்திரசித்தி. இந்தச் சித்தியின் வீரியம் இனியும் சிறிது நேரம்தான்!

அது.... தானாகவே குறைந்து, கரைகிறவரை, பொறுமையோடிருந்தால்- அதன் பிறகு அதுவெறும் தகட்டுச் சுருள்தான்! அப்போது அந்தத் தாயத்தை அவளே கூடத் தொட்டுக் கழற்றி விடலாம்! தூக்கியெறிந்து விடலாம்.

தனது வேட்கைக்காக இத்தனை நூற்றாண்டுகளாக் காத்துக் கொண்டிருந்தவளுக்கு..... இனியும் சிறிதுநேரம் என்பது ஒரு பெரிய விஷயமில்லை. எனவேதான் அந்த அறையின் ஒரு மூலையில் போய் அமர்ந்து அப்படியே மாயமாகிவிட்டாள் பத்ரா.

அறை மொத்தமும் இப்போது அமைதியில் போர்த்துக் கொண்டிருந்தது.

□□

நீலகண்டன் திருமேனி ஆனந்த குரு தந்த சூலத்தோடு பாலேக்கல் மனையை நோக்கி பழைய பாய்ச்சலும் நெஞ்சப் பதட்டமுமாக வரும்போது எங்கெல்லாமோ நாய்கள் ஊளையிடத் தொடங்கியிருந்தன.

இருட்டைப் போர்த்துக் கொண்டிருந்த பூமியும், வானமும் எங்கோ ஓர் அந்தகாரத்துக்குள் நீலகண்டனை விரட்டிக் கொண்டிருப்பதுபோல் ஓர் உணர்வு!

மனசுக்குள் எதுவும் நடக்காது என்கிற தைரியம் இருந்தாலும்- இதற்குள் மகனுக்கு ஏதாவது நடந்து விட்டிருக்குமோ என்கிற பயம்! அதனால் தான் அடிக்கொரு தடவை தனது உபாசனா மூர்த்திகளை நினைவு கூர்ந்து கொண்டே வந்தார் நீலகண்டன் நம்பூதிரி.

கோகுலுக்கு எதுவும் ஆகக்கூடாது!

இல்லம் போய்ச் சேருகிறவரை அவள், கோகுலைத் தொடாமலிருந்தால் அதுவே போதும்!

-இப்படி நினைத்தபடி அவர் ஒரு வயலுக்குள் குதித்து ஓடிய மறுகணம்.... ஒரு நாயின் உயரமுள்ள ஏதோ ஒரு பிராணி அவரை எதிரிட்டுப் பாய்ந்து வரப்பின் மீது ஓட ஆரம்பித்தது!

நம்பூதிரி நடுநடுங்கிப் போனார்.

'கடவுளே! என் மகனுக்கு மட்டுமில்லை. உலகத்தில் வேறு எந்த வாலிபனுக்கும் இதுமாதிரி ஒரு ஆபத்து வரக் கூடாது!' என்று அப்போதும் அவர் மனசு பிரார்த்தித்தது! தன்னைக் கடந்து போன பிராணியைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் ஓட ஆரம்பித்தார் அவர். அப்போது தூரத்தில் ஒரு சுழிக்காற்று ஊங்காரமிட்டபடி போவது தெரிந்தது! அதைப் பார்த்தபடியே நடந்தவருக்கு ஏதோ ஒரு இடறல்! சட்டென்று தடுமாறிப் போய் விட்டார் நீலகண்டன் திருமேனி.


இதற்குள்-

தன் பின்னாலிருந்து யாரோ தன்னைத் தாக்கியதைப் போலிருந்தது! இந்தத் தாக்குதலில் அவர் தரைமீது குப்புற விழவும்..... கையிலிருந்த சூலம் புதருக்குள் விழவும் சரியாக இருந்தது!

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்


பெயர்: பி.மனோகரன்
வயது: 18
முகவரி: இல.3, ஈஸ்டேல் நானு ஓயா.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, நாவல்.


பெயர்: பி.முஹமது நிஸ்மி
வயது: 19
முகவரி: 06, நாகபிட்டிய வீதி, மல்லவப்பிட்டிய, குரு நாகல்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.


பெயர்: பத்மசாந்தி
வயது: 18
முகவரி: பின்னோயா மேல் பிரிவு ரோசெல்ல.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, புத்தகம்.


பெயர்: எஸ்.நயீமா
முகவரி: இல 40/1, மஹாரும்புர நாவலப்பிட்டி.
பொழுதுபோக்கு: வழமையான பொழுது போக்குகள்.


பெயர்: ஏ.மோகன்
வயது: 22
முகவரி: ST-GALLEN STR-11 8716, SCHMERIKON SWITZERLAND.
பொழுதுபோக்கு: பாடல்கள் கேட்டல், ரீ.வி.பார்த்தல்.


பெயர்: ரி.அமீர்தீன்
வயது: 25
முகவரி: F.A.C. COMPANY, P.O.BOX-25809, CODE NO-13119, SAFAT- KUWAIT
பொ.போ: வழமையானவை.

பெயர்: வி.செந்தில்குமார்
வயது: 25
முகவரி: P.O.BOX-5323 RIYAIH-11422 SAUDI ARABIA
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: எம்.நில்சான்
வயது: 21
முகவரி: 40/7, கொஸ்பட்டதெனிய வீதி, ஹெந்தளை-வத்தளை.
பொ. போ: வானொலி, ரீ.வி. நண்பர்களுடன் அரட்டை.

பெயர்: சி.சுரேஷ்
வயது: 20
முகவரி: 107, மோதர வீதி, கொழும்பு-15.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா, பேனாநட்பு.

பெயர்: ஏ.ரஸீன்
வயது: 20
முகவரி: இல,23, நெசவு நிலைய வீதி-நிந்தவூர்-06.
பொ.போ: பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி.

பெயர்: எஸ்.யோகராஜா
வயது: 19
முகவரி: 164, கோல்புறாக் பசார், அக்கரப்பத்தனை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம்.பஸ்மிர்
வயது: 20
முகவரி: பள்ளி வீதி, கல்ஹின்னை, கண்டி.
பொ.போ: பத்திரிகை, சஞ்சிகை, வானொலி.

# தாய்

13

**என்றும் முதலிடம்**

**உலகில் மிகச் சிறந்த நாவல் எது?**
**ஒரே பதில்**
**தாய்! தாய்!! தாய்!!!**

**உண்மைகள் எப்போதும் வசீகரமானவை**
**அதுதான் 'தாய்' நாவல்**
**எப்போதும்**
**முதலிடத்தில் இருக்கிறது!**

**தவறவிடாமல் தொடர்ந்து வாசியுங்கள்!**

**ரகுநாதனின்**
**மொழி பெயர்ப்புநடை பிரமாதப்படுத்துகிறது.**
**-ஆர்.**

"நீங்கள் மாத்திரம் பயந்ததாகக் காட்டிக்கொண்டால், உடனே அவர்களுக்குச் சந்தேகம் தட்டிவிடும். இந்த வீட்டில் ஏதோ இருக்கப் போய்த்தான் நீங்கள் இப்படி நடுங்கிச் சாகிறீர்கள் என்று அவர்கள் நினைத்து விடுவார்கள். நாம் தப்பாக எதுவும் செய்யவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். நியாயம் நமது பக்கத்தில்தான் இருக்கிறது. அந்த நியாயத்துக்காக, நாம் நமது ஆயுள் முழுவதுமே பாடுபடுவோம். அது ஒன்றுதான் நம்மீதுள்ள குற்றம்! பிறகு நாம் எதற்காகப் பயப்படவேண்டும்?"

"நான் தைரியமாக இருப்பேன், பாஷா!" என்று அவள் உறுதி கூறினாள். ஆனால் உடனேயே அவள் மனங் குலைந்து பரிதாபமாகக் கூறினாள்: "அவர்கள் சீக்கிரம் வந்து காரியத்தை முடித்துக்கொண்டுபோனால் தேவலை!"

ஆனால் அவர்கள் அன்றிரவு வரவில்லை; காலையில் அந்தப் பிள்ளைகள் தன்னைக் கேலிசெய்ய முனைவதற்கு முன்னால், தானே தன்னைக் கேலி செய்து சமாளித்துக்கொள்ள முயன்றாள்.

"பார்த்தாயா? பயம் வருவதற்கு முன்னாலேயே நான் பயந்து செத்தேன்" என்று கூறிக்கொண்டாள்.

□□□

கலவரம் நிறைந்த அந்த இரவுக்குப் பிறகு, சுமார் ஒரு மாத காலம் கழித்து போலீஸார் வந்தேவிட்டார்கள். அன்று நிகலாய் பாவெலையும் அந்திரேயையும் கண்டு பேசுவதற்காக வந்திருந்தான். அவர்கள் மூவரும் தங்களது பத்திரிகை விஷயமாக விவாதித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது நடு இரவு. ஏற்கெனவே படுக்கச் சென்றுவிட்ட தாய் தூக்கக் கலக்கத்தில் சொக்கியவாறே அவர்களது அமைதியும் ஆர்வமும் நிறைந்த பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அப்போது அந்திரேய் ஜாக்கிரதையாக தனக்குப் பின்னால் கதவைத் தாளிட்டுவிட்டுச் சமையலறையைக் கடந்து சென்றான். அந்தச் சமயம் முற்றத்தில் ஏதோ தகரவாளி உருளும் சத்தம் கேட்டது அதைத் தொடர்ந்து கதவும் படாரென்று திறக்கப்பட்டது. அந்திரேய் சமையலறைக்குள் தாவி வந்து சேர்ந்தான்.

"அது பூட்ஸ் லாடச் சத்தம்தான்!" என்று இரகசியமாகச் சொன்னான்.

நடுங்கும் கைகளால் தன் ஆடையைச் சரிசெய்தபடி படுக்கையிலிருந்து துள்ளியெழுந்தாள் தாய். ஆனால் பாவெல் வாசல் நடைக்கு வந்து அமைதியாகச் சொன்னான்:

"நீங்கள் போய்ப் படுங்கள். உங்களுக்கு உடம்பு சரியில்லை!" வெளி வாசலருகில் ஏதோ சலசலப்புக் கேட்டது. பாவெல் வாசலுக்கு வந்து கதவைத் திறந்து, சத்தமிட்டான்:

"யார் அங்கே?"

திடீரென்று ஓர் உயரமான, சாம்பல் நிற உருவம் அவன்முன் தோன்றியது. அதைத் தொடர்ந்து வந்தது இன்னொரு உருவம்: இதற்குள் இரண்டு போலீஸ்காரர்கள் பாவெலைப் பிடித்துத் தள்ளிவிட்டு, அவனுக்கு இரு புறத்திலும் காவல் நிற்கத் தொடங்கிவிட்டார்கள்.

"எங்களை எதிர்பார்க்கவில்லை, இல்லையா? ஹா!" என்று ஓர் உரத்த குரல் கேலியாகக் கேட்டது.

அப்படிப் பேசியவன் ஓர் உயரமான, ஒல்லியான, நறுக்கு மீசை அதிகாரி. பெத்யாகின் என்ற உள்ளூர்ப் போலீஸ்காரன் தாயின் படுக்கையை நோக்கி விரைந்தான்.

"எஜமான் இவள்தான் அவனது தாய்!" என்று ஒரு கையால் தனது தொப்பியைத் தொட்டுக்கொண்டும் மறு கையால் பெலகேயாவைச் சுட்டிக்காட்டிக்கொண்டும் சொன்னான்; "அதோ, அவன்தான் அந்த ஆசாமி!" என்று கூறி பாவெலைச் சுட்டிக் காட்டினான்.

"பாவெல் விலாசவா?" என்று கண்களை ஏறச் சொருகிக்கொண்டே கேட்டான் அதிகாரி.

பாவெல் தலையை ஆட்டினான்.

"நான் உன் வீட்டைச்சோதனைபோட வந்திருக்கிறேன்" என்று கூறிக்கொண்டே, மீசையைத் திருகிவிட்டுக்கொண்டான் அதிகாரி.

"ஏ, கிழவி, எழுந்திரு! உள்ளே யார் இருக்கிறது?" அறைக் கதவினூடே ஒரு பார்வை பார்த்துவிட்டு அடுத்த அறைக்குள் நுழைந்தான் அவன்.

"உங்கள் பேர் எல்லாம் சொல்லுங்கள்!" என்ற குரல் அந்த அறையிலிருந்து கேட்டது.

வெளியே செல்லும் வாசற்புறத்தில் இரண்டு பேர் சாட்சிகளாக வந்து நின்றார்கள். ஒருவன் பழைய பாத்திரத் தொழிலாளியான திவெர்யகோவ்; ஒருவன் கொல்லுப்பட்டரைத் தொழிலாளியான ரீபின். ரீபின் கறுத்த தடித்த ஆசாமி; திவெர்யகோவின் வீட்டில் ஓர் அறையில் அவன் குடியிருந்தான்.

"வணக்கம், நீலவன்னா!" என்று கரகரத்த தடித்த குரலில் தாயைப் பார்த்துச் சொன்னான் அவன்.

அவள் தன் ஆடையணிகளை மாட்டிக் கொண்டு, தன்னைத் தைரியப்படுத்திக் கொள்வதற்காக ஏதேதோ முனக ஆரம்பித்தாள்:

"இந்த மாதிரி நான் கேள்விப்பட்டதுகூட இல்லை! இப்படி நடுராத்திரியிலே வந்து பிராணனை எடுக்கிறது! தூங்கிக்கொண்டிருக்கிற வேளையிலா, உள்ளே வருகிறது!"

அந்த அறையோ குறுகலான இடம் கொண்டது. அந்த அறையில் ஏனோ பூட்ஸ் பாலிஷின் நாற்றம் கப்பென்று அடித்தது. உள்ளூர்ப் போலீஸ்காரனும், வேறு இரு போலீஸ்காரர்களும் தடதட வென்றுதரையை மிதித்துக்கொண்டு அரங்கிலுள்ள புத்தகங்களையெல்லாம் இழுத்தெடுத்து, அதிகாரியின் முன்னால் கிடந்த மேஜைமீது குவித்தார்கள். வேறு இருவர் சுவர்களை முஷ்டியால் குத்திப் பார்த்தார்கள்; நாற்காலிகளுக்குஅடியில் புரட்டிப் பார்த்தார்கள்; அவர்களில் ஒருவன் அடுப்புக்கு மேலேகூட ஏறிப் பார்த்தான். ஹஹோலும் நிகலாயும் ஒரு மூலையில் ஒருவருக்கொருவர் நெருக்கமாக நின்றுகொண்டிருந்தார்கள். அம்மைத் தழும்பு விழுந்த நிகலாயின் முகம் திட்டுத் திட்டாய்ச் சிவந்தது; அவனது சிறிய சாம்பல் நிறக் கண்கள் அதிகாரியையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தன. ஹஹோல் தன் மீசையைத் திருகிவிட்டுக்கொண்டு நின்றான். தாய் அந்த அறைக்குள் வந்தபோது, அவன் சிறிது சிரித்தான்; அவளை உற்சாகப்படுத்தத் தலையை ஆட்டினான்.

பய பீதியிலிருந்து தப்பிப்பதற்காக, அவள் வழக்கம்போல் பக்க வாட்டில் அசைந்து நடக்கவில்லை. நெஞ்சை நிமிர்த்தி நேராக நடந்தாள். இந்தப் புதிய நடை அவளுக்கு ஒரு வேடிக்கையான கம்பீரபாவத்தை உண்டாக்கியது. அவள் தைரியமாகத் தடதடவென்று நடந்தாள்; எனினும் அவளது புருவங்கள் மட்டும் பயத்தால் நடுங்கத்தான் செய்தன.

அந்த அதிகாரி அந்தப் புத்தகங்களை மெலிந்த விரல்களுள்ள தனது வெள்ளை நிறக் கைகளால் பற்றி எடுத்தான்; விடுவிடென்று பக்கங்களைப் புரட்டினான்; மிகவும் அநாயாசமான லாகவத்தோடு அந்தப் புத்தகங்களை ஒருபுறம் எறிந்தான். சில புத்தகங்கள் சப்தமே செய்யாமல் பொத்தென்று விழுந்தன. யாருமே எதுவும் பேசவில்லை. அங்கு நிலவிய சப்தமெல்லாம் முசுமுசுவென்று மூச்சு வாங்கும் வேர்த்துப் போன போலீஸ்காரர்களின் சுவாசமும் அவர்களது பூட்ஸ் சப்தமும், இடையிடையே ஒலிக்கும், அந்த ஒரே கேள்வியும் தான்:

"இங்கே பார்த்து முடித்துவிட்டாயா?"

பாவெலுக்கு அடுத்தாற்போல் சுவரையொட்டிச் சாய்ந்து நின்றாள் தாய்: அவன் எப்படிக் கைகளைக் கட்டியிருந்தானோ, அது போலவே அவளும் கட்டியிருந்தாள்: அவளது பார்வை போலீஸ்காரர்கள் செல்லுமிடங்களுக்கெல்லாம் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தது: கால்களில் பலம் குன்றுவதாகத் தோன்றியது: கண்களில் நீர்த்திரை மல்கியது.

"புத்தகங்களை ஏன் தரையில் எறிய வேண்டும்?" என்று நிகலாயின் முரட்டுக் குரல் அமைதியைப் பிளந்துகொண்டு ஒலித்தது.

தாய் திடுக்கிட்டாள். திவெர்யகோவ் தன்னை யாரோ பிடித்துத் தள்ளிய பாவனையில் தலையை முன்னுக்கு இழுத்தான்; ரீபின் பற்களைக் கடித்துக் கொண்டு நிகலாயை வெறித்துப் பார்த்தான்.

அந்த அதிகாரி கண்களை நெறித்து, நிகலாயின் அசைவற்ற முகத்தை வெறித்துப் பார்த்தான். அவனது கைகள் புத்தகத்தின் பக்கங்களை இன்னும் வெகு துரிதமாகப் புரட்டத் தொடங்கின. சமயங்களில் அவன் தனது அகன்ற சாம்பல்நிறக் கண்களை மேலும் அகலத்திறந்து பார்த்தான். அந்தப் பார்வை அவன் ஏதோ தாங்க முடியாத வேதனையால் தவிப்பதுபோலவும், சக்தியற்ற கோபத்தில் வாய்விட்டு கத்தப்போவது போலவும் தோன்றியது.

"ஏ, போலீஸ்காரா! புத்தகங்களைப் பொறுக்கி எடு!" என்று மீண்டும் சத்தமிட்டான் நிகலாய்.

உடனே எல்லாப் போலீஸ்காரர்களும் அவன் பக்கமாக கண் திருப்பினர். பிறகு தங்கள் அதிகாரியைப் பார்த்தனர் அதிகாரி நிமிர்ந்து நிகலாயின் அகன்ற உருவத்தின் மீது மெதுவான பார்வை செலுத்தினான்.

"ம்! அவற்றைப் பொறுக்குங்கள்!" என்று மூக்கால் உறுமினான் அவன்.

போலீஸ்காரர்களில் ஒருவன் உலைந்து கிழிந்துகிடந்த புத்தகங்களைக் குனிந்து பொறுக்கினான்.

"நிகலாய் கொஞ்சம், வாயை மூடிக்கொண்டுதான் இருக்கட்டுமே!" என்று பாவெலைப் பார்த்து முனகினாள் தாய்.

அவனோ வெறுமனே தோளைமட்டும் குலுக்கிக்கொண்டான். ஹஹோல் தலையைக் குனிந்துகொண்டான்.

"இந்த பைபிளைப் படிப்பது யார்?"

"நான்தான்" என்றான் பாவெல்.

"இந்தப் புத்தகமெல்லாம் யாருடையவை?"

"என்னுடையவை" என்றான் பாவெல்.

"ரொம்ப சரி" என்ற கூறிக்கொண்டே நாற்காலியில் சாய்ந்தான் அதிகாரி. தனது மெல்லிய கைவிரல்களை முறித்துச் சொடுக்கு விட்டுக்கொண்டான்; கால்களை மேஜைக்கு அடியில் நீட்டினான். மீசையைத் தடவிவிட்டுவிட்டு நிகலாயிடம் கேட்டான்:

"நீதான் அந்திரேய் நஹோத்காவா?"

"ஆமாம்" என்று ஓர் அடி முன்னால் வந்து சொன்னான் நிகலாய். ஹஹோல் அவனது தோளைப் பிடித்து இழுத்துப் பின்னுக்குத் தள்ளினான்.

"அவன் சொல்வது தவறு. நான்தான் அந்திரேய்.."

அதிகாரி தன் கையை உயர்த்தி நிகலாயை மிரட்டினான்.

"ஜாக்கிரதையாயிரு!"

பிறகு அவன் தான் கொண்டுவந்திருந்த தஸ்தாவேஜுகளைப் புரட்டிப் பார்க்கத்தொடங்கினான்.

ஜன்னலுக்கு வெளியே நிலவொளி எந்தவிதக் கவலையுமற்றுக் காய்ந்துகொண்டிருந்தது. அந்த வீட்டின் முன்புறமாக யாரோ நடந்து செல்லும்போது, பனிக்கட்டிகள் நொறுங்கிக் கரகரப்பது கேட்டது.

"நஹோத்கா? நீ ஏற்கெனவே அரசியல் குற்றத்துக்கு ஆளான பேர்வழியில்லை" என்று கேட்டான் அதிகாரி.

"ஆமாம், ராஸ்தோவில் ஒருமுறை; சராத்தவில் ஒரு தடவை. ஆனால் அங்கே போலீஸ்காரர்கள் மரியாதையோடு நடந்துகொண்டார்கள்!"

அதிகாரி தனது வலது கண்ணை மூடி, அதைத் தேய்த்து விட்டுக்கொண்டான். பிறகு அவன் தனது சிறிய பற்களை வெளிக்காட்டிக்கொண்டே கேட்டான்:

"தொழிற்சாலையில் சட்டவிரோதமான பிரசுரங்களை விநியோகித்த போக்கிரிகள் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?"

ஹஹோல் லேசாகச் சிரித்தான்; உடம்பை ஆட்டிக்கொண்டான். அவன் ஏதோ பதில் சொல்ல முனையும்போது, மீண்டும் நிகலாய் குறுக்கிட்டுச் சத்தமிட்டான்:

"போக்கிரிகளையே நாங்கள் இப்போதுதான் பார்க்கிறோம்.

ஒரே சவ அமைதி; ஒரு கணத்துக்கு ஸ்தம்பித்த சர்வ அமைதி நிலைத்தது.

தாயின் நெற்றியிலிருந்த வடுப்பாகம் வெளிறிட்டு போயிற்று: அவளது வலது புருவம் மேல் நோக்கி நெரிந்து உயர்ந்தது. ரீபினின் கரிய தாடி விபரீதமாக நடுநடுங்கியது; அவன் அந்தத் தாடியைக் கைவிரல்களால் கோதிக் கொடுத்துக்கொண்டே, தலையைக் குனிந்தான்.

"இந்த நாயை வெளியே கொண்டு போ!" என்று கர்ஜித்தான் அதிகாரி.

இரு போலீஸ்காரர்கள் நிகலாயின் கைகளைப் பற்றி பிடித்து, அவனைப் பலவந்தமாகச் சமையல் கட்டுக்குள் தள்ளிக்கொண்டுபோனார்கள். அங்கு சென்றவுடன் அவன் தன் கால்களைத் தரையில் அழுத்தி ஊன்றி அசைய மறுத்தான்.

"நிறுத்துங்கள்!" என்று கத்தினான்; "நான் என் சட்டையைப் போட்டுக் கொள்ளவேண்டும்!"

போலீஸ் தலைவன் முற்றத்திலிருந்து வந்து சேர்ந்தான்.

"அங்கேயும் ஒன்றுமில்லை, எங்கும் பார்த்தாயிற்று."

"பார்த்துப் புண்ணியம்? கிடைக்காதது அதிசயமில்லை. இங்கே இருப்பவன் ரொம்பக் கைதேர்ந்த புள்ளி. பிறகு இயல்புதானே!" என்று சலித்துப் போய்ச் சொன்னான் அதிகாரி.

தாய் அவனது வலுவற்ற சில்லுக் குரலைக் கேட்டாள்; மஞ்சள் நிறமான முகத்தைப் பயத்தோடு பார்த்தாள். பொது மக்களைச் சற்றும் மதியாத கர்வியான, ஓர் இரக்கமற்ற எதிரி தன் முன் நிற்பதுபோல் அவள் மனத்தில் பட்டது இந்த மாதிரி நபர்களோடு அவளுக்கு என்றும் பரிச்சயம் ஏற்பட்டதில்லை. இப்படிச் சிலர் இருக்கிறார்கள் என்பதே அநேகமாய் மறந்துவிட்டது.

"இந்த மனிதன்தான் அந்தத் துண்டுப் பிரசுரங்களைக் கண்டு கோபப்பட்டவன் போலிருக்கிறது" என்று அவள் நினைத்துக்கொண்டாள்.

"அந்திரேய் அனிசுமோவிச் நஹோத்கா, கள்ளத்தனமாய் பிறந்தவரே, உம்மை நான் கைது செய்கிறேன்!"

"எதற்காக?" என்று அமைதியுடன் கேட்டான் ஹஹோல்.

"அது பின்னால் உமக்குத் தெரியும்" என்று நையாண்டியாய்ச் சொன்னான் அதிகாரி. "நீ படித்தவளா?" என்று பெலகேயாவைப் பார்த்துக் கேட்டான்.

"இல்லை, அவள் படிக்கவில்லை" என்றான் பாவெல். (தொடர்ந்து வரும்)



**மக்சீம் கார்க்கி**

# அவசரம்!

**பாலா சங்குப்பிள்ளை**



தமிழரசி தன் தந்தை பாண்டியனுடன் பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்தாள். வெகுநேரமாக அவர்கள் பஸ்சுக்காகக் காத்திருக்கிறார்கள். அது தான் அவர்களின் ஊருக்குப் போக வேண்டிய கடைசி பஸ். அதையும் விட்டால் கடைசியில் நடந்துதான் செல்ல வேண்டும்.

தமிழரசி சலிப்புடன் நின்றிருந்தாள். அப்போதுதான் தூரத்தில் அவனைக் கண்டாள். கடந்த வாரம் நடந்த சம்பவம் அவளுக்கு ஞாபகம் வந்தது. அன்றைய சம்பவத்துக்குப் பின் இன்று தான் அவனைக் காண்கிறாள். உடேன அவள் தன் தந்தையை பார்த்தாள்.

"அப்பா போனவாரம் ஒரு விசயம் சொன்னேனே ஞாபகம் இருக்கா?" மகள் ஏன் திடீரென்று அதைப் பற்றி இப்போது கேட்கிறாள் என்று அவருக்கு புரியவில்லை.

"என்னம்மா...திடீரென்று
ஏன் அதைக் கேட்கிறே?"

அப்போது அவர்கள் போக வேண்டிய பஸ் தூரத்தில வந்துக் கொண்டிருந்தது.

"சீக்கிரமா சொல்லும்மா...பஸ் வருது..."

"அதோ போறாரே அவர்தான்... அண்ணைக்கி..............

அவள் காட்டிய திசையல் பார்த்தார் பாண்டியன். அங்கே அவன் மெதுவாக போய்க் கொண்டிருந்தான்.

பாண்டியன் உடனே உஷாரானார்.

"நீ இந்த பஸ்ல வீட்டுக்குப் போம்மா.. நான் இதோ வாறேன்..."

தமிழரசி பஸ்ஸில் பத்றத்துடன் ஏறினாள். அதிகக் கூட்டமாகவும் வெகு நேரம் சென்றும் பஸ் வந்தமையினால் வந்தவுடனே புறப்படத் தொடங்கியது...

"அப்பா... நில்லுங்க.. விஷயத்தை முழுக்கக் கேட்காம போறீங்களே..."

ஆனால் அவர் காதில் அது விழவில்லை. பஸ் வேகமெடுத்து ஓடியது.

வீட்டுக்கு வந்த தமிழரசி குட்டிபோட்ட பூனையைப் போல அங்கும் இங்கும் நடக்கத் தொடங்கினாள். மனம் குழப்பத்தில் சிக்கித் தவித்தது. விஷயத்தை சரியாகச் சொல்லி முடிப்பதற்குள் அப்பா போய் விட்டாரே.."

வெகு நேரம் கழித்து பாண்டியன் வீட்டுக்கு வந்தார். அவள் பரபரப்புடன் அவரைக் கேட்டாள்.

"என்னப்பா..என்ன நடந்திச்சி...?

"அயோக்கியப் பயல். சும்மா விடுவேனா! தர்ம அடி வாங்கிக் கொடுத்துட்டேன். அண்ணைக்கி ராத்திரி தனியாவந்த உன் கிட்ட வம்புபண்ணின அவனுக்கு நல்ல பாடம்.."

தமிழரசி திடுக்கிட்டாள். நினைத்தபடியே விபரீதம் நடந்து விட்டது. அப்பா அவசரத்தில் ஒரு அப்பாவிக்கு தண்டனை வாங்கிக் கொடுத்து விட்டாரே..

"என்னப்பா நீங்க ...அவசரப்பட்டுட்டீங்களே"

"என்னம்மா சொல்றே..?

"அன்றைக்கு எனக்கு தொல்லை கொடுத்தது வேற ஒருத்தன்.

அந்த நேரத்தில இவர் தான் வந்து அவனை விரட்டியடித்ததுடன் வீடு வரைக்கும் துணையா வந்தாரு... நான் முழுவிஷயத்தையும் சொல்றதுக்கு முன்னால அவசரப்பட்டுட்டீங்களே.."

பாண்டியன் முகத்தில் அசடு வழிந்தது.

"என்னம்மா நீ சொல்றதை ஒழுங்கா சொல்லாம.. துணையா வீடுவரைக்கும் வந்தவரைப் பற்றி நீ ஏற்கனவே சொல்லலையே...சே! ஆத்திரத்துலயும் அவசரத்துலயும் ரொம்ப கேவலமாக நடந்துக் கிட்டேனே. இப்ப என்னம்மா செய்யிறது...?

தமிழரசி ஒன்றும் பேசவில்லை. அவள் கால்கள் தரையில் கோலமிட்டன.பாண்டியன் புரிந்துகொண்டார்.மனதுக்குள் சிரித்துக் கொண்டார். ●

**வாசகர் கவனிக்க**

**முரசிற்கு வரும் ஆக்கங்கள்-கதை, கவிதைப்போட்டி, பேனா நண்பர், குறுக்கெழுத்துப் போட்டி, புகார் பெட்டி, தேன் கிண்ணம் எல்லாவற்றையும் கீழ்வரும் த.பெ.இலக்கத்திற்கு மட்டுமே அனுப்பிவைக்கவும்.**

**தினமுரசு வாரமலர்**
த.பெ.இல. 1772
கொழும்பு.

Thinamurasu Varamalar
P.O.BOX. NO-1772
COLOMBO.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# 'கிளினிக்லேன் கிளிக் குஞ்சு'



**பானுரமீஸ்**

'முரசு' 86ல் பிரசுரமான 'ஒரு இரவின் அழகி...' என்ற கதைக்குப் பதிலாக அமைகிறது இக்கதை.

டிசம்பர் 31.
இரவு 8.15.
பேரிரைச்சலுடன் பெய்துகொண்டிருந்த
அந்த மழை கொஞ்சம் அமைதியாக...
நேற்றுப் பெய்த மழையில் நனைந்த
என் 'உம்மம்மா'வின் தடிமலுக்கு
மருந்து எடுக்க...தங்கச்சியோடு
நடந்துகொண்டிருந்தேன்.
'முக்காடாய்' வந்த 'சோளின்'
தொங்கல் மெல்லச் சரிய...தலையை
நன்றாக மறைத்தேன்.
கையிலிருக்கும் 'பிஸ்கட்'டை வீசும்வரை
என் பின்னால் வரும் என் 'ஜிம்மி'
மாதிரி...
90ரக ஹொண்டாவில் என்னைத்
துரத்தி வந்தவரே!
நான் யார்...இருக்குமிடம்... பெயர்...
தொழில்... அறியும் ஆவலில்-
தினமுரசில் 'காதல் விண்ணப்பக் கதை'
எழுதித் தூக்கத்தைத் தொலைத்துப்
பட்டினி கிடக்கும்... கன்றைக்கூட மரம்
என்ற கன்றாவி... சீ...கண்' காவிக்
கவிஞரே!
புஷ்'பை 'சிக்கல்'களை மெல்ல...
அவசரப்படுத்தி- என் பின்னால்....
மெதுவாக என்னைச் 'சைட்'டடித்து
வந்த-சமூகம் மதிக்கும் பண்பாளரே!
நினைவுகள்... உணர்வுகள்...
சிந்தனைகள்... இதயத்துடிப்புகள்...
பார்வைகள்... இயற்கையான
பாவனைகள்... எல்லாமே மௌனிக்க
டயரி'ட்' 'டயறு'ப் பயறுப் பயலுகளை
முயலுத் தனமாக்கி என்
அட்டகாசமான அழகில்...தன்னைத்
தொலைத்த அடி வாளியே!
('டி'அச்சுப்பிழை)
புல்லும் வலிக்கிற பாதம் நடக்க
பூவால்... என்ன... பொன்னாலேயே
பாலம் கட்டவும் தாங்கள் தயார்
என்பதை உங்கள் இருட்டுச் சிரிப்பில்
உணர்ந்துகொண்டேன்.
புதிய வீதியால் திரும்ப... உங்களை
நான் விரும்ப... இதழில் சிறு புன்னகை
அரும்ப.... இப்படி முணுமுணுத்தீர்கள்:
"மண்ணே! இந்தப் பாதங்களைத்
தொட்டுப் பார்க்கிறாயே!
நீ இந்த நூற்றாண்டின் மாபெரிய
புண்ணியசாலி!
உனக்கு மேல் உட்கார்ந்திருக்கும்
கற்களை, முட்களை விலக்கு! பூக்களால்
செய்த புது உருவம் ஒன்று நடந்து
வருகிறது..!" மூன்றாவது வீதியால்
மாறினேன். தங்கச்சி-உம்மம்மா... என்
அருகில் நடந்து வராவிட்டால்... அன்று
அந்த இரவில்-இந்த அழகு'க்கு என்ன
நடந்திருக்குமோ..? 90ரக
ஹொண்டாவில் நீங்கள் ஓடி வந்த
வேகம் அப்பப்பா...!
அந்தஸ்து... கௌரவம்... பெரிய
மனிதத்தனம்... எல்லாமே இந்த இரவு
அழகியின் முன் தோப்புக்கரணம்
போட....
"ஃபெஸ்ட்'கியரில்....'தேர்ட்'டாகி....
நீங்கள்! திரும்பிப் பார்த்துச் சிரித்துத்
தாங்களைத் தரமுயர்த்தினேன்!
நெற்றியின் தொங்கலில் நிறையச்
சுருக்கம் விழ-ஆச்சரியத்தால்
இருதயத்தின் கதவுகள் மூட-
மிரள...மிரள...விழித்த உங்கள்
விழிகளில் உங்களது விலாசத்தை
விளங்கிக்கொண்டேன்.
உங்கள் திறமை...உங்கள்
கவிதை...உங்கள் பேச்சு. உங்கள்
கெட்டித்தனம்...முன்பே
அறிந்தவள்தான் இந்த....மு(பெயரைச்
சொல்லமாட்டேன்..)
உங்கள் தோள்களில்தான் நான் தூங்க
வேண்டுமோ...அதுதான் கண்விழித்து
இந்த அலைச்சலோ..ஹலோ!
நான்காவது வீதிக்குள் நான் நடக்க...
குறுக்கு வழியால் ஹொண்டாவில்
வந்து குறுக்கிட்டவரே!
என் கொழுத்த மலர்முகம் பழுத்துச்
சிவக்க-அந்த நாணம் தந்த
ஞானம்...'ஒரு இரவின் அழகி'யாய்
உருமாற...நீங்கள் தினமுரசில் அழுத
கதை படித்ததும்...எனக்கு அளுத்கம
பஸ்ஸில் வந்த ஒரு சிவப்பு
தாவணியை யார் நீ எனக்கேட்டு
கிண்ணியா அமீரலி தினமுரசில் அழுத
கதை ஞாபகம் வருகிறது...
ஏய்யா இப்படி லோலோன்னு
அலையுறீங்க...?
தினமுரசுக்குக் கதை எழுத
நாங்கதானா கிடைச்சோம்..?
எழுபத்திரெண்டு மணித்தியாலங்கள்.
நாலாயிரத்து முந்நூறு
நிமிடங்கள்...என்னைத்
தேடியலைந்தவரே! கிளினிக்லேனில்
வாழும் இந்தக் கிளிக்குஞ்சு...யாரென்று
அறிய அவ்வளவு ஆவலா...?
தொழில்...படிப்பு...கவிதை எல்லாமே
என் நினைவுகளாக... என்னால்
சவர்க்காரமாகிப் போனவரே!
யோவ்...ஒங்க மனசு நிறைய
அழுக்குய்யா...அதுதான் இப்படி...
குட்டிகளை சைட்டடித்து...சைட்டடித்து...
கதை எழுதுறீங்க. இப்படி
பிரபல்யமான நீங்களல்லாம் இந்த
மாதிரிக் கதை எழுதினா சமூகம்
எப்படிய்யா உருப்படும்?
ஊன மனங்களின் ஊமை
'ரணங்களை'ப் பாடுகிற
நீங்களெல்லாம்... இந்த மாதிரி
'ஊத்தவாளி'க் கதை எழுதி ஒங்க ஊர்
மானத்தையும் போக்காதீங்க... தயவு
செய்து இனி கிளினிக்லேன்' பக்கம்
வராதீங்க....

இப்படிக்கு,
கிளினிக்லேன்
கிளிக்குஞ்சு.

# கல்யாணக் கனவுகள்!

திருமண மண்டபம் கலகலத்திருந்தது. மணப் பெண் கோலம் காண இருந்த என் மனதில் ஏராளமான மகிழ்ச்சி.

"அடி... ராதா உன் புருசன பார்த்தா சரியா கமல் மாதிரிடி....! நீ குடுத்து வச்சவடி!" தோழி சுதா கூறியபோது எனக்கு வெட்கமாய் இருந்தது. தோழிகளின் அரட்டை பேச்சை சமாளிப்பதே பெரிய தொல்லையாக இருந்தது.

முகூர்த்த நேரம் வந்ததும், மீண்டும் ஒரு தடவை என்னை கண்ணாடியில் போய் பார்க்கிறேன்..... அப்பா போட்ட பத்து பவுன் நகை என் கழுத்தில் மின்னிக் கொண்டிருந்தது. இத்தனை காலம் நான் பெருமூச்சு விட்டதே இந்த கோலத்தை காணத்தானே!

கடவுள் நல்லவர்! அதனால்தான் எனக்கு இந்த வயதில் சரி ஒரு நல்லவனாக அனுப்பியிருக்கிறார்.நல்லபடியாக கல்யாணம் நடந்தேறி முடிய உறவினர்கள் எல்லாம் நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

இரவு-

நான் தனித்து விடப்படுகிறேன்...!

தனியறை-

என்னுடல் சிலிர்க்கிறது. அவர் மடியில் படுத்து ஆயிரமாயிரம் கதைபேச வேண்டும்..! என்னுள்ளம் துடிக்கிறது. அவர் இதழ்களை கடிக்கிறார்.

"ராதா இப்படி உட்கார்...!" அமர்கிறேன். என்னருகில் மிகமிக அருகில் அவரும் அமர்கிறார்.

எதையெதையோ பேசவேண்டும்! கொஞ்சவேண்டும்... சிரிக்கவேண்டும்...என் மனம் மகிழ்ச்சியில் அலைமோதியது. என் கரங்களை அவர் கரங்களுள் சிறைப் படுத்தி...!

அவர் கண்கள் என்ன அப்படியிருக்கிறது? இனம் புரியாத இன்பம் என்னுள்...!

இந்த ஸ்பரிசம் எனக்கு பிடித்திருந்தது.

மெல்ல என் தலையை நிமிர்த்தி இதழோடு இதழ் பதிக்கிறார்! என் கூந்தலை இதமாக வருடிவிடுகிறார்! என் கண்கள் மயங்குகின்றன!

"ஓ..... என்... சே...லை!"

மீண்டும் அவர் என் இதழ்களை சிறைப்படுத்தியபோது,

"ம்...ம்...!" என் மூச்சே நின்றுவிடுவது போலிருந்தது.

என்னை இறுக அணைத்தபோது...நான் அப்படியே சாய்கிறேன்!

"டார்!"

"மக...மக... என்னம்மா விழுந்திட்டியா? பாரு மண்டையில காயமாணு?" அம்மாவின் குரல்கேட்டு திடுக்கிட்டு எழுந்து பார்க்கிறேன்! ஓ....நான் கட்டிலில் இருந்து விழுந்திருந்தேன். அப்படியென்றால் நான் கண்டது...? கடவுளே கனவா?

**ஹப்புத்தளையூர் எப்.லெனாட்குமார்**



உள்ளே போனதும் என் கால்கள் தடுமாறின கண்களைச் சுழலவிடுகிறேன். அவர்...!

ஓ அவர் என்னை கண்டுவிட்டார்.

"வா.... ராதா....!" என்ன இனிமையாகப் பேசுகிறார். பால் செம்பை அவரிடம் கொடுத்துவிட்டு .... பாதங்களை தொட்டு வணங்குகிறேன். என்னைத் தூக்கி நிறுத்துகிறார்.

அவர் கரங்கள் என்மேல் பட்டதும் மெல்ல எழுந்து கட்டிலில் படுக்கிறேன். "கடவுளே எங்க மாதிரி ஏழைகளுக்கு வாழ்வே இல்லையா? எனக்கினு ஒரு ஆம்பளைய கடவுள் படைக்கலயா?" நான் என்னையே நொந்துகொள்கிறேன்.

ஆம்!

முப்பத்தைந்தாவது வயதை தாண்டிய எனக்கு இனிமேலும் திருமணம் நடக்கும் என்ற எண்ணம் என் இதயத்தைவிட்டு மறைந்திருந்தது.

# பிழை திருத்தம்

**ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி**

"டிக்டேசனுக்கு' ரெடியா வரச் சொன்னேன் இல்லியா எல்லாரும் தயார் தான்னு நெனக்கிறேன்." அப்போதுதான் மலர்ந்த புதிய அழகுப் பூக்களாய் பிஞ்சு முகங்கள் அவள் முன். "ஆமாம், டீச்சர்" ஒரு சேர ஒலித்த குரல்கள் காலையின் இனிய கீதமாய் அவளது செவிகளுள் புகுந்தன. அவள் 'டிக்டேட்' பண்ண எழுதினார்கள்.

பாபுவைப் பார்த்தாள். வழமையான உற்சாக துள்ளல் முகத்தில் இல்லை. மௌனமாக கொப்பியை எடுத்தான். வழமைக்கு மாறாக சுபாவ மாற்றம். அவளுக்குப் புரிந்தது. கெட்டிக்கார மாணவன். திறமைசாலி. அவளது அபிமானத்தைப் பெற்றவன். ஐந்தாம் வகுப்பு 'ஸ்கொலர்ஷிப்' பரீட்சையில் கட்டாயம் பாஸ் பண்ணுவான் என கணக்கிட்டு வைத்திருந்தாள்.

கடந்த சில நாட்களாகவே பாபுவின் செயல் மாற்றங்கள் புரிந்தன அவளுக்கு. பொறுத்திருந்தாள். கொப்பிகளைத் திருத்தும் போது பாதிக்கு மேல் பிழை விட்டிருந்தான். பொறுமை இழந்தாள்.

"வா பாபு" ஸ்ராஃப் ரூமில் தனியே இருந்த சமயம் பார்த்து வரச்சொல்லி அனுப்பியிருந்தாள். மௌனமாக தலையைக் குனிந்திருந்தான். "இப்போவெல்லாம் படிப்புல கவனக் குறைவு. கவனிக்கலேன்னு நெனச்சியா? ஏன் ஒரு மாதிரியா இருக்கே? வீட்ல ஏதும் பிரச்சனையா? சுகமில்லையா? சொல்லு, ஏன் ஒழுங்கா படிக்கிறத விட்டுட்ட?" கனிவுடன் கேட்டாள்.

அவனைப் பொறுத்தவரை வீட்டுப் பிரச்சனைக்கு இடமில்லை. இனிய, சிறிய குடும்பம். அம்மா, அப்பா அவன் என மூன்றே பேர்தான். நடுத்தர குடும்பம். அவளுக்கு எல்லாம் தெரியும். பாபுவின் அம்மாகூட ஒரு டீச்சர் என்ற வகையில் அறிமுகமிருந்தது. வேறொரு பாடசாலையில் படிப்பிக்கிறாள்.

"சொல்லு பாபு. இன்னிக்கு 'டிக்டேசன்' செய்திருக்கியே, பாதிக்கு மேல பிழை. ஏன் இப்படி செய்தே?" இன்னும் மௌனங் காத்தான். அவளுக்குள் லேசான கோபம். அடக்கினாள். "ஒண்ணும் இல்ல டீச்சர்." நீண்ட மௌனம் கலைத்தான். "நான் வழமை மாதிரிதான் படிக்கிறேன்" மெல்லிய குரலில் கூறினான். அவள் எவ்வளவு கேட்டும் அவன் பிடிகொடுக்கவில்லை.

பிரயோசனமில்லை. விட்டுப் பிடிக்கணும். இவன் அம்மாவைக் கண்டு கேட்டுட்டா சரி. நினைத்தவள் அவனை அனுப்பி வைத்தாள். கேட்டும் விட்டாள். "எனக்கே தெரியலை டீச்சர்.' கொஞ்ச நாட்களா ரொம்பவும் மாறிட்டான். ஒழுங்கா சாப்பிடுறது கூட இல்லை. நானும் எவ்வளவோ கேட்டும் பார்த்துட்டேன். சரியா பேசக்கூட மாட்டேங்குறான்." பாபுவின் அம்மா திருப்பி முறையிட்டாள். எங்கேயோ பிழைக்கிறது. எங்கேயென்று புரியவில்லை.

மீண்டுமொரு திங்கள் காலை. பாடம் நடாத்திக்கொண்டிருந்தாள். தற்செயலாக பாபுவைக் கவனித்தாள். ஜன்னலால் வெளியே தெரியும் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். இவ்வளவு அசிரத்தை! "பாபு, எழும்பு" அவள் பாட சம்பந்தமான கேள்வியொன்றைக் கேட்க- விழித்தான்.

அவளுக்கு கோபம் வந்தது. "வெளியே போய் முழங்காலில் நில்லு."

பணித்தாள். தலையைக் குனிந்து வெளியேறினான்.

பாடத்தை முடித்து வெளியே வருகையில் கவனித்தாள். பாபு தரையில் அமர்ந்திருந்தான். மீண்டும் கோபம் வந்தது அவளுக்கு. முழங்காலில் நிற்கச் சொன்னால்



உட்கார்ந்திருக்கிறானே!

பிரம்பை எடுத்து அடித்துவிட்டாள். கண்ணீர் வந்தது அவனுக்கு. அடக்கிக் கொண்டு வகுப்பில் அமர்ந்தான். அதையும் கவனித்தாள்.

மனசுக்குள் பாரமாய் உணர்ந்தாள் அவள். அடித்திருக்கக்கூடாது. நினைத்தவள் மீண்டும் பாபுவை கூப்பிட்டு அனுப்பினாள்.

"ஏன் அப்படி செய்தே? சொல்லு! என்ன நினைத்துக்கொண்டு இப்படியெல்லாம் செய்றே? இதையெல்லாம் கேள்விப்பட்டா உன் அம்மா மனவருதப் படுவாங்கன்னு தெரியாதா?" கனிவாய்க் கேட்டாள்.

மௌனமாய்த்தான் இருந்தான். "நீ சொல்லாட்டா பரவாயில்லை. இனிமேல் உன் கிளாஸுக்கு வேறொரு டீச்சரப் போடச்சொல்றேன் பிரின்ஸிபல்கிட்ட. சரிதானே? என்ன விட நல்லா படிப்பிப்பாங்க சஹானா டீச்சர். அவங்கள போடச் சொல்லட்டுமா?" சஹானா கண்டிப்புக்கு பேர் போனவள். அவளது பெயர் மந்திரம்போல் மாணவர்களை ஆட்டி வைக்கும். தெரிந்தே சொன்னாள். நினைத்தது நடந்தது.

"வே.... வேண்டாம் டீச்சர்..." பதற்றமாய்ச் சொன்னான். "நான் ரொம்பவும் ஆசை டி.வி.பார்க்க. ஆனா எங்க வீட்டில டி.வி இல்ல. வாங்கித் தாங்கப்பான்னு சொன்னா முடியாதுன்னு சொல்லிட்டார் அப்பா. டி.வி இருந்தா நான் படிக்க மாட்டேனாம். அம்மா சொல்றாங்க. ஆனா கிளாஸ்ல இருக்கிற மத்தவங்க வீட்ல எல்லாம் டி.வி.இருக்கு. எல்லாரும் நல்லா படிக்கிறாங்க தானே. டி.வில போற ரெஸ்லிங் ஷோ, கார்ட்டூன் பத்தியெல்லாம் மத்தவங்க பேசி சிரிக்கிறதப் பார்க்கையில எனக்கு ரொ... ரொம்ப கவலையா இருக்கும். அதுதான் டி.வி இல்லாட்டி படிக்க மாட்டேன்னு முடிவு செய்துட்டேன்." திக்கித் திணறி தன் பக்க நியாயங்களை எடுத்துரைப்பதைக் கேட்டவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. 'படிப்பும் வேண்டும். விளையாட்டும் வேண்டும்'. நினைத்தாள்.

அதற்கேற்றாற்போல் அவனே தொடர்ந்தான். "சும்மா இருக்கிற நேரங்கள்ல என்கூட விளையாட ஒரு தம்பி பாப்பாக்கூட இல்லை. என்னை ஒழுங்கா விளையாடக்கூட விடமாட்டாங்க. எந்த நேரமும் படி படின்னு ஒரே படிக்க சொல்வாங்க. என்னால முடியலை டீச்சர்." மணிமணியாக கண்ணீர் வழிந்தோடியது அவன் கண்களில். என்ன சொல்வதென்று அவளுக்குப் புரியவில்லை.

உடனடியாக பாபுவின் அம்மா, அப்பாவைப் பார்த்து பேசவேண்டும். பறக்கச் சொல்லிக் கொடுப்பதாய் நினைத்துக்கொண்டு சிறகில் பாரமேற்றும் அவர்களை நினைக்க.... வார்த்தை வரவில்லை அவளுக்கு. "பிழை விடுகிறார்கள். திருத்த வேண்டும்" நினைத்துக் கொண்டாள்.

# ஏன் இந்தக் கண்ணீர்?

## இலக்கிய நயம்

தருவது ரசிகன்



"முடிவாகத்தான் சொல்லுகிறாயா?" வல்லபன் தன் தோளில் சாய்ந்திருந்த அமுதாவிடம் கேட்டான்.

அமுதா "ஆம், முடிவாகத்தான் சொல்லுகிறேன். என் தந்தை ஒரு போதும் நம் காதலுக்கு வாழ்த்துச் சொல்லப் போவதில்லை" என்றாள்.

தன் தோளில் சரிந்திருந்த அமுதாவின் கன்னத்தில் விரல்களால் கோடுகிழித்துக் கொண்டே வல்லபன் சில விநாடிகள் யோசித்தான்

"உனக்கு யார் வேண்டும் அமுதா. நானா? உன் தந்தையா?"

அமுதா தாமதிக்காமல் உடனே பதில் சொன்னாள்;

"உயிர்"

வல்லபனுக்கு உடனே புரியவில்லை. புருவங்களை உயர்த்தினான்

"என்ன சொல்லுகிறாய் அமுதா நீ?"

"உங்கள் கேள்விக்கு பதில் சொன்னேன்"

. "இந்த நேரத்திலும் போய் விளையாடுகிறாய் நீ"

அமுதா தன் முகம் நகர்த்தி வல்லபன் கன்னத்தில் தேன் இதழ்களால் முத்திரை பதித்தாள்.

"என் உயிர் நீங்கள்தானே!" என்று வல்லபன் சந்தேகத்தை தீர்த்துவைத்தாள்.

சந்தேகம் விலகியபோது வல்லபன் மனதில் நூறு புரவிகளின் வேகத்தில் உற்சாகம். ஆறு யானைகளின் பலத்தில் நம்பிக்கை.

அமுதாவின் நெற்றியில் தன் உதடுகளால் உற்சாகத்தை உணருவித்தான். நெற்றியில் இருந்து உதடுகள் ஊர்ந்து கீழே நகர அமுதா தன் இதழ் அரங்கில் வரவேற்புக் கொடுத்து அவன் உற்சாகத்தில் பங்கெடுத்தாள்.

பசித்தவன் முன்னால் அறுசுவை விருந்து படைக்கப்பட்டது போல, பாவையின் இதழ்கள் காளையின் உதடுகளுக்கு!

பஞ்சின் இதமாய் மனது உணரும் பாவையின் வயிற்றில் காளையின் கரம் சுதந்திரம் கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்த, அமுதா கூச்சத்தில் அசைந்து,

"கொஞ்சம் இடம் கொடுத்தால் போதுமே இந்த ஆண்களுக்கு." கரத்தை தடுத்தாள்.

இன்ப சுகத்தில் உள்ளம் மயங்க, வல்லபன் உதடுகளில் வாலிப வார்த்தைகள் உற்பத்தியாகின.

கெஞ்சித்தான் பெறவேண்டும் கொஞ்சுவதற்கான அனுமதியும் என்று பெண்கள் செய்யும் அடம் இருக்கிறதே அது இன்பக் கோட்டைக்குச் செல்லும் பாதையில் நீங்கள் போடும் தடம் ஆண்கள் குப்புற விழுந்தால் உங்களுக்கெல்லாம் குதூகலம்."

"கெஞ்ச வைத்தால் தானே பூவின் பெறுமதி வண்டுக்கு தெரியும்"

"பொருத்தமில்லாத உதாரணம்"

"எப்படி"?

"வண்டென்று சொன்னாய் நீ என்னை! மலர் பல தேடி தினம் ஓடும் குணமுண்டு வண்டுக்கு! ஒரு மலர் அதுவே பொன்மலர், உயிர்மலர் என்று சுற்றிவரும் என்னைப் போய் வண்டென்று உன் வாயால் சொல்லலாமோ?"

அமுதா குறும்பாகப் புன்னகைத்தாள். வல்லபன் கன்னத்தில் வலிக்காமல் கிள்ளிவிட்டாள்.

"தாங்கவில்லை உன்பேச்சால் என் மனம்."

"ஓஹோ ....அதற்கு என்ன செய்யவேண்டுமாம்?"

"குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதே தர்மம்!"

"குற்றம் செய்ய தூண்டுபவர்கள் தண்டிக்கப்படுவதும் இங்கே உள்ள வழக்கம்."

"தூண்டியதும் நீ தான். குற்றம் தோன்றியதும் உன்னிடம்தான். தயங்காதே! தர்மத்தை காப்பாற்று"

"உத்தரவு பிரபு! குறைந்தபட்ச தண்டனையாக இந்த ஏழைக்கு தாருங்கள்"

"மீண்டும் ஒரு குற்றம்"

"என்ன?"

"பொய் சொல்வதும் குற்றம்தானே?"

"உண்மை! ஆனால் நான் சொன்ன பொய் என்னவோ பிரபு?"

"ஏழையென்றாய் உன்னை! ஈரேழு உலகங்களும் ஒத்துக்கொள்ளாது நீ உரைத்த பொய்யை!"

"சற்று விளக்கிச் சொல்லுங்கள் பிரபு"

"விளக்குகிறேன் கேள்! என்ன வளம் இல்லை இந்த திருமேனியில்? திரண்டு கனிந்த பழங்கள், விருந்துக்கென்றே தயாராக வெட்டிவைக்கப்பட்டது போன்ற இரண்டு நல்ல இதழ் சுளைகள்,...."

"போதும்.. போதும்"

"அந்த வார்த்தையை சொல்ல வேண்டியது நீயல்ல நான்! வள்ளலுக்கு அழகு வழங்கிக் கொண்டிருப்பது. வாங்கும் என் போன்ற ஏழைகளுக்கு சிறப்பு போதும் என்று சொல்லும் வார்த்தையை உச்சரிப்பது. ஆனால் வழங்கப்படும்வரை வாங்கிக் கொண்டுமிருப்பது."

இருவரும் நகைத்தனர். இதுவரை பேசிய கேலிகள் இனித்தன.

இருவரும் கலந்தனர். இடையில் இருந்த வெட்கம் என்ற வேலியைக் கடந்தனர்.

வானில் நிலா நாகரீகம் கருதி மேகத்திரைக்குள் முகம் மறைத்தது.

அமுதாவின் அம்மா அழுதுகொண்டிருந்தாள்.

ஆறுதல் சொல்ல அருகில் இருந்த அம்மாவின் தோழி,

"பொருத்தமான துணையைத்தானே அமுதா தேடிக்கொண்டாள். அவன் வழி நாடிச்சென்றாள். வாழ்த்துவதை விடுத்து வாய்விட்டு அழுவது முறையோ?

அம்மா அழுவதை நிறுத்தி விடை சொன்னாள்,

"எம் சம்மதம் இன்றி திருமணம் முடித்தாள் என்பதை நினைத்து வந்தது அல்ல இந்தக் கவலை!"

அம்மாவின் தோழிக்கு வந்தது வியப்பு.

"அப்படியெனில் எதற்கிந்த கவலை? ஏன் இந்த அழுகை?"

கண்களை துடைத்தபடி அம்மா சொன்னாள்;

"அடியே, பாதம் வலிக்கும் என்று அவளை மார்பில் போட்டு வளர்த்தவளடி நான். அதனால் பஞ்சு போல மாறியதடி அவள் பாதம். பாத அழகுக்காக செம்பஞ்சுக் குழம்பை நோகாமல் நான் பூசும் போதும் வலிக்கிறது என்பாளே என்மகள். கைப்பிடித்தவன் துணையாக கல்லும் முள்ளும் உள்ள கானக வழியில் அவள் எப்படி நடப்பாளோ? அதுதானடி என்நெஞ்சிலே நெருப்பு!"

அம்மா சொல்ல தோழி உறைந்து போனாள்.

காதலனோடு செல்லும் மகளை நினைத்து கலங்கும் தாயின் நிலையைத்தான் கடைச்சங்கத்தமிழ் இலக்கியமான நாலடியார் என்ற நூலில் வரும் ஒரு பாடல் கண்முன்னே நிறுத்துகிறது.



அப்பாடல் இது தான்:

"அரக்காம்பல் நாறும் வாய் அம்மருங்கிற்கு
- அன்னோ
பால்கானம் ஆற்றின கொல்லோ- அரக்கார்ந்த
பஞ்சிகொண்டு ஊட்டினும் பையெனப் பையென
- என்று
அஞ்சிப் பின்வாங்கும் அடி"

## குறுக்கெழுத்துப் போட்டி இல-89

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | | 3 |
| | ■ | 4 | | | ■ | |
| 5 | | | | | ■ | |
| ■ | 6 | | ■ | ■ | 7 | |
| 8 | | ■ | 9 | | | ■ |
| | ■ | 10 | | | | |
| 11 | | | | ■ | | ■ |

### இடமிருந்து வலம்

1. எதிரி மீது கொள்வது இது.
2. தேநீரோடும் இதுசேர்க்கப்படுவதுண்டு.
4. உடலுக்கு இது ஆரோக்கியம்.
5. அமங்கலி என்பதற்கு இது எதிர்ச்சொல்.
6. பனி பெய்யும் மாதம் இது.
7. ஒட்டிக்கொள்ள உபயோகமாகும்.
9. நம்நாட்டுப் பிரதமருடைய மாளிகையின் பெயரில் இது ஒரு பாதி.
10. இந்தியாவில்,இங்கே மோதல்கள் நடப்பதுண்டு.
11. சிலர் தூங்கத்தொடங்கி விட்டால் இதுவும் தோன்றத் தொடங்கி விடும்.

### மேலிருந்து கீழ்

1. இது இல்லாத மனிதர்களே இல்லை.
2. இதனோடு சாம்பாரும் சேர்ந்தால் நாவுக்கும் திருப்தி, வயிற்றிற்கும் நிறைவு
3. நோயை விரட்ட இது தேவைப்படும்.
6. மழைக் காலத்தை இப்படியும் அழைக்கலாம்.
7. இதுவும் ஒரு வாகனம் தான்.
8. இது வெற்றிலையின் கூட்டாளி.
9. இதனால் செய்யும் கத்தி பயனற்றது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 25.02.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-89
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-87ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சோ | 2 தி | ட | ம் | ■ | 3 க | 4 தை |
| த | சை | ■ | ■ | 5 ஊ | தா | ரி |
| னை | ■ | 6 அ | 7 வ | தி | ■ | ய |
| ■ | 8 நே | ■ | 9 ர | ய | வி | ம் |
| 10 மூ | ர் | க் | க | ம் | ■ | ■ |
| க் | மை | ■ | ரி | ■ | 11 வா | வி |
| கு | ■ | 12 ஆ | சி | ர | ம | ம் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.87இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. ரி. நரேந்திரன் கொழும்பு-4
2. செல்வி. அஸ்மின் நிஷா, வத்தளை
3. முகமட் வபான், நீர்கொழும்பு
4. நளினா பீரிஸ், தலவில்
5. ஆ. தேசிகன், மன்னார்
6. க. வினு, பெரியபோரதீவு
7. எம்.ஐ. நபீலா, அனுராதபுரம்
8. எஸ். செல்வராணி, வவுனியா
9. சி. குமாரசாமி, அப்புத்தளை
10. திருமதிஎஸ்ரஸீனா, நாவலப்பிட்டி

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# இலக்குத் தவறாத வீச்சு

ஸ்போர்ட்ஸ்

## ஷேன் வோன் படைத்த சாதனை



அண்மையில் அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து கிரிக்கெட் அணி அவுஸ்திரேலிய அணியிடம் படுதோல்வி கண்டுள்ளது. அவுஸ்திரேலிய அணி மூன்று டெஸ்ட்போட்டிகளில் வெற்றிபெற்றுள்ள போதிலும் மெல்பர்னில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டி மிகவும் முக்கியம் வாய்ந்ததாக மாறியிருக்கிறது.

அந்தப் போட்டியில் தான் உலகின் 19வது டெஸ்ட் ஹட்ரிக் நிகழ்த்தப்பட்டது. தற்போதைய உலகின் நம்பர்1 பந்து வீச்சாளர் ஷேன் வோன் தான் அந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இனிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 88 ஓட்டங்கள் எடுத்திருந்த போது தனது சாதனை படைத்த ஓவரை வீச ஆரம்பித்தார் ஷேன் வோன். 6வது விக்கெட்டாக பிலிப் டிபிரைட்டஸ், ஷேன் வோனின் அருமையான பந்தில் எல்.பி.டபிள்யூ ஆகி அவுட்டானார். இதனை அடுத்து ஷேன் வோன் வீசியது ஒரு லெக் பிரேக். இது டேரன் கோவை ஏமாற்றி அவரது துடுப்பின் ஓரத்தை மட்டும் தொட்டு விட்டு விக்கெட் கீப்பர் இயன் ஹீலியின் கையில் சரணடைந்தது.

மைதானமெங்கும் ஒரே கரவொலி . அவுஸ்திரேலிய அணியினர் மத்தியில் ஆனந்தம். அடுத்த பந்தும் ஒரு விக்கெட்டை வீழ்த்தினால் ஹட்ரிக் ஆகிவிடுமே. அடுத்த விக்கெட்டையும் வீழ்த்திவிட வேண்டும்.என்ற ஆர்வம் ஷேன் வோனைத் துளைத்தெடுக்க, உடனே அவர் சக வீரர் டேமியன் பிளேமிங்கிடம் கலந்தாலோசித்தார். ஏற்கனவே பாகிஸ்தானுடனான டெஸ்ட்டில் ஹட்ரிக் நிகழ்த்தியவர் டேமியன் பிளேமிங். "புதிதாக எதுவும் முயற்சி செய்யாமல் வழக்கமாக வீசும் பந்து ஒன்றை வீசினால் மூன்றாவது விக்கெட்டை உறுதியாக வீழ்த்தலாம்" என்றார்.

அதே போல் வழமையாக வீசும் லெக் பிரேக்கை வீசினார் ஷேன் வோன். எதிர்பாராமல் தனனிச்சையாக அடித்தார் டேவன் மல்கம். ஷோட் லெக்கில் நின்ற டேவிட் பூன் அதை கட்ச் பிடித்தார். 115 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்த்தப்பட்ட முதல் ஹட்ரிக்கின் தொடர்ச்சியில் இது 19 வது ஹட்ரிக் ஆகும்.

ஹட்ரிக் என்பது தொடர்ந்து வீசப்படும மூன்று பந்துகளில் மூன்று விக்கெட்டுக்கள் வீழ்த்தப்படுதலாகும். இது ஒரு ஓவரில் என்று கணக்கில்லை. இரண்டு ஓவர்களிலும் பரவி வரலாம். ஏன் இரண்டு இனிங்ஸ்களில் கூடப் பரவி வரலாம். ஆனால் நிபந்தைன மட்டும் ஒன்றுதான். அதாவது அடுத்தடுத்து வீசப்படும் மூன்று பந்துகளில் மூன்று விக்கெட்டுக்கள். உதாரணமாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கொட்னி வோல்ஷூம், அவுஸ்ரேலிய அணியின் மேர்வ் ஹியூஸூம் இரண்டு இனிங்ஸில் தங்களது ஹட்ரிக்கை நிகழ்த்தியவர்கள்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 68

இவ்வாரம் (19.02.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:
போர்முனை ஏகிடும் புதல்வர்கள் வெற்றியில்
பார்புக ழோங்கியே வருகவென் றாங்கே
மார்முலைப் பாலினை யூட்டிய தாயவள்
சீர்பெரு மகனை வாழ்த்தி யனுப்புவாள்!
காந்தாரி மைந்தனை குந்தியோ, தாயோ
பாந்த முடனரு வாழ்தினை வழங்கியே
வாழ்த்திட முடியா வேதனைப் புயலினில்
வீழ்ந்து கலங்கிடும் விந்தையும் காணீர்!

-காட்சி தொடக்கம்-

மத்சய நாட்டில் பாண்டவருடன் கிருஷ்ணர்.

**யுதிஷ்:** வாசுதேவனே! நான் என்னதான் செய்யவேண்டும்?

**கிருஷ்:** முடிவுக்கு வரவேண்டியவன் நீ தானே!

**திரௌ:** அண்ணா! என்னுடைய தலைமுடி இவ்வாறு குலைந்து கிடப்பதற்கான காரணம் தான் என்ன என்பதையே அவர் மறந்துபோய் விட்டார்! நானே தீர்மானம் எடுக்கிறேன்!

திரௌபதி சங்கை எடுத்து ஊதுகிறாள்.

**யுதிஷ்:** கிருஷ்ணா! பாஞ்சாலிக்கு என் நிலையினை விளக்கிக் கூறமாட்டாயா? அவளுடைய அவிழ்ந்துவிட்ட கூந்தல் கொடிய சர்ப்பம்போல் என்மீது சீறிப்பாய்வதை நான் உணராமலில்லை! பாஞ்சாலி! நான் ஒரு கணவன் மட்டுமல்ல; ஓர் அரசன். என் அணியில் இணைந்து போராடுவதற்காகக் காத்துக்கொண்டிருக்கும் படைவீரர்கள் அனைவரையும் கூடுமானவரை பாதுகாப்பது என் கடமை. நான் கோழையல்ல! மன்னன் என்ற ஸ்தானம் வீரன் என்ற நிலையை விட மிகவும் பொறுப்பு வாய்ந்தது.

**திரௌ:** பிரபு! நானும் தங்கள் நாடான இந்திரப்பிரஸ்தத்தின் அரசி தானே! நான் இழந்த மானத்துக்கான பிராயச்சித்தமாக- என் தலைமுடியினை வார இரத்தம் தடவச் சபதமேற்றவள் என்பதை மறக்கவேண்டாம்!

**பீமன்:** பாஞ்சாலி நீ விரும்பியபடி இரத்தம் உனக்குக் கிடைத்தே தீரும்! கவலைப் படாதே!

**கிருஷ்:** பீமா! கோபத்தால் உன்னையே நீ சில சமயம் இழந்துவிடுகிறாய்! போர் வீரனைப்போன்று சிந்தித்துப் பேசு! கவுரவர்களிடம் எமது அணியைவிட அதிகம் வீரர்கள் உள்ளனர். அவர்களின் சேனைத் தளபதியாக பிதாமகர் பீஷ்மர் நியமிக்கப்பட்டுள்ளார்; இவர் விரும்பினால் மட்டுமே சாவினை அணைத்துக்கொள்ள முடியும்! உலக மகா வீரர் பரசுராமரின் சீடர்களான துரோணரும் கர்ணனும் அந்த அணியில் துரியோதனனுடன் இணைந்துகொண்டுள்ளனர்.

**சகாதேவன்:** ஏன் எமதணியில் மாபெரும் வீரர்களான துருபத மாமன்னர், விராட நாட்டரசர், திஷ்டத்துய்மன், சிகண்டி மற்றும் அண்ணன்மார் பீமன், அர்ச்சுனன் ஆகியோரும் உள்ளனரே! இவர்களுடைய வீரத்துக்கு இணை உண்டா?

**அர்ச்:** மதுசூதனா! தாங்களே எங்கள் பக்கம் இருக்கும்போது..!

**கிருஷ்:** நான் ஆயுதம் எதுவும் ஏந்தப் போவதில்லையே!

**அர்ச்:** தங்கள் வாழ்த்தும் வழிகாட்டலுமே எங்களுக்குப் போதுமே! அதுமட்டுமல்லாமல் பாஞ்சாலியின் அவிழ்ந்து கிடக்கும் கூந்தலே என்றும் எங்களுக்கு தூண்டுகோலாக விளங்கப் போகிறதே!

**கிருஷ்:** அதுமட்டுமல்ல பார்த்தா! உங்கள் அணியில் தர்மமும் நியாயமும் நிற்கின்றனவே! அதுசரி உங்கள் படைத் தளபதியாக யாரை நியமிக்கப் போகிறீர்கள்?

**யுதிஷ்:** பிதாமகர் மற்றும் எமது குரு ஆகியோருக்கு சரி நிகரானவர் மகாராஜா துருபதர். அவரை நியமித்தால் நலமென நினைக்கிறேன் மதுசூதனா!

**அர்ச்:** பிதாமகர், குருதேவர் மற்றும் மாமன்னர் துருபதர் ஆகியோர் முற்றிலும் பழைமை தழுவிய பண்புடையவர்கள் என்பதால் இக்காலத்துக்கு பொருத்தமானவரும் தீயினில் உதித்தவருமான திஷ்டத்துய்மனே சேனாதிபதியாகத் தகுதியுடையவர் என்பதே என் அபிப்பிராயம்!

**யுதிஷ்:** நாம் இதனையிட்டு விவாதிப்பதில் பலனில்லை. கிருஷ்ணன் போரிடவில்லையானாலும் அவனே எமது வழிகாட்டி; சேனைத்தலைவனை கிருஷ்ணனே தெரிவு செய்யட்டும்!

**கிருஷ்:** என்னைப் பொறுத்தவரை பார்த்தனுடைய தீர்மானமே சரியானது.

-காட்சி மாற்றம்-

திரௌபதி கண்ணாடியின் முன் நிற்க அவளுடைய பழைய சம்பவங்கள் பின்னோக்காகத் தோன்றுகின்றன.

**காவலன்:** அரசர் எதுவும் கூறவில்லை. தாங்களே சபைக்கு வரவேண்டும் என்று இளவரசர் கூறினார்.

**திரௌ:** காவலரே! பிதாமகர் பீஷ்மர், குலகுரு, மன்னவர் அல்லது வியாசர் மகாத்மா அழைத்தால் மட்டுமே நான் அந்தச் சபைக்கு வருவேன் என்பதை அவர்களிடம் எடுத்துக்கூறு!

துச்சாதனன் திரௌபதியின் கூந்தலைப் பற்றி இழுக்கும் காட்சி.

**திரௌ:** துச்சாதனா! மாதவிடாய் கண்டுள்ள நான் இன்னும் முழுகாதிருக்கிறேன். என்னை மானபங்கப்படுத்தாதே! கவுரவ குலத்து மருமகள் நான். அந்தக் குலத்துக்கு மாசு கற்பிக்காதே! இந்நிலையில் என்னை அந்தச் சபைக்கு இழுத்துச் செல்லாதே! அக்கா மகாராணியைக்கூட நான் இன்னும் போய்ப் பார்க்கவில்லை. உன் மூத்த சகோதரர்களின் மனைவியான என்னை அவமானப்படுத்தி தீராத பழியைத் தேடிக்கொள்ளாதே! பாண்டவர்கள் இதற்காக உன்னை மன்னிக்கவே மாட்டார்கள்.

துச்சாதனா! இன்று முதல் இந்த அவமானத்துக்காக நான் உன்னை தொடர்ந்து நிந்தித்துக்கொண்டிருப்பேன்! பாண்டவர்கள் ஒருவேளை உன்னை மன்னித்தாலும் நான் உன்னை என்றும் மன்னிக்கப் போவதில்லை.

**துச்சா:** வாடி...வா...நீயும் இங்கு அந்தப் புரத்திலுள்ள பணிப்பெண்களில் ஒருத்திதானே!

**துரி:** அன்று என்ன சொன்னாய்? 'ஒரு குருடனின் மகனுடைய கண்களும் குருடாகிவிட்டனவோ' என்றா சொன்னாய்? துச்சாதனா! அவளை இழுத்து வந்து என் தொடைமீது அமர்த்தடா...!

**திரௌ:** பிதாமகரே! இதோ உங்கள் குலத்தின் மருமகள்...இத்தகைய அவமானத்தைச் சுமக்கிறேன். உங்கள் பார்வையை வேறுபுறம் திருப்புவதனால் பிரச்சனை தீர்ந்துவிடப் போவதில்லை. கவுரவ குல சிரேஷ்டரான தங்களை வணங்குகிறேன். எத்தகைய வாழ்த்தினைத் தரப்போகிறீர்கள்? கவுரவ அரியாசனத்தை மட்டும்தான் காக்க விரதம் பூண்டுள்ளீர்களா? அக்குல மானம் குலைவதைப்பற்றித் தங்களுக்குக் கவலையே இல்லையா?

**கர்ண:** ஐந்து ஆடவர்களுடன் வாழும் ஒரு பெண் கர்ப்புடையவளாக மாட்டாள். அவள் விலைமாதினை ஒத்தவளே! அப்பேற்பட்டவளுக்கு மானம் எங்கே இருக்கிறது. அவள் நிர்வாணமாகவும் இருக்கலாமே!

**பாண்டவர்கள்:** கர்ணா.....!

**துரி:** அமருங்கள்! என் நண்பன் கூறியதில் தவறில்லையே! இந்தப் பணிப்பெண்ணின் ஆடைகளைக் களைந்தெறியடா தம்பி துச்சாதனா..!

துச்சாதனன் துகிலுரிய கவுரவர்கள் சிரிக்கின்றனர்.

-பின்னோக்கு காட்சி முடிகிறது-

திரௌபதியிடம் திஷ்டத்துய்மன் வருகிறான்.

**திரௌ:** கடந்த பதின்மூன்று வருடங்களாக இந்த தலை முடிகள் விஷப்பாம்புகள் போன்று என்னை வதைக்கின்றன அண்ணா! இவற்றைப் பிடித்த கேடு நீங்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்று அவற்றை சமாதானப்படுத்திக் கொண்டிருக்கிறேன்!

**திஷ்ட:** அன்று ஏற்பட்ட துன்ப விஷத்தின் பங்கினை நாம் அனைவரும் பங்கு கொள்ள வேண்டியவர்களே! உன் தலையினை வாரிவிட துச்சாதனனின் குருதி உனக்கு நிச்சயம் கிடைக்கும்.

**திரௌ:** அவ்வாறானால், பாண்டவப் படையின் தளபதியான உன்னை மரியாதையுடன் வணங்கவேண்டியது என் கடமை அண்ணா!

<u>பின்னணிப் பாடல்:</u>

தீய நச்சாம் கவுரவரின்
தீச் செயலால் தீயான
தூயவளாம் திரௌபதியாள்
தீயவனின் குருதியிலே
தோய்த் தெடுத்துத் தன் கூந்தல்
தூய்மை பெறத் துணிந்ததனால்
தாய்மைதனைப் பழிக்கும்
தரங் கெட்டோர் தானழிவர்!

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை-காந்தாரி வருகிறார்.

**காந்:** பிரபு! எப்படியாவது போரினைத் தவிர்க்க வழி பாருங்கள்!

**திருத:** நம் மகன் நம் சொல்லைக் கேட்பானா? என் தம்பி பாண்டுவின் புத்திரர்களை போருக்குப் போகவேண்டாமென்று என்னால் தடுக்கத்தான் முடியுமா?

**காந்:** பாண்டவர்கள் போரை விரும்பவில்லை; இந்திரப் பிரஸ்தத்தைத்தானும் அவர்கள் விரும்பவில்லை. ஐந்து ஊர்களையாவது தருமாறு வேண்டினார்களே! இதனால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கு நாளை உலகம் தங்களைத்தானே தூற்றும்?

**திருத:** நாளையைப் பற்றி கவலை எனக்கில்லை. குந்தி ஏன் இன்னும் இங்கு நிற்கிறாள்? அவள் இங்கிருப்பதால் பாண்டவர்களுக்கு நன்மை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறாளா? எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு என்ன பிராயச்சித்தம்? யுத்தத்தை நான் விரும்பவில்லைத்தான்! இருப்பினும் யுத்தம்தான் ஒரே வழியானால் சத்திரியனான நான் அதனை வரவேற்பதைத் தவிர வேறு வழியில்லையே!

**காந்:** பிரபு! போர் இன்னும் தொடங்கவில்லை. சஞ்சயனுடன் இரதத்திலேறி தேவகி நந்தன் கிருஷ்ணனிடம் போங்கள்! குருச்சேத்திரப் போர்முனை நோக்கிப் படைகள் முன்னேறுவதைத் தடுக்கும் வல்லமை படைத்த அவனிடம் போரை நிறுத்தும்படி கூறுங்கள்.

**திருத:** இல்லை காந்தாரி! வாசுதேவனுடைய யாதவப் படைகள் நமது படைகளுடன் சேர்ந்துவிட்டன. ஆனால் அவனோ பாண்டவர்களுடன் இணைந்துவிட்டான். கலங்காதே காந்தாரி. நூறு வீரர்களைப் பெற்ற நீ கலங்குகிறாய்! ஐந்து புதல்வர்களைப் பெற்ற குந்தியோ கலக்கமின்றி தைரியமாக இருக்கிறாள்!



**காந்:** பிரபு! ஒரே மரத்தின் இரு கிளைகள் ஒன்றுடன் ஒன்று மோதி அழிவதுபோல் நமது புதல்வர்களே சிதைவுறப் போகிறார்கள். என்னால் இப்பெரும் துயரைத் தாங்க முடியாது பிரபு!

-காட்சி மாற்றம்-

பீஷ்மரிடம் வியாச மாமுனிவர் வருகிறார்.

**வியாச:** விதியினை மாற்ற எவராலும் முடியாது! கங்கையின் மைந்தரே! இனிமேல் நடைபெறவிருக்கும் சம்பவங்களை இன்றையச் சூழ்நிலைகளும் சம்பவங்களும் தெளிவாகக் காட்டுகின்றன.

**பீஷ்ம:** என்னால் என்ன செய்ய முடியும் மாமுனிவரே! என் அன்னையோ என்னைப் பார்ப்பதேயில்லை. அஸ்தினாபுரம்தான் இன்று எனது தாயார். என் தாயகம் சீரழிவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது!

**வியாச:** நாட்டின் சீரழிவைப் பார்த்தேயாக வேண்டியது காலத்தின் கட்டாயம். ஆகவே அழிவைக் கண்டு அழுவதற்கு ஆயத்தமாகிக்கொள்ளுங்கள்.

**பீஷ்ம:** மாமுனிவரே! இதுதானா தங்களின் அறிவுரை?

**வியாச:** கங்கையின் மைந்தரே! தாங்கள் அறியாததொன்றல்லவே! இம்மாதம் 13ம் நாள் முழுக் கிரகணம் ஏற்படப் போகிறது. வரப்போகும் பேரழிவின் முன்னெச்சரிக்கையாகவே அது தோன்றப் போகிறது!

**பீஷ்ம:** அதனை நானும் அறிவேன்! தோல்வியைத் தழுவப் போகும் படையின் தளபதிப் பதவியினை நானே ஏற்றுள்ளேன். நான்-கங்கையின் மைந்தன்-பீஷ்மர் எந்த வகையிலும் உதவியற்றவன் என்பதனை தாங்கள் அறிந்திருக்கிறீர்கள்!

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரருடன் சஞ்சயனும் இருக்கும் போது அங்கு வியாசர் வருகிறார்.

**திருத:** வணக்கம் மாமுனிவரே!

**வியாச:** நீண்ட ஆயுளுடன் வாழப்போகும் நீ வேறு எந்த வாழ்த்தினை வேண்டுகிறாய்? உன்னைச் சுற்றி உன்னவர்கள் அனைவரும் உயிரற்று வீழ்ந்து கிடக்கும்போது நீ நீண்ட நாட்கள் உயிருடன் வாழ்ந்து என்ன செய்யப் போகிறாய்? மன்னா! துன்பமோ இன்பமோ என் போன்ற முனிவர்களை எதுவும் செய்யப் போவதில்லை. ஆகவே உண்மையைக் கூற நாங்கள் தயங்குவதுமில்லை! உனது நன்மை கருதி அறிவுரை கூறுகிறேன்! உன் வாயிலை போரின் பேரபாயம் அணுகிவிட்டது. அதனை உன் இரத்த நாளங்களுக்குள் புகுவதற்கு அனுமதித்து விடாதே!

**திருத:** நானோ போரை விரும்பவில்லை. ஆனால் என் மக்களைக் கட்டுப்படுத்த என்னால் முடியவில்லையே!

**வியாச:** அவ்வாறானால் இந்த யுத்தத்தின் விளைவு எவ்வாறிருக்கும் என்பதனை முன்கூட்டியே அறிய உனக்கு அதி உயர்ந்த சக்தியினைத் தருகிறேன்.

**திருத:** வேண்டாம். குழந்தைகளாகவும் இளஞர்களாகவும் இன்று வீரர்களாகி விட்டவர்களாகவும் உள்ள எவரையும் நான் பார்க்க முடியாதவன். செத்து வீழ்ந்து கிடக்கும் சடலங்கள் யாருடையவை என்பதனையும் என்னால் கண்டு பிடிக்க இயலாதே! ஆகவே, அத்தகைய சக்தியினை சஞ்சயனுக்கு அருளுங்கள். அவன் பார்த்து விபரத்தை எனக்குக் கூறட்டும்.

**வியாச:** ஆகட்டும்! ....சஞ்சயா...!

வியாச மாமுனிவர் சஞ்சயனுக்கு எதிர்கால நிகழ்வுகளை ஊடுருவிப் பார்க்கும் சக்தியினை அருளுகிறார்.

**வியாச:** இப்பொழுது சஞ்சயன் முக்காலத்தையும் காணும் வல்லமை பெறுகிறான்.

**திருத:** சஞ்சயா! நடைபெறவிருக்கும் போரின் விளைவுகளைப் பற்றிக் கூறுவாயா?

**வியாச:** மன்னா! நிழல் தருமரங்கள் விறகாகவும் பயன்படுவதுண்டு. எந்தப் பயனுமற்ற மரங்கள் பயன்தரும் மரங்களுக்கு இடம் தரும் வகையில் அழிக்கப்பட வேண்டியவையே! எத்தகைய மரங்கள் சாய்க்கப்படும் என்பதை சஞ்சயன் கூறுவான்.

வியாசர் வெளியேறுகிறார்.

சஞ்சயன், துரியோதனன் எங்கே இருக்கிறான் என்பதை கூறுகிறான்.

**சஞ்ச:** இளவரசர் தனது அரண்மனையில் கர்ணன், சகுனி, துச்சாதனன் மற்றும் சகுனியின் மகன் உல்லூகனுடன் இருப்பதைக் காண்கிறேன்.

□□□

துரியோதனன் அரண்மனை.

**துரி:** யுதிஷ்டிரனிடம் நாம் ஒரு தூதனை அனுப்ப வேண்டும். மாயாவி கிருஷ்ணனைப்போல் எங்களாலும் மாயா ஜாலங்கள் புரிய முடியும் என்பதனை எடுத்துரைக்க வேண்டும்.

**சகுனி:** ஆமாம்! அவர்கள் முதல் தூதுவனை அனுப்பியமையினால் கடைசித் தூதுவனை நாம் அனுப்பவேண்டும்.

**கர்ண:** போர்க்களத்தில்தான் எமது வீரத்தின் மூலம் பதிலளிக்கப் போகிறோமே! இன்னும் தூது எதற்கு?

**சகுனி:** கர்ணா! உனக்கு போதுமான முன் யோசனை கிடையாது.

**துரி:** கர்ணனையே நமது தூதனாக அனுப்பினால் என்ன மாமா!

**சகுனி:** அவ்வாறு எதையும் செய்துவிடாதே மருமகனே! தூது செல்லும் இடத்திலேயே கர்ணன் சண்டையைத் தொடங்கி விடுவான். வெற்றி பெறாமல் திரும்ப மாட்டான். என் மகன் உல்லூகனை தூதனுப்புவோம். அவர்களைப் பார்க்கும் ஒரு சந்தர்ப்பமாவது அவனுக்குக் கிட்டட்டும்.

-காட்சி மாற்றம்-

பாண்டவர்களுடன் கிருஷ்ணன் இருக்கும்போது உல்லூகன் தூது வருகிறான்.

**அர்ச்:** துரியோதனன் எதற்காக தூதனை அனுப்பவேண்டும்?

**கிருஷ்:** துரியோதனனோ அறிவில்லாதவன். தூதுவன் மூலம் என்ன செய்தி அனுப்பியிருக்கிறானோ தெரியாது.

உல்லூகன் வருகிறான்.

**யுதிஷ்:** காந்தார நாட்டு மன்னர் சகுனியின் மகன் உல்லூகரே! வருக! தம்பி துரியோதனனிடமிருந்து நீர் கொண்டு வந்துள்ள செய்தியைக் கூறுக...!

**உல்லூ:** மாமன்னரே! நான் கொண்டு வந்துள்ள செய்தியினை, அவர்கள் எவ்வாறு கூறினார்களோ அப்படியே கூறுகிறேன். என்னைத் தயவு செய்து தவறாகப் புரிந்துகொள்ளாமல் ஒரு தூதுவனுக்குரிய பாதுகாப்பினை அளிக்கவேண்டும்!

**யுதிஷ்:** உல்லூகரே! எதுவித அச்சமுமின்றி எல்லாவற்றையும் கூறும்.

**உல்லூ:** மகாராஜா திருதராட்டிரரின் மகன் இளவரசர் துரியோதனனின் தூதனாக வந்துள்ளேன்! நீர் சதுரங்க ஆட்டத்தில் உமது அரசு, சகோதரர்கள், மனைவி அனைத்தையும் தோற்றுவிட்டீர்! உமது மனைவி எமது அவையில் துகிலுரியப் படும்போது உமது தம்பிமாருடன் நீரும் கோழையாக இருந்துவிட்டீர். பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் ஏற்றீர். பதின்மூன்றாம் ஆண்டில் விராட நாட்டில் ஒளிந்துகொண்டீர்கள். உங்கள் அனைவரையும் கண்டுபிடித்து விட்டமையினால் நீங்கள் அனைவரும் மறுபடியும் வனவாசம் போயிருக்கவேண்டும். ஐந்து ஊர்களை தருமாறு தூதுவன் மூலம் கோரிக்கை விடுத்துள்ளீர்கள். வீரசத்திரியராக இருந்தால்- உமக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தால்- போர் புரிந்த அப்போதே உமது நாட்டை மீட்க முயற்சித்திருப்பீர். நீர் ஒரு கோழை என்பது நிரூபணமாகிவிட்டது. கோழையிடம் ஒரு நாட்டை ஒப்படைக்க முடியுமா? ஆகவே மீண்டும் வனவாசமும் அஞ்ஞாத வாசமும் சென்று பதின்மூன்று ஆண்டுகள் கழித்து வந்து இரந்து கேட்டால் உங்களுக்கு ஐந்து கிராமங்கள் தருவது பற்றி யோசிக்கலாம். கிருஷ்ணனுடைய மாயா ஜாலங்களுக்கு நாங்கள் மயங்கமாட்டோம். ஆண்மையற்ற கோழைகளாகிய நீங்கள் கவுரவ வீரர்களுக்குச் சவால்விடத் துணிந்துவிட்டீர்களா?

**கிருஷ்:** சூது மதிபடைத்த சகுனியின் மகனே! அந்த காந்தாரி மைந்தனிடம் போய்க்கூறு: 'துரியோதனா! நீ சத்திரியனாக வாழத் தகுதியற்றவன். சத்திரியனாக மரணமடைவதற்காவது முயற்சி செய்! ஏனென்றால் சத்திரியனாக இறப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல...!

-காட்சி மாற்றம்-

சஞ்சயன், வியாச முனிவர் அருளிய முக்காலமும் உணரும் சக்தியினால் கண்டு இவற்றை திருதராட்டினருக்குக் கூறினான்.

**திருத:** போதும்! இதற்குமேல் எதனையும் நான் கேட்க விரும்பவில்லை சஞ்சயா! விதுரரும் என்னிடம் வருவதை நிறுத்தி விட்டான். இனிமேல் எனக்கு நீ மட்டும் தான் துணை!

**சஞ்ச:** போரினை இனிமேல் எவரும் தடுத்திட முடியாது மகாராஜா! பெருகப்போகும் இரத்த வெள்ளத்துக்கு அணைபோடவும் முடியாது! தாங்கள் எல்லாவற்றையும் துறந்து கானகம் செல்வதே ஒரே வழி!

-காட்சி மாற்றம்-

காந்தாரியைக் காண துரியோதனன் வருகிறான்.

**துரி:** வணக்கம் அம்மா! இன்று குருச் சேத்திரம் செல்கிறேன்! வெற்றிபெற வாழ்த்தி அனுப்புங்கள் தாயே!

**காந்தா:** மகனே! என்னுடைய வாழ்த்துக்களால் மட்டும் நீ வெற்றியீட்ட முடியாதடா! தர்மம் பாண்டவர் பக்கமே உள்ளதனால் அந்தப் பரந்தாமன் கிருஷ்ணனும் அப்பக்கம் சார்ந்து நிற்கிறான். முடிவில் தர்மமே ஜெயிக்கும். வாசுதேவ கிருஷ்ணனுக்கு எதிராக நீ தொடுக்கும் போர் தர்மத்துக்கே எதிரானது- உனக்கே நீ தீங்கினைத் தேடிக்கொள்கிறாய்!

**துரி:** எது எவ்வாறானாலும் நான் போர் முனைக்குக் கிளம்பும் இவ்வேளையில் என்னை வாழ்த்த மாட்டீர்களா?

**காந்:** இல்லை! அத்தகைய வாழ்த்தினை நான் தரப்போவதில்லை!

**துரி:** அவ்வாறானால் தங்கள் தாள் பணியாமலே நான் குருச்சேத்திரம் செல்கிறேன்!

**காந்:** ஏ மகாதேவா... ஏ மகாதேவா..!

<u>பின்னணிப்பாடல்:</u>

தாய் சொற் கேளாத் தனய ரென்றும்
தரணியில் தரமுடன் வாழ்ந்தறியார்!
தூய்மை நெறி முறை தழைப்பதற்குத்
தாய்மை என்றும் துணை நிற்கும்!
வாய்மை குன்றா மாதரசி யவள்
வனிதையர் திலகமாம் காந்தாரி
சேய் சேர் பாதை சிதைவதனால்
சிந்தை கலங்கிச் செயலிழந்தாள்!

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
436331
வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

Kala
JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11
433686



## பூரிப்பான நேசிப்பு

முரசின் மீதான வாசகர்கள் நேசிப்புக்கு வயது வேறுபாடு கிடையாது.

வாசிப்போடு நிற்கும் வாசகர்கள் அல்ல நேசித்து பாதுகாத்து வரும் வாசகர்களே முரசுக்கு அதிகம்.

படத்தில் இருப்பவர் முரசின் பிரிய வாசகர். வயதில் சிறிய ஆனால் வாசிப்பில் பெரிய ஆர்வம் உள்ளவர். ஆர்வத்தோடு அவர் அனுப்பி வைத்த படத்தை பிரசுரித்துள்ளோம்.

## தருவது வியோடெ

வடக்கில் புலிகளது சிவில் நிர்வாகம் சுறுசுறுப்பாக இயங்குகிறது.

ஆனால், புலிகளது 'தமிழீழ நீதிமன்றம்' மட்டும் உறுத்தலாகத் தெரிகிறது.

வயதில் குறைந்தவர்கள். ஆனால் புலிகள் இயக்க உறுப்பினர்கள், அவர்கள்தான் நீதிபதிகள், ஜுரிமார்கள்.

தமது உறுப்பினர்களுக்கு 'தமிழீழ புதிய சட்டவிதிகளை' கற்றுக்கொடுக்க யாழ்ப்பாணத்தில் ஒரு சட்டக் கல்லூரியும் புலிகள் நடத்துகிறார்கள்.

நீதிபதிகள், ஜுரிமார்கள் புலிகள் இயக்க உறுப்பினர்களாக இருக்கவேண்டும். சட்டத்தரணிகள் வெளியாராக



இருக்கலாம். ஆனால் புலிகளது சட்டக் கல்லூரியில் படித்து, பிரபாகரனுக்கும் 'தமிழீழத் திறகும்' விசுவாசமாக சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும். பழைய சட்டப்படிப்பெல்லாம் செல்லாது.

சட்டம் புலிகளின் கையில். தீர்ப்பு புலிகளது இளம் உறுப்பினர்களது கையில். பழுத்தாராய்ந்து தீர்ப்பு வழங்க வயதும், அனுபவமும் .

## தீர்ப்பு யார் கையில்?

'போதுமா' என்ற சந்தேகத்தை புலிகள் அலட்சியம் செய்கிறார்கள். போராடுகிறவர்களே நீதி வழங்கவும் தகுதியானவர்கள் என்பது புலிகளது வாதம். மறுத்துப் பேச யாருக்கும் துணிச்சல் வராது.



புலிகள் சொல்வதே சட்டம். ஏனெனில் அவர்களிடம் ஆயுதம் மட்டுமல்ல அதிகாரமும் இருக்கிறது.



வாரமலர் தினமுரசு

பலகோடி அன்களால் கனவிலும், நினைவிலும் இரசிக்கப்பட்டவர் மர்லின் மன்றோ.

சாதாரண அன்கள் மட்டுமல்ல. அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடியைக்கூட தூக்கம் இழக்கச் செய்த கவர்ச்சித் தூண்டில் மர்லின். கென்னடி மட்டுமல்ல அவரது சகோதரரும் மர்லின் முன் மண்டியிட்டது சுகிசுக் கதை. மர்லின் இன்று இல்லை.

ஆனால் அவரது போதையூட்டும் புகைப்படங்கள் பிரபல விளம்பர நிறுவனங்களுக்கு பண மழை பொழிய உதவுகின்றன.

## இப்பபோதும் நினைத்தபடி




உலகில் மிகச் சிறந்த கவர்ச்சிகரமான ஆண்கள் என்ற பட்டியலில் 'சீன் கொனரியின்' பெயரும் இருக்கிறது. துப்பறியும் ஜேம்ஸ் பொண்டாக ஹொலிவூட்டைக் கலக்கியவர். பெண் இரசிகைகள் அதிகமாக உள்ளவர் தற்போது இந்த ஆண் சிங்கத்திற்கு வயதாகி விட்டது. வயதானாலும் வசீகரம் போகவில்லை. சீன் கொனரிக்குப் பின்னர் ஜேம்ஸ் பொண்டாக நடித்தவர்கள் எவரும் சோபிக்கவில்லை. சீன் கொனரியின் தனித்துவத்திற்கு அதுவே போதுமான சான்று.

## ஆயிரத்தில் ஒருவன்

## வயது சிறிது வசதி பெரிது

ஹொலிவூட் திரையுலகின் குட்டி சூப்பர் ஸ்டார் மெக்காலே குக்கின். இந்த சிறுவனுக்கு சிறியோர் முதல் பெரியோர் வரை இரசிகர்கள். கோடி கோடியாக சம்பாதிக்கிறான் குக்கின்.

அமெரிக்க சிறுவர் சிறுமியர் இவன் என்ன செய்தாலும் தாமும் அதனை பின்பற்றுகின்றனர்.

விழா ஒன்றுக்கு தனது இரண்டு பாதங்களிலும் வெவ்வேறு நிறத்தில் சப்பாத்துக்கள் அணிந்து வந்தான் குக்கின். உடனே அமெரிக்க சிறுவர்களும் வெவ்வேறு நிறத்தில் சப்பாத்து அணியத் தொடங்கிவிட்டனர்.

இனியும் என்ன செய்து காட்டப்போகிறானோ இந்த சிறுவன். பெற்றோர்பாடு திண்டாட்டம்தான்.





இஸ்ரேல் அரச உல்லாசப் பயணிகளை கவர்ந்திழுப்பதில் படு தீவிரமாக இருக்கிறது.

## உல்லாச வியப்பு

படத்தில் கப்பல் போலத் தெரிவது கடலின் மத்தியில் உள்ள உல்லாச விடுதி.

கடலுக்கடியிலும் விடுதியின் ஒரு பகுதி இருக்கிறது. மீன்கள் ஓடித்திரிவதையும் கடலின் குளிர்ச்சியையும் இரசிக்க உல்லாச பயணிகள் விழுந்தடித்துச் செல்கிறார்கள்.